
லின்போது உதவி வழங்கியமை உண்மையே
பக். 6


எரிந்ததில் பங்களாதேஷில் 11 பேர் சாவு
பக். 7


எல்லே சம்பியனானது மனோகரா
பக். 22


நீடிக்குமா இந்தியா ?
பக். 23

இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 28 c
குறைந்த வெப்பநிலை 24 °c
மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 072 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 24, வியாழன் 06.02.2014


06 FEB 2014

# வலி.வடக்கு மக்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர்

## அதுவரை போராட்டங்கள் எதுவும் வேண்டாம் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 06
வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவர் என்றும், அதுவரை அவர்கள் ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ செய்ய வேண்டாம் என்றும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா கேட்டுக்கொண்டுள்ளார்.
வலி.வடக்கு மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களின் தலைவர்களுக்கும், இராணுவத் தளபதிக்கும் இடையில் நேற்று மாலை பலாலி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.


மேஜர் ஜெனரல் உதய பெரேரா

இந்தச் சந்திப்பிலேயே இராணுவத் தளபதி இவ்வாறு கூறியுள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,
வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் தொடர்பில் சரியான புள்ளி விவரங்கள் இல்லை. நீங்கள் ஒரு புள்ளி விவரங்களைக் கொண்டு வருகின்றீர்கள். பிரதேச செயலகம் வேறொரு புள்ளி விவரம் தருகின்றது. மீள்குடியேற்ற அமைச்சு இன்னொரு புள்ளி விவரத்தைத் தருகின்றது. எனவே வலி.வடக்கு மீள் குடியமர்வு தொடர்பில்

21 ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் வயோதிபர் சாவு

வடமராட்சி, பெப்.06
வடமராட்சி நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.
நெல்லியடி கொமர்ஷல் வங்கி அருகிலுள்ள மஞ்சள் கோட்டுக் கடவைக்கு அருகில் நடந்து சென்ற வயோதிபரை ஹைஏஸ் வாகனம் ஒன்று மோதியது.
இதில் வதிரி கரவெட்டியைச் சேர்ந்த பொன்னம்பலம் - தங்கராசா (வயது - 70) என்பவரே உயிரிழந்தவராவார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## இ.போ.ச தனியார் பஸ் பிரச்சினைக்கு நேற்றுத் தீர்வு

யாழ்ப்பாணம், பெப்.06
யாழ்.மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும், தனியார் பஸ் உரிமையாளர்களும் இடையில் கடந்த சில தினங்களாக உக்கிரமடைந்திருந்த பிரச்சினை நேற்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.
இரு தரப்பினரும் இணைந்த நேர அட்டவணையில் சேவையை வழங்குவதற்கு இணங்கியுள்

21 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. சபையின் உதவிச் செயலர் வடக்குக்கு

கொழும்பு, பெப்.06
ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகமும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவி நிர்வாகியும், ஐ.நா. அபிவிருத்தி ஆசிய பசுபிக் பிராந்திய பணியகப் பணிப்பாளருமான் ஹஒலியங் ஸு எதிர்வரும் 9 ஆம் திகதி இலங்கைக்கு வருகிறார். எதிர்வரும் 12 ஆம் திகதிவரை அவர்

21 ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறை பட்ஜெட் மீதான வழக்கு நேற்று ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 06
வல்வெட்டித்துறை நகரசபையின் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சட்டவிரோதமான முறையில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்தும், அதனை வலுவிழக்கச் செய்யுமாறு கோரியும், சபை அங்கத்தவர்களான எதிர் மனுதாரர்கள் வருமானங்கள், செலவீனங்களுடன் தொடர்புபடுவதைத் தடைசெய்யுமாறு கோரியும் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 19 ஆம் திக

21 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை பொதுநலவாயத்தின் அழுத்தம் தேவை

## கமலேஷ் சர்மாவிடம் வலியுறுத்தியது மன்னிப்புச் சபை

லண்டன், பெப்.06
இலங்கையில் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, இது தொடர்பில் பொதுநலவாய அமைப்பு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவிடம் நேரடியாகக் கோரியுள்ளது.
பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவுக்கும், சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் சாலி செட்டிக்கும் இடையில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் முதல் தடவையாகச் சந்திப்பு இடம்பெற்றது. கடந்த திங்கட்கிழமை லண்டனில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.
இந்தச் சந்திப்புத் தொடர்பில்

21 ஆம் பக்கம் பார்க்க

## வெளிப் பிரதேசங்களில் காணாமற்போனவர்கள் குறித்தும் முறையிடலாம்

யாழ்ப்பாணம், பெப்.06
யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் காணமற்போயிருந்தாலும், அவர்களின் உறவினர்கள் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம் எனவும், இதுவரை பதிவு செய்யாதவர்கள் ஆணைக்குழு அமர்வு நடைபெறும் வேளையில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
காணமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதிவரை யாழ்.மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.
இந்த அமர்வுக்கான முன்னாயத்த ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு ஆணைக்குழுவின் செயலாளர் குணதாச தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர். அவர்கள் இது தொடர்பில் கலந்துரையாடல் நடத்தினர்.
இந்தக் கலந்துரையாடலில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட அரச அதிபர்,
ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு எதிர்வரும் 14 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 10 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்காகவும், 15 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரி

21 ஆம் பக்கம் பார்க்க

## சம்பந்தனுக்கு மஹிந்த பிறந்த நாள் வாழ்த்து

### *அவரைச் சந்திக்கவும் விருப்பம்*

*யாழ்ப்பாணம், பெப்.06*
*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் பிறந்த நாளான நேற்று அவருக்கு வாழ்த்துத் தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சம்பந்தன் நாடு திரும்பியதும் அவரைச் சந்திக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.*
*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் 81 ஆவது பிறந்த நாள் நேற்றாகும். மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றுள்ள சம்பந்தனை, தொலைபேசியூடாக நேற்றுக் காலை தொடர்பு கொண்ட ஜனாதிபதி, பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*
*அத்துடன் அவர் நாடு திரும்பியதும் சந்திக்கவேண்டும் என்றும் சம்பந்தனிடம் கூறியுள்ளார்.*
*ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கைக்கு*

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - இந்திய மீனவர் பேச்சு தடம் புரளும் அபாயம்

### *மத்திய அரசுக்கு ஜெயலலிதா எச்சரிக்கை*

சென்னை, பெப்.06
இலங்கையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் இரு நாட்டு மீனவர்கள் மட்டத்திலான பேச்சு நடவடிக்கைகள் தடம் புரளும் சூழ்நிலை ஏற்படும் என்று எச்சரித்துள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதா, இந்தப் பிரச்சினையில் மத்திய

21 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய வீட்டுத் திட்டத்துக்கு எதிராக நேற்றும் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, பெப்.06
இந்திய வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாகத் தெரிவித்து நேற்று மீண்டும் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.
வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து வவுனியா வடக்கு பிரதேச செயலகம் வரை சென்று தமது மனுவை

21 ஆம் பக்கம் பார்க்க


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள்

# அரசால் முடியாவிடின் ஐ.தே.க. தயார் சனல்-4 விடயத்தில் சபையில் சவால்

## நீதிமன்று செல்லும் பொறுப்பை ஒப்படைக்குமாறும் கோரிக்கை

"படையினரால் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதாகப் போலியான தகவல்களை வெளியிட்ட சனல் - 4 இற்கு எதிராக நீதிமன்றம் செல்லத் தயார். அரசால் முடியாவிட்டால் பொறுப்பை எம்மிடம் ஒப்படையுங்கள்" - என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுச் சபையில் தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின் போதே ஐ.தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சரிடம் கேள்வியொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க மேலதிக கேள்வி யொன்றை எழுப்பிய போது,

"இலங்கை தொடர்பான பொய்யான விடயங்களை வெளியிட்ட சனல் - 4 இற்கு எதிராக நீதிமன்றம் செல்லாதது ஏன்? ஏனெனில், சனல் - 4 இற்கு எதிராக நீதிமன்றம் செல்லப் போவதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார். நாட்டுக்கு எதிராக சனல்- 4 அவதூறு செய்து களங்கம் ஏற்படுத்தியிருந்தால் - நாட்டில் பிரச்சினைகளை உருவாக்கியிருந்தால் - அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றிருந்தால் இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

இது அரசு சார்ந்த பிரச்சினை அல்ல. முழு நாடு சார்ந்த தேசிய பிரச்சினை. அரசினால் முடியாவிட்டால் ஒப்படையுங்கள்.



ரவி கருணாநாயக்க

நாங்கள் நீதிமன்றம் செல்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்,

எல்லா விடயங்களுக்கும் நாம் நீதிமன்றம் செல்வது பதிலாக அமையாது. அதைவிட எமது நாட்டுக்குச் சாதகமான பல்வேறு நடவடிக்கைகள் இருக்கின்றன. இது நாடு சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் இதைக் குறுகிய அரசியல் நோக்கம் கொண்டு விமர்சிக் காமல் அனைவரும் இணைந்து தீர்வுகாண முன்வரவேண்டும். அத்துடன் நீதிமன்றம் செல்வதை விடவும் எமது நாட்டைப் பாதுகாக்க வேறு உகந்த நடவடிக்கைகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து பார்த்துத்தான் நாம் செயற்பட்டோம்.

எமது நாட்டைப் பாதுகாக்க எப்படி செயற்படவேண்டும் என்பது பற்றி அரசு என்ற வகையில் நாம் தீர்மானிக்கவேண்டுமே தவிர, வேறுயாருமில்லை - என்று கூறினார்.

இதேவேளை, படையினர் நாட்டை மீட்டுக் கொடுத்துள்ள நிலையில் ஜனாதிபதியின் செயலாளர்லலித் வீரதுங்க அமெரிக்கா சென்று இலங்கை மீதான குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை செய்தால் நாட்டில் குழப்ப நிலையே உருவாகும் என்று கூறியிருப்பதன் மூலம் குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனஎன் ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

இலங்கையில் போர்க்குற்றங்கள் இழைக்கப்படவில்லை என எதிர்க்கட்சியினர் கூறிக்கொண்டிருக்கும் நிலையில், ஜனாதிபதியின் செயலாளரோ குற்றச்சாட்டுகள் இழைக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளும் வகையில் கருத்து வெளியிட்டிருப்பதானது நாட்டுக்கு இழைக்கப்படும் பாரதூரமான அநியாயம் என்றும், இந்நிலையில் எப்படி எதிர்க்கட்சியினரின் ஆதரவைக் கோருவீர்கள் என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பீரிஸ்,

'ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, இலங்கையில் குற்றங்கள் இழைக்கப்பட்டதாக எந்தவொரு கட்டத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்வதுடன், மேற்படி கருத்தானது முற்றிலும் பொய்யானது என்றும் நிராகரித்தார். (சி)

## பாடசாலையை விட்டு விலகியோர் கடந்த ஆண்டில் மிகமிக குறைவு

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டே மிகக் குறைந்தளவிலானோர் பாடசாலையை விட்டுவிலகியுள்ளனர் என யாழ். மாவட்டச் செயலகப் புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு 519 பேர் பாடசாலையை விட்டு இடைவிலகியிருந்த நிலையில் கடந்த ஆண்டு 123 பேரே விலகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் போருக்குப் பின்னர் பாடசாலையை விட்டு இடைவிலகும் சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றது. 2010 ஆம் ஆண்டு 160 பேராகவும், 2011 ஆம் ஆண்டு 349 பேராகவும், 2012 ஆம் ஆண்டு 519 பேராகவும் அது அதிகரித்துச் சென்றிருந்தது.

இந்த நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு 123 பேரே பாடசாலையைவிட்டு இடைவிலகினர் என மாவட்டச் செயலக அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் 5 சிறுவர்களும், வேலணைப் பிரதேசத்தில் 3 சிறுவர்களும், ஊர்காவற்றுறை பிரதேசத்தில் 2 சிறுவர்களும், காரைநகர்ப் பிரதேசத்தில் 12 சிறுவர்களும், யாழ்ப்பாண பிரதேசத்தில் 3 சிறுவர்களும்,

நல்லூர் பிரதேசத்தில் 3 சிறுவர்களும், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 25 சிறுவர்களும், சங்கானைப் பிரதேசத்தில் 7 சிறுவர்களும், உடுவில் பிரதேசத்தில் 21 சிறுவர்களும், தெல்லிப்பழை பிரதேசத்தில் 6 சிறுவர்களும்,

கோப்பாய் பிரதேசத்தில் 12 சிறுவர்களும், சாவகச்சேரிப் பிரதேசத்தில் 5 சிறுவர்களும், கரவெட்டிப் பிரதேசத்தில் ஒரு சிறுவனும், பருத்தித்துறை பிரதேசத்தில் 17 சிறுவர்களும், மருதங்கேணிப் பிரதேசத்தில் ஒரு சிறுவனுமாக 123 பேர் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர்.

இவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியிருந்தாலும், அவர்கள் பாடசாலையை விட்டு விலகியமைக்கான காரணம் கண்டறியப்பட்டு அவர்களை மீளவும் இணைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டதாகவும் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (த-5)

## பெண் அலுவலரின் பணப் பை பறிப்பு

வலி.வடக்கு, பெப். 06

உடுவில் பிரதேச செயலகத்தில் கடமை முடிவடைந்து வெளியேவந்த பெண் அலுவலர் ஒருவரின் பணப்பையை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் துணிகரமான முறையில் பறித்துச் சென்றனர்.

நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பணப்பையில் ஒரு தொகைப் பணம் மற்றும் அடையாள அட்டைகள் அடங்கலான ஆவணங்களும் இருந்துள்ளன.

ஒரு வார காலத்தில் இந்தப் பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது (த-86)

## அமெ.இரட்டை வேடம்

### போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் அரசு கடும் கொதிப்பு

கொழும்பு, பெப்.6

இலங்கை மீதான போர்க் குற்றச் சாட்டுகள் தொடர்பில் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ள அமெரிக்காவின் செயற்பாடுகள் அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலானது என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நேற்று சபையில் தெரிவித்தார்.

இந்திய இராஜதந்திரியான தேவ்யானி, அமெரிக்க அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு சோதனையிடப் பட்ட படங்கள் இணையதளத்தில் வெளியானபோது, அவை போலியானவை எனத் தெரிவித்த அமெரிக்கா, பிரிட்டனின் சனல் - 4 இலங்கை தொடர்பில் படங்களை வெளியிட்ட போது மட்டும் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு செயற்பட்டமையானது அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாட்டை உலகம் அறிந்து கொள்வதற்கான சிறந்த ஆதாரம் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார் அமைச்சர் பீரிஸ்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச ஊடகங்களினால் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் மற்றும் பிரிட்டனின் சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகள், அவை தொடர்பில் இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் ரவி கருணாநாயக்க இதன்போது கேள்வியெழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்,

சனல் - 4 இலங்கைக்கு எதிராக மேற் கொண்ட நடவடிக்கைகள் புதுமையானதொன் றல்ல. இலங்கை தொடர்பில் முக்கிய விடயங்கள் இடம்பெறும் போது ஒவ்வொரு முறையும் அவர்கள் இப்படிச் செய்கின்றார்கள். இது முற்றிலும் அரசியல் நடவடிக்கையே.

இலங்கை அரசு என்ற வகையில் இந்த விடயத்தில் பல்வேறு நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்திருக்கிறோம். சனல் - 4 இற்கு மட்டுமல்லாது, சம்பந்தப்பட்ட பல்வேறு நிறுவனங்களுக்கும் கடிதங்கள், மின்னஞ்சல்களை அனுப்பிவைத்துள்ளோம். அல் ஜசீரா, பி.பி.சி. உள்ளிட்ட செய்திச்சேவை நிறுவனங்களுக்கும் நேர்காணல்கள் மூலம் தேவையானவற்றைத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளோம்எனத் தெரிவித்தார் அமைச்சர் பீரிஸ். (த)

## விடுதலைப் புலிச் சந்தேகநபர் நிரபராதி என நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், பெப்.6

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் யாழ்.மேல் நீதிமன்றினால் நிரபராதியென இனங்கண்டுநேற்று விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்றுஎடுத்துக்கொள்ளப்பட்டது.

வல்வெட்டித்துறையில் 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினராக இருந்து ஆயுதப் பயிற்சி பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார். இவருக்கு எதிராக 2010 ஆம் ஆண்டு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு பின்னர் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. சந்தேக நபரால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டு, நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது குறித்த சந்தேக நபரால் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது விசாரணையின்போது தெரிய வந்தது. அதனால் அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மேல்நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது.

அவருக்கு எதிராக வேறு எந்த ஆதாரமும் இல்லாததனால் அவரை நிரபராதியென இனங்கண்டு வழக்கிலிருந்து விடுதலை செய்தது மன்று. (ஐ-4)



பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவநாதன், பொதுசுகாதார பரிசோதகர்கள் ஆறுமுகதாசன் மற்றும் முரளி ஆகியோர் வைத்தியசாலை உணவகத்தைப் பார்வையிடுகின்றனர். (ஐ-4)

## யாழ்.போதனா வைத்தியசாலை உணவகம் தொடர்ந்தும் சுகாதார சீர்கேடான நிலையில்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். போதனா வைத்தியசாலை உணவகம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்குவதாக நேற்றும் உறுதிப்படுத்தப்பட்டது. சிற்றுண்டி ஒன்றில் சணல் கயிறு இருந்தமை தொடர்பில் நோயாளி ஒருவரால் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போது சுகாதார முறைக்கு ஒவ்வாத உணவு தயாரித்தல், கையாளுதல் போன்ற சம்பவங்கள் நேற்றும் வெளிச்சத்துக்கு வந்தன.

நேற்றைய சோதனைகளின் போது உணவகத்தின் கழிவு நீர் ஓடும் வாய்க்கால் மூடப்படாத நிலையில் இருந்தது. அதன் மேற்பகுதியில் வைத்து தேநீர் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தவிர உணவு தயாரிக்கும் பாத்திரங்களும் கழிவு நீர் ஓடும் மூடப்படாத வாய்க்காலில் வைத்தே கழுவப்படுகிறது என்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

அங்கு 8 பணியாளர்கள் பணிபுரிவதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்ட போதும் அவர்களுள் ஒருவர் மாத்திரமே மருத்துவச் சான் றிதழ் பெற்றுள்ளார் என்றும் அங்கு விற்பனை செய்யப்படும் சிற்றுண்டி வகைகள் யாழ.கச்சேரியை அண்மித்துள்ள வீடு ஒன்றில் வைத்துத் தயாரிக்கப்படுகின்ற போதும் அங்கும் சுகாதார சீர்கேடான நிலையே காணப்படுகிறது என்று அவர்கள் தெரிவித்தனர்.

நுகர்வோர் ஒருவரின் முறைப்பாடு தொடர்பில் பரிசோதனை செய்யுமாறு வைத்தியசாலை பதில் பணிப்பாளர் அறிவித்ததற்கேற்ப திடீர் பரிசோதனை மேற்கொண்டதாக பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதன் தெரிவித்தார்.

இந்தச் சீர்கேடு தொடர்பில் இன்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவருடன் வைத்தியசாலை பொது சுகாதார பரிசோதகர் முரளி மற்றும் யாழ்.நகர பொதுச் சுகாதார பரிசோதகர் ஆறுமுகதாசனும் பரி சோதனையில் ஈடுபட்டனர்.

இந்த உணவகத்தின் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு ஏற்கனவே நீதிமன்றினால் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## அல்லிப்பளை-கிளாலி வீதி மக்கள் பாவனைக்கு

பளை, பெப்.6

பளை, அல்லிப்பளை-கிளாலி வீதி பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

அல்லிப்பளையில் நீண்டகாலமாக இருந்த படை முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டதை அடுத்து வீதி போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புலோப்பளை, அல்லிப் பளைப் பகுதி மக்கள் தமது இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிளாலிக்குச் செல்வதாயின் எழுதுமட்டுவாழ் சந்திக்கு வந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு கிளாலிக்கு பயணிக்க வேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வடக்கில் விளைந்த நெல் முழுவதையும் இங்குள்ள கூ. சங்கங்களே கொள்முதல்

### எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க வடமாகாண அமைச்சு ஏற்பாட்டில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.06

பெரும்போக நெற்செய்கை இந்த முறை வடக்கில் வீழ்ச்சி அடைந்திருப்பதால் எதிர்காலத்தில் அரிசிக்கு இங்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த நெல்லையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு விவசாயிகளுடனும் கூட்டுறவுத் துறையினருடனும் செவ்வாய் கிழமை கலந்துரையாடியது.

யாழ். பொது நூலகத்திலுள்ள வடக்கு மாகாணசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்கள், தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**அரிசித் தட்டுப்பாடு**

"கடந்த 3 வருடங்களாக காலநிலை சீரின்மையால் வடக்கில் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த பெரும் போகத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்ததால் நிலைமை இன்னமும் மோசமடைந்துள்ளது. இதனால் எதிர்காலத்தில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய அபாயம் உள்ளது. எனவே கடந்த போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லினை போதியளவு கொள் வனவு செய்வதன் மூலமே எதிர்காலத்தில் ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டை தவிர்க்க முடியும் " என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

> "கடந்த 3 வருடங்களாக காலநிலை சீரின்மையால் வடக்கில் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.

இங்கு விளைவிக்கப்படும் நெல்லை முழுமையாகக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்த முடியாத தமது இக்கட்டு நிலைமையை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் எடுத்து விளக்கினர்.

**இடர்பாடுகள்**

அதேநேரத்தில் நெல்லை ஒரே நேரத்தில் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி வளமும் தம்மிடம் இல்லை என்பதையும் கூட்டுறவுச் சங்கங்கள் சுட்டிக்காட்டின.

கொள்வனவு செய்யப்படும் நெல்லை அடித்து அரிசியாக்கி விற்பனைக்கு விடுவதற்குப் போதிய ஆலைகள் இல்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

நெல் கொள்வனவுக்குரிய நிதியை மாவட்ட அரச அதிபர்களே உடனடியாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விடுவிப்பது என்று கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. மேலதிக நிதி தேவைப்பட்டால் அதனை வங்கியிலிருந்து பெறுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கொள்முதல் செய்யப்படும் நெல்லை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்காலிகக் களஞ்சியங்களில் சேமிப்பது எனவும் எதிர்காலத்தில் நிரந்தரக் களஞ்சியங்களை இங்கு அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவதுஎன்றும்தீர்மானிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு நியாயமான விலையை வழங்கி நெல்லைக் கொள்வனவு செய்வதற்கும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. வடக்கில் உற்பத்தி செய்யப்பட்ட முழு நெல்லையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து, விற்பனை செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (உ-5)

## கட்டுவன் குரும்பசிட்டி பகுதி வீதிகள் வெளிச்சத்தில்

வலி.வடக்கு,பெப்.6

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச சபைக்கு உட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் உள்ள வீதிகளுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இரவு வேளைகளில் குறித்த பகுதிகளில் உள்ள வீதிகளில் பொது மக்கள் பயணிப்பதில் சிரமங்களுக்கு உள்ளாகி வந்த நிலையில் தற்போது மக்களின் நன்மை கருதி வீதிகளுக்கான மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளமையால் பொது மக்களின் போக்குவரத்து இரவு வேளைகளில் இலகுவாக்கப்பட்டுள்ளது. (வ-86)

## நீர் விநியோகக் குழாய் திருத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் யாழ்.மாநகர சபையின் நீர் விநியோகக் குழாயில் ஒரு மாதத்திற்கு முன்னர் வெடிப்பு ஏற்பட்டது. குழாயின் திருத்த வேலைகள் நேற்று ஆரம்பமாகின.

பிரதான நீர்த் தாங்கிக்கு நீரைக் கொண்டு செல்லும் சேதமுற்ற இதன் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக முதலாம் குறுக்குத் தெரு காப்பெற் வீதி என்பதால் வீதியில் குழி வெட்டுவதற்கான அனுமதியை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரியிருந்தது.

கடந்த திங்கட்கிழமை அதற்கான அனுமதி மாநகரசபைக்கு வழங்கப்பட்டதை அடுத்து தற்போது குறித்த குழாயைத் திருத்தி அமைப்பதற்கான வேலைகளை நீர்விநியோகப் பகுதி துரிதமாக மேற்கொண்டுள்ளது. திருத்த வேலைகள் பூர்த்தியடைய நான்கு தினங்கள் வரை செல்லும் என்றும் எனினும் பொதுமக்களுக்கான நீர்விநியோகம் தடைப்படாத வகையில் பணிகள் இடம்பெறும் எனவும் மாநகர சபை நீர்விநியோகப் பகுதியினர் தெரிவித்தனர். (வ-7)



*குழாய் திருத்தத்துக்காக வீதியில் குழி வெட்டும் பணியில் பணியாளர்கள்*

## சுகாதாரம் பேணாத கடைகளுக்கு எச்சரிக்கை

வலி. வடக்கு, பெப் .6

சண்டிலிப்பாய் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடந்த வாரம் இடம் பெற்ற திடீர் சோதனை நடவடிக்கையின் போது சுகாதா ரச் சீர்கேடான முறையில் இயங் கியதாக 13 வர்த்தக நிலையங் கள் இனங்காணப்பட்டன.

சுண்டிலிப்பாய் பிரதேச செயலா ளர் பிரிவில் இனங்காணப்பட்ட குறிப்பிட்ட வர்த்தக நிலையங்கள் சுகாதார வைத்தியதிகாரி தலைமையிலான குழுவால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் காணப்பட்ட சுகாதார குறைபாடுகளை இரண்டு வார காலத்தில் நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## சாவகச்சேரி பஸ் நிலைய ரீ.வி. யின் சேவை நிறுத்தம்

தென்மராட்சி, பெப்.6

சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் கடந்த ஓகஸ்ட் ம்மாதம் பொருத்தப்பட்டிருந்த பெரிய தொலைக்காட்சி சேவை நேற்று தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது.

இது மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் பொருத்தப்பட்டு தினமும் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இதற்குப் படையினர் பொறுப்பாக இருந்தனர்.

அரசின் செயற்பாடுகளை விவரிக்கும் ஒளிப்பதிவு காட்சிகள் ஒளிபரப்பப்பட்டு வந்த 6 அடி நீளமான தொலைக்காட்சி அகற்றப்பட்டு அதன் இணைப்புகளும் அகற்றப்பட்டுள்ளன. (வ-9)

## மின் வெட்டை ஏற்படுத்திய அணில்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்.நகருக்கான மின்விநியோகம் நேற்றுக் காலை இரு மணி நேரம் தடைப்பட்டது. உயர் அழுத்த மின் இணைப்பில் அணில் ஒன்று சிக்கியதால், மின் இணைப்பு வெடித்துச் சிதறி மின் தடை ஏற்பட்டது.நாவலர் வீதியும் கஸ்தூரியார் வீதியும் சந்திக்கும் இடத்திலுள்ள மின்கம்பத்திலேயே இந்த இடர் நிகழ்ந்தது. நாவலர் வீதியினூடாகச் செல்லும் 11 ஆயிரம் வோல்ட் மின் உயர் அழுத்த கம்பியில் சென்ற அணிலின் வால்பகுதி, குறித்த இணைப்பை தாங்கி நிற்கும் மாபிளின் கம்பியுடன் தொடுகையுற்றதாலேயே இந்த இடர் ஏற்பட்டதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மிகப்பெரிய சத்தத்துடன் குறித்த மாபிள் வெடித்துச் சிதறியதுடன், உயர் மின் அழுத்த கம்பியும் அறுந்து வீழ்ந் தது. அத்துடன் வீதியிலுள்ள வீதி விளக்குகளும் கருகி வெடித் துச் சிதறி. ஒரு சில செக்கனில் இந்த இடர் நிகழ்ந்தது.

உடனடியாக இலங்கை மின்சார சபைக்கு அந்தப் பகுதியிலுள்ளவர்களால் தகவல் வழங்கப்பட்டது. அதனை அடுத்து சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து குடாநாட்டுக்கு மேற்கொள்ளப்படும் முழுமையான மின் விநியோகமும் உடனடியாகவே தடை செய்யப்பட்டது. கம்பிகள் அறுந்து வீழ்ந்திருந்தாலும் மின்சாரம் தடைப்பட்டமையால் உயிர் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. சிறிது நேரத்தில் குறித்த பகுதிக்கான மின்சாரம் மட்டும் தடை செய்யப்பட்டு குடாநாட்டுக்கான மின் விநியோகம்வழமைக்குத்திரும்பியது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த மின்சாரசபை ஊழியர்கள், அறுந்த இணைப்பை அகற்றி மின்விநியோகத்தை சீராக்கும் நடவடிக் கையில் ஈடுபட்டனர். இரு மணிநேரத்தின் பின்னர் நகருக்கான மின்சார விநி யோகம் வழமைக்குத்திரும்பியது. (வ-5)

## நூலக சேவை நேரம் நீடிப்பு

நெல்லியடி பொது நூலகம் வாசகர் நன்மை கருதி மாலை 6 மணி வரை இயங்க வைக்க கரவெட்டிப் பிரதேச சபை அனுமதி அளித்துள்ளது.

பொது நூலகத்தை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இயங்கவைக்கவேண்டும்என்று கரவெட்டிப் பிரதேச சபை நெல்லியடி உப அலுவலகப் பொறுப்பதிகாரி கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார். (வ-173)

## உரிய மருத்துவக் கவனிப்பின்றி இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தாரா?

யாழ்ப்பாணம், பெப் 6

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தார்.அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கல்வியங்காட்டைச் சேர்ந்தவரும் தற்போது குப்பிளானில் வசித்து வந்தவருமான செல்வானந்தம் லீயால்பிரசாத் (வயது - 33) என்பவரே உயிரிழந்தவராவார். வைத்தியசாலைக்குச் சென்ற மல்லாகம் நீதிவான் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உரிய மருத்துவக் கவனிப்பு இல்லாததனாலேயே அவர் உயிரிழந்ததாக அவரது தந்தையார் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

காய்ச்சல் மற்றும் சளி அடைப்புக் காரணமாக அவரை நேற்று முன்தினம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்ப்பித்தோம்.நேற்றுக் காலை அவர் சுவாசிக்க முடியாமல் அந்தரப்பட்டார்.அது தொடர்பில் அங்கு நின்றிருந்த தாதி ஒருவரிடம் தெரிவித்து ஒட்சிசன் வழங்குமாறு கோரினோம்.அது பற்றித் தமக்குத் தெரியும் என்று அவர் கூறினார்.சற்று நேரத்தின் பின்னர் அவரது நிலைமை மேலும் மோசமடைந்தது. அதன் பின்னரே அந்தத் தாதி ஓடிவந்து ஒட்சிசன் வழங்கினார். எனினும் அவர் உயிரிழந்துவிட்டார்.அவர் திருமணம் செய்து 6 மாதங்களாகின்றன - என்றார் உயிரிழந்தவரின் தந்தையான செல்வானந்தம். (த-4)

## வடக்கு மாகாணத்தில் அதிக நெற்செய்கை கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், பெப்.6

வடமாகாணத்தில் அதிக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டமாக கிளிநொச்சி விளங்குகிறது.

தற்போது சராசரியாக 58 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

அந்தளவுக்கு கிளிநொச்சி மாவட்டம் நெற்பயிர்ச் செய்கையில் முக்கியமான மாவட்டமாகத் திகழ்கிறது.

கடந்த காலங்களில் 63 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கையைக் கொண்ட மாவட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடமாகாணத்தில் நெற் செய்கைக்கு பிரதான மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தைக் குறிப்பிடலாம். ஏனெனில் இங்கு நீர்ப்பாசனம் கிடைக்கப்பெறுவதால் கூடுதலாக விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் 63 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் போர்க் காலச் சூழலின் பின்னர் தற்போது சராசரியாக 58 ஆயிரம் ஹெக்ரேயரில் நெற் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த வருடம் உற்பத்தியின் போது மழை கிடைக்காத பாதிப்பு ஒரு புறம். அறுவடையின்போது மழை பெய்தமையால் ஏற்பட்ட பாதிப்பு ஒரு புறம். இதன் காரணமாக எதிர்பார்த்த உற்பத்தியில் இருந்து 50 வீதமான உற்பத்தியே எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு ஹெக்ரேயரில் சராசரியாக 3.5 மெற்றிக் தொன் விளைச்சல் கிடைக்கப்பெறும். இந்த வருடம் அவ்வாறான உற்பத்தியை எதிர்பார்க்க முடியாது என்றும் தெரிவித்தார். (வ-14)

# உதவி மருத்துவ உத்தியோகத்தர்களை மருத்துவர்களாகப் பதியத் திட்டமிடுக

*மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்று உத்தரவு*

உதவி மருத்துவ உத்தியோகத்தர்களை மருத்து வர்களாகப் பதிவுசெய்வதற்கான முன்னேற்பாடாக அவர்களுக்கு 3 வருடப் பயிற்சியை வழங்குவதற்கான திட்டமிடலுடன் வருகை தருமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு உயர் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

உதவி மருத்துவ உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினர் தாம் வைத்தியராகப் பணி புரிவதற்கு அனுமதி வழங்குமாறு கோரி உயர்நீதி மன்றில் தாக்கல் செய்து சுமார் 10 வருடங்களாக இழுபறியில் இருக்கும் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தாம் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதனால் பயிற்சியை விடுத்து வைத்தியராகப் பணிபுரிய அனுமதி வழங்குமாறு அவர்கள் கோரியுள்ள னர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது. இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜீ.சீ.ஈ. சாதா ரண தரத்தில் 6 பாடங்கள் சித்தியுடனும் 1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜீ.சீ.ஈ உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தியுடனும் உதவி மருத்துவ உத்தியோகத்தர்களாகப் பலர் உள் வாங்கப்பட்டனர். களுத்துறை சுகாதாரப் பாடசாலையில் பயிற்சி பெற்ற பின்னர் அவர்கள் சுகாதாரத் துறையில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் அவர்களில் சுமார் 50 பேர் தாம் ரஷ்யாவுக்குச் சென்று படித்து வைத்திய கலாநிதிப் பட்டம் பெறவுள்ளதாகக் கூறி சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ரஷ்யாவுக்குச் சென்றி ருந்தனர். 3 வருடங்களின் பின்னர் அவர்கள் இலங்கை மருத்துவ சபைக்குச் சென்று தம்மை வைத்தியராகப் பதிவு செய்யுமாறு கோரியிருந்தனர். இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்தால் மாத்திரமே இலங்கையில் வைத்தியராகப் பணிபுரிய முடியும்.

சபையினர் அவர்களின் பட்டச் சான்றிதழைப் பரிசோதித்த பின்னர் அவர்களின் கடவுச் சீட்டைப் பெற்றுப் பரிசீலித்துள்ளனர். அதன் போது அவர்கள் 6 மாதங்களே வெளிநாட்டில் இருந் தமை தெரிய வந்தது. குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அது தொடர்பில் சபையி னரால் முறைப்பாடு செய்யப்பட்டது. குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையின் மூலமாக அவர்கள் சமர்ப்பித்த சான்றிதழ் போலியானது என்பது தெரிய வந்தது. அது தொடர்பில் அவர்களிடம் விசாரித்த போது குருநாகலில் உள்ள ரஷ்யக் கல்வி நிலையத்தின் கிளையில் பயின்றதாகக் கூறி முகவரியும் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த முகவ ரியை விசாரித்த போது அது ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் என்பது தெரிய வந்தது.

எனினும் அவர்கள் இறுதியாக இந்த வழக் கின் போது அவர்கள் இங்குள்ள பல்கலைக் கழகங்களில் 6 வருடப் பயிற்சியை மேற்கொள்ளுமாறும் அதன் பின்னர் உரிய ஏற்பாடுகளை மேற்கொள் ளவும் உயர் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

எனினும் தாம் முன்னர் குறிப்பிட்டதன்படி கற்றலைத் தொடர முடியவில்லை. அதனால் நேரடியாகத் தம்மை மருத்துவ சபையில் பதிவு செய்தல் வேண்டும் என்று மனுதாரர்கள் கோரியுள்ள னர். அதனால் 6 வருடங்களி லிருந்து 3 வருடங்களாகக் குறைத்துப் பயிற்சியை மேற்கொள்வது தொடர்பில் மன்று வினவியது.

அதற்கு மருத்துவக் கல்வியின் தராதரத்தைக் குறைக்க முடியாது என்றும் அவ்வாறிருக்கப் பயிற்சிக் காலத்தைக் குறைப்பது சாத்தியமல்ல என்றும் இலங்கை மருத்துவ சபை மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்பன நேற்று மன்றில் தெரிவித்திருந்தன. (த-4)

## அதிபரின் வீட்டில் திருட்டு

உசனில் உள்ள பாடசாலை அதிபரின் அலுவலகத்துக்குள் நுழைந்த திருடர்களால் அங்கிருந்த 4 ஆயிரத்து 700 ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாகவும், மந்துவில் பகுதி தோட்டக் கிணற்றில் வைக்கப்பட்டிருந்த நீரிறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளதாகவும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் சாவகச்சேரிநீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (வ-9)


### வாடகைக்கு

பகுதி வீடு அல்லது அறைகள் பல்கலைக் கழக மாணவர்களுக்கு திருநெல்வேலி பட்டநாதர் வீதியில்

077 0618898


## மரண அறிவித்தல்



### பத்மநாதன் கமலேஸ்வரி

புங்குடுதீவு 8 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் கமலேஸ்வரி நேற்று (05.02.2014) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு மற்றும் யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகசபை தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், பத்மநாதனின் அன்பு மனைவியும், ஜீவறஞ்சன், சரளா ஆகியோரின் அன்பு தாயாரும் துவாரகா, ஸ்டாலின் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆரணா, அனோஜன் பானுஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் முத்துலிங்கம், இராசலிங்கம், விமலாதேவி, காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் ஜெயராசிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னலட்சுமி, இராமநாதன், பரமநாதன், பேரின்பநாதன், பாக்கியலெட்சுமி, சரஸ்வதி,இராசலட்சுமி, புஸ்பவதி, தேவிகாராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 06.02.2014 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாமன்டா மளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

8, ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனை 07.02.2014 வெள்ளிக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நடைபெற உள்ளது. ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மலர் வெளியீட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆறுமுகம் கந்தையா துரைசிங்கம்

அன்னை மடியில் 24.12.1936 — இறைவன் அடியில் 07.01.2014

சிவன் கோயிலடி,
ஆவரங்கால்

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### DR. செல்லப்பா சுந்தரலிங்கம்

(சித்த ஆயுள் வேத வைத்தியர் நல்லூர் அரியாலை)
பூரணா டிஸ்பென்சரி கண்டி றோட், அரியாலை நல்லூர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும கனடாவில் மார்க்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சுந்தரலிங்கம் கடந்த (28.01.2014) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் செல்லப்பா - வைத் தியர் பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகராசா-தையலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வைத்தியர் சுகிர்தராணியின் ஆருயிர்க் கணவரும், சுரேந்திரன் (ஜேர்மனி), சுகந்தினி (கன டா), Dr. சுரஞ்சன் (இலங்கை), சுபார்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வக்சலா (ஜேர்மனி), சிவகுமார் (கனடா), மௌனவறா (இலங்கை), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற வல்லிபுரம் (ஆயுள் வேத வைத்தியர்), காலஞ்சென்ற சண்முகநாதன் (AIRFORCE திருகோணமலை), இராசலட்சுமி (SWISS), தங்கமணி (இல ங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுஜீவன், சுகேசன், வர்சனா, மதுசன், பிரனீத், பிரனீத்தா, அனோஜன், ஆரூஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், உதயகுமார், யோகராணி, செல்வராணி, ராஜகுமார் (ஜேர்மனி), லலிதாராணி, நவகுமார், வனிதாராணி, விஜயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு 1591, ELGIN MILLS ROAD EAST, RIHMOND HILL, ONTARIO L4S 1M9, CANADA என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, ராணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(44342)
(10.14)

தகவல் : மகன்.
071 4857222

## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி . நல்லதம்பி தங்கரத்தினம்

தோற்றம் 02.06.1933 — மறைவு 18.01.2013



திதி 06.02.2014

உருவம் மறைந்தாலும்
உள்ளம் மறையாது
எம் உள்ளப் பூக்களால்
உம் திருவடியை
பூசிக்கிறோம்

கே.கே.எஸ்.வீதி,
இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி

### சிவபாக்கியம் பிள்ளையான்

அன்னை மடியில் 24.09.1942 — ஆண்டவன் அடியில் 08.01.2014

கடந்த 08.01.2014 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சிவபாக்கியம் பிள்ளையான் அவர்களது இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு எமக்கு நேரடியாகவும் தொலைபேசி, மின்னஞ்சல், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலமாகவும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய உறவினர்கள், நண் பர்கள், அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றோம். அத்துடன் அன்னாரின் அந்தியேட்டி சபிண்டிகரணக் கிரியைகள் நாளை (07.02. 2014) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அஸ்தியானது கீரிமலை புனித தீர்த்தத்தில் கலக்கப்படும். அத்துடன் அன்றைய தினம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் கருணாகரன்

(செயலாளர், வசாவிளான் கிழக்கு, விவசாய சம்மேளனம்)

வசாவிளான் கோணாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கருணாகரன் நேற்று (05.02.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - இலக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், இரத்தினம் -தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சறோசாதேவி யின் அன்புக் கணவரும், சயந்தன், கயந்தன், பானுஜன், நிசானி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசதுரை, மகாராசா (கனடா), பவானி (கனடா) ஆகி யோரின் அன்புச் சகோதரனும், நவரத்தினம்மா, மணிமேகலை (கனடா), கமலராசா (கனடா), வரதராசா, தயாபரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சியாமளா, மதிசியாமளன் (கனடா), ஜெசிமளா (பிரான்ஸ்), லவசியாமளன் , வின்சிகா, விதுஸா, விதுசன், கார்த்திகா (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஜீவராசா, விஜயசீலன் (பிரான்ஸ்), றொபேக்கா, சௌமியா, வினோச், ஜெனனி, ஜெனார்த்தனன், டிசானி, சோபிதா, டினுசிகா ஆகியோரின் அன்பு மாமனும், லகீசா, யதுசா, அனுசா, கனிக்கதிர், பகர்கதிர், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக செங்கொடி சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டு பி.ப. ஒரு மணியளவில் குட்டியப்புலம் பிள்ளையான்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவிணர், நண்பர்கள் அணைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோணாவளை,
வசாவிளான்.


தகவல் :
குடும்பத்தினர்.

## மலசலகூட சீர்கேடு அதிகாரிகள் கவனத்துக்கு

வலி. வடக்கு, பெப் .6
சங்கானை பிரதேச சபைக்குச் சொந்தமான சங்கானை சந்தையில் உள்ள மலசல கூடம் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாக சங்கானை நகர வர்த்தகர்கள் மற்றும் சந்தை வியாபாரிகளும் சுகாதார வைத்திய அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த மலசல கூடம் உரிய முறையில் துப்புரவு செய்யப்பட்டு பராமரிக்கப்படாமையால் துர் நாற்றம் வீசுவதாகவும், அத்துடன் அதனை பொது மக்கள் பயன்படுத்துவதிலும் தடங்கல்கள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்து சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ரி.மோகனகுமார், வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டதை அடுத்து உடனடியாக குறிப்பிட்ட மலசல கூடங்களை உரியமுறையில்துப்புரவுசெய்து பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)



சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள சங்கத்தானை ரயில் நிலையத் துக்கான மேடை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. சங்கத்தானைக்கான ரயில் நிலையம் அமைக்கப்படாத நிலையில் மேடை அமைக்கப்பட்டு வருகிறது. (வ-9)

## மாணவரிடையே மீண்டும் பாரம்பரிய விளையாட்டுக்கள்

தென்மராட்சி, பெப்.6
தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களை மீண்டும் மாணவர்கள் மத்தியில் உருவாக்கும் நிலையை மாகாணக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

விளையாட்டுக்களில் ஓர் அங்கமான கிளித்தட்டு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாணவர்களுக்கு இடையிலான போட்டியாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார். (வ-9)

# எட்டுக் கடைகள் இயங்கத் தடை

### சுகாதாரம் பேணாததால்

யாழ்ப்பாணம், பெப். 6
நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையில் சுகாதாரச்சீர் கேடான முறையில் இயங்கி வந்ததாக இனங்காணப்பட்ட 8 கடைகளை தற்காலிகமாக மூடுமாறு யாழ் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

இது குறித்து நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் த.மதனகுமார் தெரிவித்ததாவது:-
கடந்த வருடம் பெப்ரவரி 31 மற்றும் ஜனவரி முதலாம் திகதிகளில் நல்லூர் சுகாதார பிரிவுக்கு உட்பட்ட உணவகங்கள், பேக்கரிகள், வீதியோர விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் இடங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி த.திரிபுவனசுந்தரி தலைமையில் நடைபெற்ற இந்தசோதனை நடவடிக்கையில் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்காத வகையில் செயற்பட்ட இடங்கள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்படி நல்லூர்ப் பகுதியில் 10 கடைகளுக்கு ரூபா 1 லட்சத்து 8500 , கோண் டாவில் பகுதியில் 6 கடைகளுக்கு 50 ஆயிரம் ரூபா, கொக்குவில் பகுதியில் 8 கடைகளுக்கு 55 ஆயிரம் ரூபாவும் தண்டப் பணமாக அறவிடப்பட்டது.

புதன்கிழமை யாழ் நீதவான் நீதிமன்றில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சுகாதாரம் பேணாத எட்டுக் கடைகளை தற்காலிகமாக மூடுமாறு நீதிபதி சிவகுமார் உத்தர விட்டார். (வ-10)



வீதியின் மத்தியில் பரவப்புட்ட கற்கள்

## வீதியின் மத்தியில் கற்கள் பயணிப்போர் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.6
நெடுந்தீவில் குழாய் நீர் விநியோகத்துக்கென நிலத்தின் கீழ் விநியோகக் குழாய் பொருத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

குழாய்கள் புதைப்பதற்கென வெட்டப்பட்ட குழிகளில் இருந்து எடுக்கப்பட்ட பெரும் கற்களை தகுந்த முறையில் போடாது வீதியின் மத்தியில் போட்டுள்ளதனால் வாகனப் போக்குவரத்து செய்வோர் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

நெடுந்தீவு கிழக்கு முருகன் ஆலடி வீதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை வீதியில் கற்கள் கிடப்பதைக் காண முடிகிறது.

குழிகளை வெட்டியவர்களும் சரி அதற்குப் பொறுப்பாக இருந்தவர்களும் சரி பொறுப்புடன் செயற்படாது போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடிய வகையில் இவ்வாறு செயற்பட்டுள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-7)

## வெட்டப்படும் பயன்தரு மரங்கள்

### மின் இணைப்புக்காக

யாழ்ப்பாணம், பெப்.6
நெடுந்தீவில் இடம்பெறும் மின்னிணைப்பு நடவடிக்கைகளை அடுத்து வீதியோரங்களில் காணப்படும் மரங்கள் முழுமையாகத் தறித்து வீழ்த்தப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின் வயர்கள் பொருத்தக் கூடியதாக தேவையான மரக் கிளைகளை வெட்டக் கூடிய நிலை இருந்தும் மரங்களை பயன்பாட்டுக்கு எடுக்கக் கூட முடியாத நிலையில் தறித்து வீழ்த்தப்படுகின்றன.

வீதியோரங்களில் நிழலுக்கென வைக்கப்பட்டு வளர்ந்து வரும் மரங்களைக் கூட விட்டு வைக்காது வெட்டிச் சாய்த்துள்ளதாக மின்சார சபை ஊழியர்கள் மீது மக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

வெட்டப்பட்ட மரக் கிளைகளும் கடந்த ஒரு வாரமாக வீதியில் காணப்படுகின்றன.

அவற்றைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளும் இடம் பெறாத நிலையில் வாகனங்கள் பயணிக்கும் போதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (வ-7)



தார் ஊற்றிப் புனரமைக்க வேண்டியுள்ள நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் ஆலய வீதி திருத்த வேலைக்கு கோளான் கல்லுக்குப் பதிலாக முருகைக் கற்களைப் பயன்படுத்தவுள்ளதாகத் தெரிகின்றது. வீதியில் முருகைக் கற்கள் குவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (வ-7)

## புனரமைக்கப்படுமா நவாலி பிரசாத் சந்தை?

நவாலி பிரசாத் சந்தையில் மழை காலங்களில் வியாபாரிகள் விற்பன்னை நடவடிக்கையில் ஈடுபட முடியாது சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறித்த சந்தையின் கூரை ஓடுகள் உடைந்து சிதைவடைந்த நிலையிலுள்ளதால் சாதாரணமாக மழை பெய்தாலும் உள்ளே மழை தண்ணீர் ஓடிச் செல்கின்றது. இதனால் அங்குள்ள வியாபாரிகள் நனைந்தவாறும் மரக்கறி மற்றும் மீன்வகைகளும்நனைந்த நிலையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

**அதிக மழை பெய்தவுடன் வீதியால் செல் லும் வெள் ளம் பெருக்கெடுத்து சந்தையின் உள்ளே புகுவதால் பொது மக்கள் உட் பட சகலரும் பெரிதும் பாதிக் கப்படுகின்றனர்.**

இதனால் பல லட்சம் ரூபா பணம் கட்டி சந்தைக் குத்தகை எடுத்து அதனை நிர்வகிப் போருக்கும் வியாபாரிகளுக்கும் இடையே அடிக்கடி வாய்த் தர்க்கம் ஏற்படுகின்றது. இது குறித்து மானிப்பாய் பிரதேச சபையுடன் குத்தகைக்காரர் பல தடவை தொடர்பு கொண்டு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனைவிட அதிக மழை பெய்தவுடன் வீதியால் செல்லும் வெள்ளம் பெருக்கெடுத்து சந்தையின் உள்ளே புகுவதால் பொதுமக்கள் உட்பட சகலரும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனை உடன் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-100)

## யாழ் -மாநகர சபையால் மேலும் ஒரு பஸ் சேவையில்

வடமராட்சி, பெப்.6
யாழ்.மாநகர சபையில் பணியாற்றும் வடமராட்சி, வலிகாமம் கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர் களின் வசதி கருதி மேலும் ஒரு பஸ் யாழ்.மாநகர சபை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

கடந்த சில வருடங்களாக உத்தியோகத்தர்களின் போக்குவரத்துக்காக பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி, உடுப்பிட்டி, தொண்டமானாறு, அச்சுவேலி ஊடாக யாழ்.மாநகர சபை வரையான இருவழிப் பாதையில் சேவையில் பஸ் ஒன்றே ஈடுபடுத்தப்பட்டு வந்தது.

இந்த ஆண்டு முதல் யாழ்.மாநகர சபையில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால்மேலும் ஒரு பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்த வேண்டி இருந்தது.

அதனை அடுத்து இரண்டாவது பஸ் வல்வெட்டித்துறையில் இருந்து உடுப்பிட்டி தொண்டமானாறு, அச்சுவேலி ஊடாகவும், முதலாவது பஸ் பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி , வல்லை, ஆவரங்கால் ஊடாகவும் யாழ். மாநகர சபை வரை இருவழிப் பாதைகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இரு பஸ்கள் சேவையில் ஈடுபடுவதால் யாழ்.மாநகர சபை உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குப் பணிகளுக்குச் சென்று திரும்பக் கூடியதாகவுள்ளது.

இந்தச் சேவைகளுக்கு இந்திய அரசு யாழ்.மாநகர சபைக்கு அன்பளிப்புச் செய்த பஸ்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. (வ-173)

# தெலுங்கானா விவகாரத்தால் கொந்தளிக்கின்றது புதுடில்லி

### ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் கடும் மோதல்

புதுடில்லி, பெப்.6
இந்தியத் தலைநகர் புதுடில்லியில் தெலுங்கானா ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் ஏற்பட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆந்திராவைப் பிரித்து தனித் தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்குக் கடும் எதிர்ப்புகள் வலுப்பெற்று வருகின்றன. நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தெலுங்கானா தொடர்பான சட்டத்திருத்தம் கொண்டுவரப் படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று சீமாந்திரா பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். அதையடுத்து நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்தநிலையில் புதுடில்லியில் உள்ள ஆந்திர பவனுக்கு முன்பாக தெலுங்கானா ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்திற்குள்ளேயே இரு தரப்பினரிடையேயும் மோதல்கள் ஏற்பட்டன. அதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. அதையடுத்து அங்கு பெருந்தொகையான பொலிஸார் குவிக்கப்பட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட அனைவரும் விரட்டியடிக்கப்பட்டனர்.


ஆந்திர பவனுக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபடும் தெலுங்கானா எதிர்ப்பாளர்கள்

இந்தப் போராட்டங்களால் புதுடில்லியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. நகரின் அனைத்துப் பகுதிகளிலும் மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று புதுடில்லி பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ற)

# நாடாளுமன்றக் கூட்டம் பயனற்றதாகவே முடியும்

### நிதியமைச்சர் சிதம்பரம் கூறுகிறார்

புதுடில்லி, பெப்.6
நடைபெற்றுவரும் 15ஆவது நாடாளுமன்ற இறுதிக் கூட்டத் தொடரில் எந்த சட்டத் திருத்தங்களும் நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை என்று சந்தேகம் வெளியிட்டுள்ளார் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய நாடாளுமன்ற கூட்டத் தொடரில் எந்தச் சட்டத் திருத்தங்களும் நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை. சட்டத் திருத்தங்களை நிறைவேற்ற முடியாதவாறு எதிர்க்கட்சிகள் குழப்பங்களை ஏற்படுத்தக் கூடும் என்றே நான் எதிர்பார்க்கின்றேன்" - என்று தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் தெலுங்கானா மாநிலம் குறித்த சட்டத்திருத்தம் நிறைவேற்றப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதிபடத் தெரிவித்துள்ள நிலையிலேயே சிதம்பரம் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். (ற)

## ஆம் ஆத்மிக்கான ஆதரவை திரும்பப் பெற்றார் பின்னி

புதுடில்லி, பெப்.6
ஆம் ஆத்மி கட்சியில் இருந்து நீக்கப்பட்ட வினோத்குமார் பின்னி அர்விந்த் கெஜ்ரிவால் தலைமையிலான புதுடில்லி அரசுக்கான ஆதரவை திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

"இதுதொடர்பாக துணை நிலை ஆளுநர் நஜீப் ஜங்கிற்கு கடிதம் எழுதியுள்ளேன். ஆயினும் டில்லி சட்ட சபையில் தாக்கல் செய்யப்படவுள்ள ஜன் லோக்பால் சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற ஆதரவளிப்பேன். ஊழல் அரசியல்வாதிகளைக் காட்டிலும் அர்விந்த் கெஜ்ரிவால் ஆபத்தானவர். பொய்களைக் கூறி நாட்டு மக்களை அவர் ஏமாற்றுகின்றார். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி விட்டார் கெஜ்ரிவால்."என்றுதெரிவித்துள்ளார். (ற)

# பொற்கோவில் தாக்குதலின்போது உதவி வழங்கியமை உண்மையே

### பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஒப்புதல்

லண்டன், பெப்.6
பஞ்சாப் பொற்கோவில் தாக்குதல் விவகாரத்தில் இந்தியாவுக்கு தமது நாடு உதவியது உண்மைதான் என்று தெரிவித்துள்ளார் பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹேக்.

1984ஆம் ஆண்டு சீக்கிய பொற்கோவில் தாக்குதலில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, பிரிட்டன் பிரதமர் மார்க்ரெட் தாட்சரின் உதவியை நாடினார் என்ற தகவல் அண்மையில் வெளியாகிப் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருந்தது. அதையடுத்து அந்தத் தகவல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உத்தரவிட்டிருந்தார்.


தாக்குதலுக்கு இலக்கான நிலையில் பொற்கோயிலின் முற்புறத் தோற்றம்

அதுகுறித்து தற்போது கருத்துத் தெரிவித்துள்ள பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹேக், "பொற்கோவில் தாக்குதல் விவகாரத்தில் இந்திய அரசுக்குப் பிரிட்டன் உதவியமை தொடர்பான தகவல்கள் உண்மைதான். அந்த உதவிகள் இராணு ரீதியிலானது அல்ல. பொற்கோவில் மீதான தாக்குதல் நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னதான திட்டமிடலின் போது ஆலோசனைகளே வழங்கப்பட்டன. தாக்குதலுக்கும்பிரிட்டனுக்கும் எந்தவித நேரடித் தொடர்புகளும் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

'ஒப்ரேஷன் ப்ளு ஸ்டார்' என்று பெயரிடப்பட்ட அந்த இராணுவத் தாக்குதலில் சுமார் 400 சீக்கியர்கள் உயிரிழந்தனர். (ற)

# நிறைபோதையில் நிர்வாண 'போஸ்'

### ஊரார் கொடுத்தனர் தர்ம அடி



சென்னை, பெப்.6
தானேவில் பெண் ஒருவரை வழிமறித்து நிர்வாணமாகப் 'போஸ்' கொடுத்த ஒருவரை ஊர் மக்கள் பிடித்து நையப் புடைத்துள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலம் தானே மாவட்டத்தில் உள்ள நாலச் சோப்ராவைச் சேர்ந்தவர் சச்சினாம் சவுகான் வர்மா. இவருக்குக் குடிப்பழக்கம் உண்டு. அவர் குடிபோதையில் வந்த போது பாரத் பென்தாரி பகுதியில் நடந்து சென்ற பெண் ஒருவரை வழிமறித்தார். குடிபோதையில் ஒருவர் வழிமறித்த அதிர்ச்சியில் இருந்து அந்தப் பெண் மீளமுன், மளமளவென தனது ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக 'போஸ்' கொடுத்துள்ளார் வர்மா. வர்மாவின் இந்தச் செய்கையால் பேரதிர்ச்சி அடைந்த அந்த பெண் கூச்சலிட்டார். அவரது சத்தம் கேட்டு வந்த ஊரவர்கள் வர்மாவை நையப்புடைத்தனர். ஊரவர்களின் தாக்குதலில் தப்புவதற்கு அந்தக் கோலத்திலேயே ஊர் முழுக்க ஓடித் திரிந்துள்ளார் வர்மா. ஆனால் ஊரவர்களும் அவரை விடவில்லை. துரத்தித் துரத்தி கற்கள் கொண்டு தாக்கினர். இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து வர்மாவை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த சம்பவம் பற்றி பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ற)

# கனிமொழியைக் காப்பாற்ற ஆவணங்களில் மாற்றங்கள்; '2ஜி' முறைகேடு தொடர்பாக வெளியாகும் புதிய தகவல்கள்

### ஆதாரங்களோடு போட்டுடைக்கின்றது ஆம் ஆத்மி கட்சி

புதுடில்லி, பெப்.6
'2ஜி' அலைவரிசை முறைகேடுகளில் இருந்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியைக் காப்பாற்றுவதற்காக ஆவணங்களில் முறைகேடு செய்யப்பட்டது. இந்த ஊழல் கருணாநிதிக்கும் தெரிந்தே நடந்துள்ளது. - என்று குற்றஞ்சாட்டியுள்ள ஆம் ஆத்மி கட்சி அது தொடர்பான உரையாடல் பதிவு ஆதாரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

**நாடாளுமன்ற தேர்தல் நெருங்கும் சமயத்தில் ஆம் ஆத்மி கட்சி வெளியிட்டுள்ள இந்த ஆதாரங்கள் தி.மு.க.வுக்கு எதிர் வரும் நாள்களில் சிக்கலை ஏற்படுத்தும்.**

#### 200 கோடி லஞ்சம்

கலைஞர் தொலைக்காட்சிக்காக '2ஜி' அலைவரிசை ஊழல் விவகாரத்தில் தொடர்புபட்டுள்ள ஷாகீத் பல்வாவிடமிருந்து, இந்திய மதிப்பின்படி ரூபா 200 கோடி லஞ்சமாக பெறப்பட்டது. அந்தப் பணம் நேரடியாகப் பரிமாற்றப்படாது, ஷாகீத் பல்வாவின் 'டி.பி. ரியாலிட்டி' எனும் நிறுவனத்தின் துணை நிறுவனமான 'சினியுக் பிலிம்ஸ்' நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டப்படுகின்றது.

இந்தநிலையில் '2ஜி' ஊழல் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை ஆரம்பமாகியதும் அந்த தொகை கடனாக பெறப்பட்டது என்று கலைஞர் தொலைக்காட்சி நிர்வாகம் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது..

அதேவேளை, 'சினியுக் பிலிம்ஸ்' நிறுவனத்தின் ஆண்டறிக்கையில், கலைஞர் தொலைக்காட்சிக்கு இந்திய மதிப்பின்படி 214 கோடி ரூபா வழங்கப்பட்டது என்று கூறிப்பிடப்பட்டிருந்தது. அது குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த கலைஞர் தொலைக்காட்சி நிர்வாகம் "சினியுக் நிறுவனம், கலைஞர்தொலைக்காட்சியில் பங்குகள் வாங்குவதற்காக (இந்திய மதிப்பில்) 200 கோடி ரூபா பெறப்பட்டது. அது நிறைவேறாத காரணத்தால் வட்டியோடு அந்தத் தொகை (இந்திய மதிப்பின் படி 214 கோடி ரூபா) திருப்பி கொடுக்கப்பட்டதாகவும். இதில் தவறேதும் இல்லை என்றும் விளக்கம் அளித்திருந்தனர். எனினும் குறித்த முறைகேடு வழக்குத் தொடர்பாக கனிமொழி, சரத்குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

#### உரையாடல்கள் பதிவு

இது இவ்வாறு இருக்க தற்போது ஆம் ஆத்மி கட்சி புதிய ஆதாரங்களோடு குற்றச்சாட்டுக்களை வெளியிட்டுள்ளது. புதுடில்லியில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய ஆம் ஆத்மி கட்சியின் முக்கிய பிரமுகரும், பிரபல சட்டத்தரணியுமான பிரசாந்த் பூஷண்,

"2ஜி ஊழல் இன்னும் பல ஊழல்களை உள்ளடக்கியதாக இருக்கிறது என்பது எங்களுக்குக் கிடைத்த பல்வேறு உரையாடல் பதிவுகள் மூலம் தெரிய வந்திருக்கிறது. தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி - ஜாபர் சேட், சரத்குமார் ரெட்டி - ஜாபர் சேட், சண்முகநாதன் - ஜாபர் சேட் ஆகியோரிடையே நடந்த உரையாடல் பதிவுகள் எமக்குக் கிடைத்துள்ளன.

#### கருணாநிதிக்கு தெரியும்

நொக்கியா கைத்தொலைபேசி மூலம் பதிவு செய்யப்பட்ட இந்த பதிவுகளிலிருந்து 2ஜி ஊழலும், அதனை மூடி மறைப்பதற்கான நடவடிக்கைகளும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் தெரிந்தே நடந்திருக்கின்றது என்பது தெளிவாகியுள்ளது. அதனை அவரது உதவியாளர் சண்முகநாதன் மற்றும் தமிழகத்தின் அப்போதைய உளவுத்துறை தலைவராக இருந்த ஜாபர்சேட் உரையாடல்கள் மெய்ப்பிக்கின்றன. கருணநிதி குடும்பத்தினருக்கும் டாடா நிறுவனங்களுக்கும் இடையே நடந்த பல்வேறு பணப் பரிவர்ததனைகள் தெளிவாகின்றன. இந்த வழக்கிலிருந்து கனிமொழியைக் காப்பாற்றும் வகையில் இது தொடர்பான ஆவணங்களை திருத்த முயன்றதற்கான ஆதாரங்களும் இந்த தொலைபேசி உரையாடல் பதிவுகளில் உள்ளன. இதுதவிர இன்னும் பல ஆவணங்கள் விரைவில் கிடைக்கலாம் என நினைக்கிறேன். '2ஜி' வழக்குத் தொடர்பான முக்கிய ஆவணங்களில் சரத் ரெட்டி பல திருத்தங்களை செய்திருக்கிறார்."- என்று தெரிவித்துள்ளார்.

#### மீண்டும் விசாரணை

ஆம் ஆத்மி கட்சியின் இந்தக் குற்றச்சாட்டை தி.மு.க. தலைவர் கருணாநிதி மறுத்துள்ளார். எனினும் குறித்த தொலைபேசி உரையாடல் பதிவு ஆய்வுக்குட்படுத்தப்படும் என்றும், அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் சி.பி.ஐ. அறிவித்துள்ளது. அதனால் 2ஜி வழக்கில் கனிமொழி மற்றும் சரத் ரெட்டிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சி.பி.ஐ. மறு விசாரணை செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்ற தேர்தல் நெருங்கும் சமயத்தில் ஆம் ஆத்மி கட்சி வெளியிட்டுள்ள இந்த ஆதாரங்கள் தி.மு.க.வுக்கு எதிர்வரும் நாள்களில் சிக்கலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

## சீனக் கடற்படை ஒத்திகை

பீஜிங், பெப். 6

சீனக் கடற்படை மேற்கு பசிபிக் கடல் பகுதியில் ஒத்திகை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்திய பெருங்கடலில் மேற்கொள்ளப்பட்ட போர் பயிற்சிகளை தொடர்ந்து மேற்கு பசிபிக் கடலில் சீனாவின் நன்ஹாய் கடற்படை இந்த ஒத்திகை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

"நீரிலும், நிலத்திலும் இறங்கி செயற்படும் போர் வாகனங்கள், அழிப்பு வாகனங்கள் இந்த பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டன. கடற்கொள்ளை தடுப்பு, கூட்டு தேடுதல் நடவடிக்கைகள், மீட்பு நடவடிக்கைகள், அணு ஆயுதம் மற்றும் இரசாயன ஆயுதங்களை எதிர்கொள்வது போன்றவை ஒத்திகை பார்க்கப்பட்டன" என்று சீன இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சீனாவில் தொடர்ச்சியான போர் ஒத்திகை நடவடிக்கைகளால் அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் அதிருப்தி அடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)





பிரிட்டனின் பல பகுதிகளில் சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்து வருவதால், 14 ஆயிரம் வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. பிரிட்டனின் தென்கிழக்கு பகுதிகளிலேயே கடுமையான சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது. அதனால் நகரமே வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கின்றது. வெள்ள நீரின் அரிப்பால் செயிண்ட் டேவிட்ஸ்-டாவ்லிஷ் ரெயில் நிலையங்களுக்கு இடையில் தண்டவாளங்கள் சேதமடைந்துள்ளன. டெவொன் மற்றும் கார்ன்வால் பகுதியில் மழையுடன் சேர்ந்து மணிக்கு 80 மைல் (128.748) வேகத்தில் பலத்த சூறாவளிக் காற்று சுழற்றியடித்தது. அதனால் சுமார் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. இந்த வார இறுதி வரை பலத்த மழை பெய்யும் எனவும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## அமைதிப் பேச்சுக்களை புறக்கணிக்க மாட்டோம்

### *சிரிய எதிர்த்தரப்பினர் தெரிவிப்பு*

**மூன்று வருடங்களுக்கும் மேலாக நீடித்து வரும் சிரியா உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லவ்ரோவை, அஹ்மட் ஜார்பா நேற்றுச் சந்தித்து பேசினார்.**

ஜெனிவா, பெப். 6

ஜெனிவாவில் பெப்ரவரி 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுக்களில் சிரிய எதிர்க்கட்சி கூட்டமைப்பு கண்டிப்பாக பங்கேற்கும் என்று அதன் தலைவர் அஹ்மட் ஜார்பா தெரிவித்துள்ளார்.

சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கையாக சர்வதேச நாடுகளின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த வாரம் இடம்பெற்ற முதற்சுற்றுப் பேச்சுக்கள் எந்த வித முடிவுகளும் எடுக்கப்படாது முடிவுற்றது. இந்தநிலையில் மூன்று வருடங்களுக்கும் மேலாக நீடித்து வரும் சிரியா உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவர எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லவ்ரோவை, அஹ்மட் ஜார்பா நேற்றுச் சந்தித்து பேசினார்.

மொஸ்கோவில் நடந்த இந்தப் பேச்சுக்கள் குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கூறுகையில்,

"சிரியாவில் அமைதியை நிலைநாட்டத் தேவையான நடவடிக்கைகளை ரஷ்யா முன்னெடுத்து வருகின்றது. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகள் இது போன்ற முயற்சிகளில் தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்." - என்று தெரிவித்துள்ளார். (ற)

## இரசாயன ஆயுதங்கள் முற்றாக அழிக்கப்பட்டன

### *லிபிய அரசு அறிவிப்பு*

திரிபோலி, பெப். 6

லிபியாவில் சேமித்து வைக்கப்பட்டிருந்த அனைத்து இரசாயன ஆயுதங்களும் அழிக்கப்பட்டு விட்டன என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

மேற்கு நாடுகளின் உதவியோடு ஆயுதங்கள் அழிக்கப்பட்டன என்றும், குறித்த இரசாயன ஆயுதங்கள் ஆயுதம் ஏந்திய குழுக்களிடம் கிடைத்தால் பெரிய ஆபத்து நேர்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்ற மேற்குநாடுகளின் கோரிக்கையை ஏற்றே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் அந்த நாட்டு அரசு மேலும் தெரிவித்துள்ளது.

சர்வதேச இரசாயன ஒழிப்பு அமைப்பில் லிபியா உறுப்பினரானதைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 2011ஆம் ஆண்டு கடாபிக்கு எதிராகப் புரட்சி வெடித்து அவரது அரசு கவிழ்க்கப்பட்ட நிலையில் ஆயுதங்களை அழிக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (ற)

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு

கராச்சி, பெப். 6

பாகிஸ்தானின் கராச்சி நகரில் ரயில் தண்டவாளம் ஒன்று வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்டதை அடுத்து பயணிகள் ரயில் தடம் புரண்டது. அதில் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. 12 பேர் காயமடைந்தனர்.

லாகூரில் இருந்து கராச்சி செல்லும் ரயில் பாதையில் வெடிக்கவ்வைக்கப்பட்டுள்ள இந்தக் குண்டு 4 கிலோ எடையுள்ளது என்று வெடிகுண்டு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. அதேவேளை பெஷாவர் நகரில் மசூதி அருகே நிகழ்த்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## அணு ஆயுதங்கள் தயாரிப்பதை கைவிடவேண்டும் வ.கொரியா

### *தென்கொரியா கோரிக்கை*

**அணு ஆயுதத் தயாரிப்புகளை ஈரான் கைவிட்டுள்ளமையால் அந்நாட்டுக்கு நல்வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.**

சியோல், பெப். 6

ஈரானைப் போன்று வடகொரியாவும் தனது அணு ஆயுதத் திட்டங்களை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது தென் கொரியா.

இதுகுறித்து தென்கொரியாவின் வெளியுறவு அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில்,

"ஈரானைப் போன்று வடகொரியாவும் தனது அணு ஆயுதத் தயாரிப்புகளைக் கைவிட வேண்டும். அணு ஆயுதத் தயாரிப்புகளை ஈரான் கைவிட்டுள்ளமையால் அந்த நாட்டுக்கு நல்வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. தென் கொரியா, அணுத் திட்டங்களைக் கைவிடுவதால் சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும். கொரிய தீபகற்பத்தில் அமைதி திரும்ப வேண்டும் என்றால் இது சிறந்த வழி" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா தனது அணு செறிவூட்டும் நிலையத்தை விரிவுப்படுத்தி, மீண்டும் செயற்படுத்தத் தொடங்கியுள்ளது என்று கடந்த மாதம் அமெரிக்காவின் உளவு துறை இயக்குநர் ஜேம்ஸ் க்ளேப்பர் எச்சரித்திருக்கும் நிலையிலே தென்கொரியா இவ்வாறு வலியுறுத்தியுள்ளது. (ற)

## படகு தீப்பிடித்து எரிந்ததில் பங்களாதேஷில் 11 பேர் சாவு

டாக்கா, பெப். 6

பங்களாதேஷில் இடம்பெற்ற படகு விபத்து ஒன்றில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.



சுர்மா ஆறு

பங்களதேஷில் பிரதான போக்குவரத்து மார்க்கமாக படகுப் போக்குவரத்தே விளங்குகின்றது. நேற்று முன்தினம் இரவு வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள கல்குவாரிகளில் பணி புரியும் தொழிலாளர்கள் கட்டாக் நகரில் ஓடும் சுர்மா ஆற்றைக் கடப்பதற்காக ஒரு படகில் பயணம் செய்தனர். அதில் சுமார் 100 பேர் பயணித்தனர். அப்போது அங்கு இருந்த விளக்கில் இருந்த தீ படகில் பிடித்து பரவியது. இதனால் பீதி அடைந்த மக்கள் அங்குமிங்கும் ஓடினர்.

ஏராளமானவர்கள் ஆற்றில் குதித்து நீந்தி உயிர் தப்பினர். இந்த தீ விபத்தில் படகு எரிந்தது. இச்சம்பவத்தில் 11 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். (ற)

## தலிபான் அமைப்பினருடன் தற்போது பேச்சுக்களில்லை

இஸ்லாமாபாத், பெப். 6

பாகிஸ்தான் மற்றும் தலிபான் அமைப்பினருக்கிடையே நடைபெறவிருந்த பேச்சுக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் வெளியிட்டுள்ள பாகிஸ்தான் அரசு, "தற்போதைய சூழ்நிலையில் தலிபான் அமைப்பினருடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு ஏதுவான நிலை காணப்படவில்லை. பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் 'டெக்ரீக் - ஈ--தலிபான் பாகிஸ்தான்' அமைப்பினர் குறித்த மேலதிக விவரங்கள் சில எமக்குத் தேவைப்படுகின்றன. அதன் பின்னர் பேச்சுக் குறித்த திட்டமிடல் ஆரம்பிக்கப்படும்" என்று தெரிவித்துள்ளது. அதே வேளை, தலிபான் அமைப்பினருடனான பேச்சுக் கள் குறித்துக் கடந்த வாரம் கருத்துத் தெரிவித் திருந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப், "தலிபான் அமைப் பினருடன் பேச்சுக்கள் நடத்த பாகிஸ்தான் அரசு தயாராக உள்ளது" என்று தெரிவித்திருந்தார். (ற)

# இலங்கை மீது ஜெனிவாவில் அர்த்தமுள்ள தீர்மானம் தேவை

## கனேடிய தமிழர் அமைப்பு கோரிக்கை

கான்பரா, பெப்.6
மார்ச் மாதம் ஆரம்பமாகும் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அர்த்தமுள்ள விதத்திலான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படும் என்று உலகம் முழுவதிலுமுள்ள தமிழ் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். அதுவும் போர்க் குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போரின் இறுதிக் கட்டத்தில் இனக்கொலைகள் நடைபெற்றமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கான அதிகாரங்களை உள்ளடக்கியதாக தீர்மானம் அமைய வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

**1950 ஆம் ஆண்டு தமிழருக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட வன்செயல்கள் வருடக் கணக்காக தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டார்கள்.**

இவ்வாறு கனேடிய தமிழ் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் 66 ஆவது சுதந்திரதினம் கொண்டாடப்படுவதையொட்டி கனேடிய தமிழ் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

1948 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியாளரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றுக் கொண்ட காலம் தொடங்கி தமிழருக்கு எதிரான பாரபட்சங்கள் ஆரம்பிக்கப்பட்டு நீடித்து வருகின்றன. பெரும்பான்மை சிங்கள வர்களைக் கொண்ட அரசு சிங்களத்தை ஆட்சி மொழியாக வும், பௌத்தத்தை அரச மதமாகவும் அறிவித்து ஏனையவர்களுக்கு பாரபட்சம் காட்டியது.

தமிழருக்கு எதிராக வேலைத் தலங்களில், கல்வி வாய்ப்புக்களில் மற்றும் காணி குடியேற்றங்களில் எல்லாம் பல்வேறு விதமாக பாகுபாடு காட்டி வந்துள்ளது. 1950 ஆம் ஆண்டு தமிழருக்கு எதிராக ஆரம்பிக்கப் பட்ட வன்செயல்கள் வருடக் கணக்காக தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டார்கள். அந்த ஆண்டில் இலங்கையிலிருந்து தமிழர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பெரும் எண்ணிக்கையில் வேறுநாடுகளுக்கு ஓடித் தப்பினார்கள். இறுதியாக 2009 ஆம் ஆண்டு போரின் இறுதிக் கட்டத்தில் 40 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரம் பேர் வரை ஐ.நா. கணிப்பின் படி படுகொலை செய்யப்பட்டார்கள்.

2013 ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கையில் நடந்த பொது நலவாய மாநாடு தொடர்பில் கனேடிய அரசு எடுத்த நிலைப்பாட்டை கனேடிய காங்கிரஸ் வரவேற்கின்றது. அதேபோல் அந்த நாட்டின் மீது நிதி மற்றும் ராஜதந்திரத் தடைகளை விதித்து நடவடிக்கை எடுக்குமாறும் கனேடிய அரசை வற்புறுத்துகின்றது. கனேடிய அரசின் கட்சிசார்பற்ற குழுவொன்று 2009 மேயில் வெளியிட்ட அறிக்கையில் மோதலின் போது இருதரப்பினரதும் நடத்தைகள் பற்றிய விசாரணையொன்று சாத்தியப்படாதவிடத்து அந்த நாட்டின் மீது இவ்விதமான தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தது.

இப்பொழுது அவ்வாறான தொரு விசாரணை நடத்தப்பட்டு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. அதன் மூலம் 66 வருட காலம் மேற்கொள்ளப் பட்டு வந்துள்ள பாகுபாடான செயற்பாடுகள் அமைதியான அரசியல் தீர்வொன்றின் மூலம் நிவர்த்தி செய்யப்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய தமிழ் காங்கிரஸின் தேசிய பேச்சாளர் டேவிட் பூபால பிள்ளை இது பற்றி மேலும் தெரிவிக்கையில்;

அடுத்த மாதம் ஜெனிவாவில் கூடும் சர்வதேச சமூகம் தீர்க்கமான ஒரு முடிவை எடுத்து விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்கும் என்று நம்பிக்கையோடு காத்திருக்கிறோம் - என்றார். (ப)

## தற்காலிக பதிவு மாற்றங்கள் வவுனியாவில் இடைநிறுத்தம்

வவுனியா, பெப்.6
வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் சிலவற்றில் தற்காலிகமான பதிவு மாற்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் க.உதயராசா தெரிவித்துள்ளார்.

பன்றிக் கெய்தகுளம், தாண்டிக்குளம், பூவரசங்குளம், சாஸ்திரி கூழாங்குளம், கல்மடு செக்கடிப் பிளவு, மகிழங்குளம் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளில் தற்காலிக பதிவு மாற்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள் ளன.

இதேவேளை- பிரதேச செயலகத்துக்கு தேவையைப் பூர்த்தி செய்ய வருவோர் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்றவற்றை கொண்டு வரவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (வ-421)

## சமூக சேவை அலுவலகத்துக்கு முல்லைத்தீவில் அடிக்கல்

முல்லைத்தீவு, பெப்.6
முல்லைத்தீவு மாவட்டத்துக்கான சமூக சேவைகள் அலுவலகம் கோயில் குடியிருப்பு பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வறிய மக்களுக்கு விளைத்திறனுள்ள துரித சேவைகளை வழங்கும் நோக்குடன் அமைக்கப்படும் மாவட்ட சமூக சேவைகள் அலுவலக கட்டடப் பணிக்கென யுனிசெவ் நிறுவனத்தினர் முதற்கட்டமாக 2 மில்லியன் ரூபா வழங்கியுள்ளனர்.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ந.தசரசகுமாரன் தலைமையில் நடைபெற்ற அடிக்கல்நடும்விழாவில் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் முல்லை மாவட்டப் பொறியியலாளர் எஸ். திருஞானம், துணுக்காய் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவர் சி. கணேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

## பாலர் ஞானோதய சபையின் ஆண்டு விழா

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 68 ஆவது ஆண்டு விழாவும் முன்னாள் தலைவர் சிவஸ்ரீ சி.கணேசலிங்கம் குருக்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினமும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் செல்வி இ.இந்துஜாவின் சிறப்பு இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (வ)

## நிர்வாக சபை தெரிவு

கைதடி வடக்கு செல்வா சன சமூகநிலையத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றன.

தலைவராக லயன் இ.கந்தசாமியும் செயலாளராக திருமதி ச.நிரஞ்ஜீவ்வும் பொருளாளராக வ.சின்னத்தம்பியும் நிலையத்தின் காப்பாளராக பண்டாரவளை உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (வ-288)

காணி விற்பனைக்கு
கரணவாய் மத்தி, பொன்னம்பல வித்தியாசாலைக்கு முன்பாக கலைவாணிவாசா என்னும் வீட்டுடன் கூடிய 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (33353)(2.6.3)
தொடர்பு: 075 738 7024

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம். (வ/து)
எமது சங்கத்திற்குச் சொந்தமான தாவடி சுதுமலை வீதியின் வடக்குப்புறமாக அமைந்துள்ள காணியில் புதிய களஞ்சிய கட்டடம் 60 அடி நீளம் 30 அடி அகலத்தில் அமைக்கப் படவுள்ளதால் இதற்கான கூலிக்கான கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது. இக்கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பம் கே.கே.எஸ் வீதி, தாவடிச் சந்தியில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் காரியாலய கடமை நேரத்தில் விண்ணப்பத் திற்கான கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
விவரம்:
1. விண்ணப்ப முடிவு திகதி: 20.02.2014
2. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர், கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச, K.K.S வீதி, தாவடிச் சந்தி
3. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் விண்ணப்பித்தல் வேண்டும்.
4. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப் படமாட்டாது.
5. விண்ணப்பங்கள் யாவும் நெறியாளர்குழுவில் ஆராய்ந்து தீர்மானித்து ஏற்றுக்கொள்ளப்படும்.
6. விண்ணப்பப் படிவ கட்டணம் ரூபா 1000/= மீள வழங்கப்பட மாட்டாது. (சி11417)(12.3.8)
கூட்டுறவுச் சேவையிலுள்ள தலைவர்

விற்பனைக்கு
கொக்க ஸ்பானியல் 2 ½ மாத நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 318 5119 (29757)(6.3.2)

காணி விற்பனை
118, பிரதான வீதி, மாட்டீன் றோட் சந்தியில் 04 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 611 0885 (கொழும்பு- வீரசிங்க)
075 541 7338(யாழ்ப்பாணம்) (44355)(5.6.3)

தேவை உங்கள் இடங்களில் உள்ள பழைய காகிதாதிகள், புத்தகங்கள், கொப்பிகள், பத்திரிகைகள் முதலானவற்றைப் பணம் தந்து அப்புறப்படுத்துகின்றோம். (44356)(5.6.3)
தொடர்பு: 077 418 0185

வீடும் காணியும் விற்பனைக்குண்டு
வட்டுக்கோட்டை பிரதேச சபைக்கு முன்பாக 2 பரப்பு விஸ்தீரணமுள்ள காணியும், வீடும் விற்பனைக்குண்டு. (44353)(2.6.3)
தொடர்பு:-077 071 1885

வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் ஒழுங்கையில் 2½ பரப்புக்காணியுடன் 2200 சதுர அடி கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு. வாடகைக்கு விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:077 695 3776 (44357)(5.6.3)

தவறிவிட்டது
மன்னாருக்கும் பூநகரிக்குமிடையில் ஜெனறேற்ரர் இயக்கும் கான்டில் (HANDLE) மற்றும் இயந்திரங்கள் திருத்தும் சாவி செற் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 021 222 7334 (44359)(45.6.3)
ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம்.

பணியாளர்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் பிரபல புடைவை நிலையத்திற்கு
* அனுபவமுள்ள விற்பனையாளர்கள் (பெண்கள்)
* அனுபவமுள்ள காசாளர் (ஆண்/பெண்)
உடன் தேவை.
(யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)
நேரில் வரவும்.
ராசி கலெக்ஷ்சன்,
199, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் முதற்தர ஆங்கிலக் கல்லூரியின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன..........
City & Guilds APPROVED CENTRE
உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்
SPOKEN ENGLISH
சனி/ஞாயிறு பிரிவு(9.30 - 12.00) வரை
08.02.2014 காலை 9.30 மணி
எங்கும் ஆங்கிலம் கற்க முடியும்ஆனால் எம்மிடம் மட்டுமே ஆங்கிலம் கற்று பேசமுடியும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை
E-CITY 0212217106 0773400418 /0774924166
COLLEGE OF ENGLISH
இல-372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.(வீரமாகாளி அம்மன்கோவில் அருகில்)

Amāna Takaful Insurance Redefined வேலைவாய்ப்பு
அமானா தக்காஃபுல் காப்புறுதி நிறுவனத்தில் அலுவலக பணிக்கு ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.
வயதெல்லை : 19-25
பால் : இருபாலாரும்
கல்வித் தகைமை : O/L ஆங்கிலம் உட்பட A/L இல் 3 பாடங்களில் சித்தி
இடம் : 240, மின்சார நிலைய வீதி, (யாழ் போதனா வைத்தியசாலைக்குப் பின்வீதி) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 750 1100
நேர்முகத் தேர்வு: இன்று (06.02.2014), நாளை (07.02.2014) எமது கிளையில் இடம்பெற இருக்கின்றது.
முன் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.
குறிப்பு:
தொடர்புகளுக்கு காலை 8 மணிமுதல் மாலை 7 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

இலவச செவிப்புலன் பரிசோதனை
மெட்கொன் செவிப்புலன் சுகநல நிலையத்தில்
08.02.2014 சனிக்கிழமை காலை 8.30am- மாலை 6.00pm வரை
இலவச செவிப்புலன் பரிசோதனை வழங்கப்படும். அத்துடன் பொருத்தமான செவிப்புலன் கருவிகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் பதிவுகளுக்கு முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
மெட்கொன் செவிப்புலன் சுகநல நிலையம்,
218 1/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 492 3587/075 042 2108

# நாச்சிக்குடா கிராமத்தினுள் பரவி வருகின்றது உவர்நீர்


### *தடுப்பணையின் கதவுகள் மூடப்படாததால்*

பூநகரி, பெப்.6
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரியின் நாச்சிக்குடா கிராமத்தின் கிழக்குப் பகுதியினுள் கடல்நீர் உட்புகாத வகையில் அமைக்கப்பட்டுள்ள உவர்நீர்த் தடுப்பணையின் கதவுகள் திறந்து விடப்பட்ட நிலையில் காணப்படுவதால் உவர்நீர் கிராமத்தினுள் பரவி வருவதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாச்சிக்குடா கிராமத்தில் 700 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் கிராமத்தின் கிழக்குப் பகுதியூடாக உவர்நீர் கிராமத்துக்குள் பரவி வருவதன் காரணமாக உவர்நீர்த் தடுப்பணையின் கதவுகளை மூடி விடுமாறு நாச்சிக்குடா கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.நீக்கிலப்பிள்ளை, கிளிநொச்சி அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பூநகரி பிரதேச செயலர் ஆகியோரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

பூநகரியின் உவர் நீர் பரம்பலைத் தடுப்பதற்கு அதிகாரிகளால் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்று பூநகரி பிரதேச மக்கள் குற்றம் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-18)



வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் வவுனியா ஆசிகுளம் மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். (க-402)

# பயணிகள் பாராட்டு

### *குடிதண்ணீர்த் தாங்கி வைக்கப்பட்டமைக்கு*

வவுனியா, பெப்.6
வவுனியா பஸ் நிலையத்தில் குடிதண்ணீர்த் தாங்கி வைக்கப்பட்டுள்ளமைக்குப் பயணிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

தூர இடங்களில் இருந்துவரும் பயணிகள் இதுவரை குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். அவர்கள் இதுவரை காலமும் வவுனியா கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள கிணறு, வேறு இடங்களில் உள்ள பொதுக் கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பன மூலமாகத் தமது தாகத்தைத் தணித்தனர். சிலர் கடைகளில் விற்பனையாகும் தண்ணீர்ப் போத்தல்களைப் பணம் கொடுத்து வாங்கிப் பயன்படுத்தினர்.

**சிலர் கடைகளில் விற்பனையாகும் தண்ணீர்ப் போத்தல்களைக் பணம் கொடுத்து வாங்கிப் பயன்படுத்தினர்.**

இது தொடர்பாக வவுனியா நகர சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, வவுனியா நகர சபையால் குடிதண்ணீர்த்தாங்கியொன்று வவுனியா பஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு உட்பட பல்வேறு வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் மற்றும் அயலில் உள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்களும் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-402)

# பாடசாலைகளில் உணவு மேற்பார்வைக் குழுக்கள்

### *வவுனியா தெற்கு கல்வி வலயத்தில்*

வவுனியா, பெப்.6
வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் உணவு வழங்கும் திட்டத்தைப் பாடசாலை மட்டத்தில் மேற்பார்வை செய்வதற்கு உணவு மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள 60 க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் பல வறிய மாணவர்கள் தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் தமது கற்றல் நடவடிக்கைகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் சில பாடசாலைகளில் உரியவகையில் உணவுவழங்கப்படாமை குறித்து உலக உணவுத் திட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து இந்த உணவு மேற்பார்வைக் குழுக்கள் அமைக் கப்பட்டு வருகின்றன. இத்தகைய குழுக்கள் மூலமாக பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் உணவு அருந்துவதை உறுதிப்படுத்துவதுடன் உணவுகளின் தரத்தைப் பேணுதல், உணவுப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல், உணவு தயாரிக்கும்போது சுகாதாரத்தைப் பேணுதல் , மாணவர்கள் உணவு தொடர்பாகக்கூறும் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்ளல் உட்பட பல்வேறு விடயங்களைப் பகுப்பாய்வு செய்து அறிக்கைகளைத் தயாரிப்பது இந்தக் குழுக்களின் முக்கிய செயற்பாடாகும்.

இந்தக் குழுவில் ஆசிரியர்கள் ஐந்து பேர் , மாணவர் ஒருவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

(க-402)

## பாடசாலை நிலைவரங்கள் மதிப்பீடு

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் சென்ற குழுவினர் முழங்காவில் பிரதேசப் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள நிலைவரங்களை மதிப்பீடு செய்துள்ளனர். நாச்சிக்குடா அ.த.த.பாடசாலை, இரணை மாதாநகர் பாடசாலை, முழங்காவில் மகா வித்தியாலயம், முழங்காவில் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றுக்கு இந்தக் குழுவினர் நேரில் சென்று பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் நெருக்கடி, பௌதிக வள நெருக்கடி என்பன தொடர்பாக மதிப்பீடு செய்து அறிக்கை ஒன்றையும் தயாரித்துள்ளனர். (க-18)

## மின்சாரம் இல்லை

கிளிநொச்சி முழங்காவில் கிராமத்தின் உட்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதலாவதாக மீளக்குடியமர்வு இடம்பெற்ற இந்தக் கிராமத்தில் நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் மின்சாரம் முழுமையாக மக்களுக்கு வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது. இந்தக்கிராமத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் மின் சாரத்தை வழங்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

இதேவேளை முழங்காவில் குமிழமுனைக் கிராமத்தில் உவர் ஆபத்து அதிகரித்துள்ளதன் காரணமாக 65 குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (க-18)

## புதிய பீடாதிபதி

வவுனியா, பெப்.6
வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் புதிய பீடாதிபதியாக கு.சிவம்பரநாதன் பதவியேற்றுள்ளார்.

கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதியாகப் பதவிவகித்த க.பேணாட் கடந்த முதலாம்திகதி ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து கல்லூரியின் உப பீடாதிபதியாகக் கடமையாற்றிய சிவம்பரநாதன் புதிய பீடாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் பனம்காமம் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட விஞ்ஞான பட்டதாரியான இவர் 1982 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் முதல் நியமனத்தைப் பெற்றுக்கொண்டார். பின்னர் 1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி 1993 ஆம் ஆண்டு வவுனியா கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

இவர் பின்னர் பீடாதிபதியாகவும் கடமையாற்றி 01-01-2014 ஆம் திகதியிலிருந்து வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் மூன்றாவது பீடாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

(க-421)

# அணைக்கட்டை உயர்த்துமாறு விவசாயிகளால் மனு கையளிப்பு

பூநகரி, பெப்.6
பூநகரியிலுள்ள கரியாலை நாகபடுவான் குளத்தின் அணைக்கட்டை உயர்த்துமாறு இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பிரதி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

குறித்த மனுவில், 1957 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் குளத்தின் கீழ் ஆயி ரத்து 703 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

சிறுபோகத்தில் 500 ஏக்கர் நிலத்தில் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கரியாலை நாகபடுவான், பல்லவராயன்கட்டு, குமிழமுனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் இந்தக் குளத்தை நம்பியே உள்ளன.

**1957 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் குளத்தின் கீழ் ஆயிரத்து 703 ஏக்கர் நிலத்தில் நெற் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.**

குளத்தின் அணைக்கட்டை உயர்த்தி அதிகளவு நீரைத் தேக்குவதன் மூலமாகப் பெரும்போகத்தில் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும். சிறுபோகத்தின் போது அதிக நிலப் பரப்பில் விவசாயத்தை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை பல்லவராயன் கட்டு, கரியாலை நாகபடுவான் வலதுகரை கமக்கார அமைப்பின் தலைவர் செ.கனகசபை கையளித்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (க-18)

# எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை நல்ல மனிதர்களாக நாம் உருவாக்குவோம்

முல்லைத்தீவு, பெப்.6
எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தைகளை நல்ல அறிவுள்ளவர்களாகவும் தலைவர்களாகவும் சமூகத்துக்குப் பொருத்தப்பாடுள்ள மனிதர்களாக வும் உருவாக்க வேண்டுமென்ற முனைப்போடு செயற்படுவோம். இவ்வாறு உறுதிமொழி வழங்கினார் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா.

அண்மையில் இடம்பெற்ற பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடந்த காலங்களில் பல்வேறு இடர்களை எதிர்கொண்ட போதிலும் மீண்டும் 2010 ஆம் ஆண்டும் எமது பாடசாலை துளிர்விட்டு தற்போது சகல வளங்களையும் பெற்று மிளிர்கின்றது. சகல துறைகளிலும் எமது பாடசாலை வளர்ச்சி அடைந்து வருகின்றது. சகல வளங்களையும் கொண்டதொரு இருமாடிக் கட்டடம் இந்தப் பாடசாலைக்குத் தேவை என்ற வகையில் எமது கல்விப் பணிப்பாளரின் முயற்சியால் ஆஸ்திரேலியாவின் 83 மில்லியன் ரூபா நிதியின் மூலமாக வகுப்பறைகள், விவசாய கூடம், மனையியற் கூடம், அழகான நூலகம், கலை அரங்கு என்பனவற்றுடன் நிர்வாகத் தொகுதியையும் உள்ளடக்கிய கட்டடத் தொகுதி அமைக்கப் பட்டுள்ளது.

எமது பாடசாலையின் 80 ஆவது ஆண்டுநிறைவுவிழாவிலே பண்டாரவன்னியன் கல்லூரி யாகப் பெயர் மாற்றம் பெறவுள் ளது.

எனவே எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை நல்ல அறிவுள்ளவர்களாக, நல்ல தலைவர்களாக, சமூகத்துக்கு பொருத்தப்பாடு உள்ள மனிதர்களாக உருவாக்க வேண்டுமென்ற முனைப்போடு நானும் எனது ஆசிரியர்களும் பெற்றோர்களுக்கு உறுதி கூறி நிற்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார். (க-500)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர் இடம்பெயர்த்த மக்களுக்கான வீட்டுத் திட்டம் அல்லாடுவது தகுமா?

வீடு ஒன்று இருந்தால் வாழ்க்கையில் பிரச்சினை இருக்காது. இந்திய வீடமைப்புத் திட்டத்தில் பிரச்சினை எதுவும் இருக்கக் கூடாது.

இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பில் பிரச்சினைகள் எதுவும் இருக்குமாயின், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திலோ அல்லது இலங்கையின் தேசிய வீடமைப்பு அதிகார சபையிடமோ முறைப்பாடு தெரிவிக்கலாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட செயலாளர் சுஜாதா மேத்தா. வவுனியா புதுக்குளம் மக்களைச் சந்தித்து வீட்டுத்திட்டம் குறித்துக் கலந்துரையாடியபோதே இந்திய உயர் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போரினால் தமது வீடுகளை-இல்லிடங்களை-இழந்தவர்களுக்கு உதவும் பொருட்டு, இந்திய (மத்திய) அரசு தனது நன்கொடைத் திட்டமாக வீடுகளை அமைப்பதற்கு முன்வந்து, அதனைச் செயற்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தின் முன்னேற்றம்-நிலைமை- குறித்து நேரில் கண்டறியும் பொருட்டு வவுனியாவுக்கு வந்திருந்த போதே சுஜாதா மேத்தா மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர், போர் முடிவுற்ற அடுத்த ஆண்டில், இலங்கை ஜனாதிபதி இந்தியா சென்ற வேளையில், இடம்பெயர்ந்த வடக்கு, கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு கருதி, இந்திய அரசு 43,000 வீடுகள் அமைத்துத் தரும் என்று பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்திருந்தார்.

அதற்கான ஆரம்பகட்டமாக, இந்திய-இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி, வடக்கின் ஐந்து மாகாணங்களில் ஆயிரம் வீடுகளை அமைக்க ஏற்பாடாகியது. ஒப்பந்தத்தின் பிரகாரம் அதனை அமுல் செய்வதற்கு நான்கு முகவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அமுலாக்கல் காலம் 2012 நடுப்பகுதி தொடக்கம் 2015 நடுப்பகுதி வரையாக இருக்கும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

போரினால் உடைமைகளை இழந்த நிலையில் வவுனியா மெனிக் முகாம் மற்றும் செட்டிகுளம் முகாம்களில்-நலன்புரி நிலையங்களில்-அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கு, இந்திய வீட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்ட போது ஓரளவு மன ஆறுதல் அடைந்த மக்களுக்கு, அவர்கள் எதிர்பார்த்தவாறு முழுமையான பயன் கிடைக்கவில்லை.

இவற்றுக்கு இடையில், போரால் பாதிப்புற்ற இலங்கைத் தமிழ் மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் பணி திருப்திகரமாக நடைபெற்று வருவதாக இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வருடம் இறுதிவரை (31.12.2013 வரை) வடக்கு மாகாணத்தில் பத்தாயிரத்து இருநூற்றைம்பது வீடுகளைக் கட்டும் பணி நிறைவேறிவிட்டதாக அறிவித்திருக்கிறார்.

இதே திட்டத்தின் கீழ் மேலும் 27,750 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் அவற்றுக்கான நிதி உதவி பயனாளிகளிடமே வழங்கப்படும் என்ற புதிய தகவலையும் வெளியிட்டுள்ளார்.

மலையகத்தில் (மத்திய, ஊவா மாகாணங்களில்) ஐயாயிரம் வீடுகளைக் கட்டி வழங்கும் திட்டமும், போரினால் பாதிப்புற்றோருக்கான வீட்டுத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் என்ற தகவலையும் அவர் அழுத்திக் கூறி உள்ளார்.

இவற்றுக்கிடையில், குறித்த வீட்டுத் திட்டத்தின், பயனாளிகள் பலர்-வீடிழந்து பாதிக்கப்பட்ட பலர்-அரை குறை வீடுகளைக் கட்டிக் கடனாளிகளாக மாறியிருப்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

மரத்தளபாடங்கள் கிடைக்காமை, மற்றும் கட்டடப் பொருள்களின் விலைகள் எகிறியமை, கட்டட வேலையாள்களின் கொடுப்பனவுகள் உயர்ந்தமை என்பன அதற்கான காரணிகளில் சில.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் 1,832, கிளிநொச்சியில் 3,090, முல்லைத்தீவில் 3,540, மன்னாரில் 1,074, வவுனியாவில் 648, கிழக்கு மாகாணத்தில் 66 என்ற எண்ணிக்கைகளில், இந்திய அரசின் உதவியுடன் வீடுகள் அமைக்கப்பட்டு விட்டதாக, குறிப்பிட்ட வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் அமைப்புக்களில்-பிரதானியான ஐ.நா.குடியிருப்பு அமையம் (U.N.Habitat) தெரிவித்திருக்கிறது.

எனினும், வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அவ்வப்போது முரண்பாடுகள் தோன்றி வீட்டுத் திட்டம் உரிய கட்டத்தை எட்டவில்லை என்று கருதும் அளவுக்குத் தாமதம் காணப்படுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் எடுத்து நடவடிக்கையில் இறங்குவார்களா?

# பாலைவனம் நோக்கிய பயணம்

சந்திரசேகர ஆசாத்

"மத்திய மலைநாடான மொறவாக்கந்த விலிகந்த இரணைமடு ஊடாக யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் முடிவின்படி ஒரு லீற்றர் நீரில் 49 மில்லிகிராம் நைற்றேற் இருக்க வேண்டும். ஆனால் யாழ்.குடாநாட்டின் நீரில் 149 மில்லிகிராம் நைற்றேற் உண்டு. ஆரோக்கியமான எதிர்காலச் சந்ததிக்காக யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுவிலிருந்து நீர் கொண்டு வரப்படுகிறது.

இத் திட்டத்தை எதிர்க்கும் தமிழ் விரோதிகள் யார்? இப்படியொரு விளம்பரம் தற்சமயம் அரச ஊடகமொன்றில் அடிக்கடி ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இந்த விளம்பரத்தை மேலோட்டமாகக் கேட்பவர்கள் இரணைமடு குடிதண்ணீர்த் திட்டத்தை எதிர்ப்பவர்கள் யாழ்ப்பாண மக்களின் விரோதிகள் எனவும் மனிதநேயமற்ற மனப்பான்மைகொண்டவர்கள் எனவும் கருதக் கூடும். ஆனால் இத் திட்டம் பற்றியும் இதன் எதிர்கால விளைபயன்கள் பற்றியும் யதார்த்தமாகச் சிந்தித்தால் இதன் ஆபத்தைப் புரிந்து கொள்ள முடியும். இதன் மூலம் கிளிநொச்சி மட்டுமன்றி யாழ்ப்பாணம் கூட வெகு விரைவில் தரிசாக மாறிவரும் அபாயம் ஏற்படலாம். அது மட்டுமன்றி வடபகுதி உறவில் தன்னிறைவு அடைவதில் பிரதான பங்கு வகிக்கும் கிளிநொச்சி தன்னிலை இழக்க வேண்டிய நிலையும் ஏற்படும். கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரமான விவசாயம் நலிவடையும் நிலையில் அந்த மக்கள் வறுமையிலும், பட்டினியிலும் தள்ளப்படும் நிலை ஏற்படுவதுடன் காலப் போக்கில் அவர்கள் கிளிநொச்சியை விட்டு குடிபெயரும் நிலையும் ஏற்படலாம்.

### யாழ்.குடாநாடு எதிர்நோக்கும் அபாயம்

இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள கிணற்று நீரில் ஒரு லீற்றருக்கு 149 மில்லி கிராம் நைற்றேற் கலந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணம் கடல் நீர் நிலத்தடியில் உட்புகுவதும் அளவுக்கதிகமான கிருமிநாசினிப் பாவனையும் தான் எனக் கூறப்படுகிறது. வெகு விரைவில் யாழ்ப்பாணக் கிணறுகள் உவர் நீராக மாறிவிடும் எனவும் சொல்லப்படுகிறது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் ஏற்படும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இரணைமடுவில் இருந்து குடிதண்ணீர் கொண்டுவரப்படும் திட்டம் முன்வைக்கப்படுகிறது.

ஆனால் யாழ்ப்பாணக் கிணறுகள் உவர் நீராவதைத் தடுக்க எந்த ஒரு திட்டமும் முன்வைக்கப்படவுமில்லை. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுமில்லை.

ஏற்கெனவே யாழ்ப்பாணத்தில் நீர் உவராவதைத் தடுக்க சில திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு சில அரசியல் காரணங்களால் அவை கைவிடப்பட்டன. இதில் தொண்டமானாறு, செம்மணி நீரேரித் திட்டங்கள் முக்கியமானவை. தொண்டமானாறு ஏரியை நன்னீராக்கும் நோக்குடன் செல்வச்சந்நிதி கோயிலுக்குப் பின்னால் கதவுகளுடன் கூடிய அணை கட்டப்பட்டது. கரணவாயில் மேற்கொள்ளப்பட்ட உப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டது. மேலும் இரணைமடுவில் இருந்து மாரி காலத்தில் வான் பாயும் மேலதிக நீரை தொண்டமானாறு நீரேரியின் மறு முனைக்கு கொண்டு வரும் நோக்கம் மண்டலாயிலிருந்து ஒரு பிரமாண்டமான வாய்க் கால் அமைக்கப்பட்டது. அதேபோல செம்மணியிலும் கடல் நீர் உட்புகாவண்ணம் ஓர் அணை கட்டப்பட்டது.

இவற்றின் மூலம் யாழ்.குடாநாட்டின் நிலக்கீழ் நீரோட்டத்தை நிரந்தரமாக நன்னீராகப் பேண திட்டம் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. இது மட்டுமன்றி வயல்கள் நடுவே அமைக்கப்பட்ட குளங்களும் கோயில் கேணிகள். குளங்களும் மழை நீரைத் தேக்கி நிலக்கீழ் நீரை நன்னீராகப் பேணுவதில் கணிசமான பங்கை வகித்தன.

ஆனால் இத்திட்டம் இடையில் கைவிடப்பட்டது என்றும், இவற்றை ஆரம் பித்து நிரந்தரமாகவே யாழ்ப்பாணத்துக் குடாநாட்டு நீரை நன்னீராக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. பதிலாக இரணைமடுவில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வரப்படும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் கடல்நீர் உட்புகுவதைத் தடுக்கவோ அல்லது நிலத்தடி நீரை நன்னீராகப் பாதுகாக்கவோ எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் பயன் வெகுவிரைவில் யாழ்.குடாநாடெங்கிலும் உள்ள கிணறுகள் உப்பு நீராக மாறும் அபாயம் ஏற்படுவது தவிர்க்க முடியாது.

இன்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் புகையிலை மற்றும் உப உணவுப்பயிர்ச் செய்கை என்பனவற்றில் சிறந்து விளங்குகின்றன. ஆனால் கிணறு உவராகி விட்டால் அப்பயிர்ச்செய்கையின்நிலைஎன்ன? இந்த விவசாயப் பெறுமதி மிக்க மண் காலப்போக்கில் தரிசாகப் போகும் நிலைமையை தவிர்க்க முடியுமா? அதுமட்டுமன்றி தமது சொந்த நீரைக் குடித்து சொந்த நீரில் பயிர் செய்து தனித்துவமாக வாழ்ந்த மக்கள் குடிதண்ணீருக்குக் கூட கையேந்தி நிற்கும் அவலநிலை திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது என்பதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். கிளிநொச்சியில் வறட்சி ஏற்படுமா னால் யாழ்ப்பாண மக்கள் போத்தல் நீரையே நாட வேண்டிய நிலையும் ஏற்படலாம். யாழ்ப்பாணக் கிணறுகள் உவர் நீராவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமல், குடிப்பதற்கு இரணைமடு நீரைக் கொடுத்துப் பூசி மெழுகுவது நீண்ட கால அடிப்படையில் யாழ்ப்பாணத்தை பாலைவனமாக்கும் சதி நடவடிக்கைகளில் ஒரு பகுதியே. இதுவும் இன ஒடுக்குமுறையின் இன்னொரு வடிவமே.

### கிளிநொச்சி எதிர்கொள்ளும் அபாயம்

இரணைமடுக்குளம் மேலும் இரண்டு அடி உயர்த்தப்படும் எனவும் சிறுபோகத்தில் நெல்லுக்குப் பதிலாக சிறுதானியப் பயிர்களைச் செய்ய விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படும் எனவும் அவற்றின் மூலம் கிடைக்கும் நீரே யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீராக வழங்கப்படவுள்ளது எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. இரணைமடு அணை இரண்டு அடியால் உயர்த்தப்படலாம். ஆனால் முழுமையாக நீரைத் தேக்க முடியுமா என்பது தான் கேள்வி. ஏனெனில் அப்படி நீர் தேக்கப்படும்போது இரணைமடு விமான நிலைய ஓடு பாதை பாதிப்புக்குள்ளாகும். கடந்த வருடங்களில் 28 அடிக்கு மேல் நீரைத் தேக்க இராணுவம் அனுமதிக்கவில்லை என்பதை நாம் மறந்து விடக் கூடாது. எனவே அணை உயர்த்தப்படுமானால் மேலதிக நீரை தேக்க முடியும் என்பது சாத்தியமற்றதாகும். எப்போதுமே காலபோகத்தில் உரிய நேரத்தில் மழை பெய்யாமை, வெள்ளப் பெருக்கு போன்ற காரணங்களால் எதிர்பார்க்கும் அறுவடையை பெறமுடிவதில்லை. சிறுபோகத்தில் குறைந்த பரப்பில் விதைத்தாலும் முழுமையான அறுவடையைப் பெற முடியும். எனவே விவசாயிகள் சிறுபோகத்தை தமது வருமானத்தின் நம்பிக்கையான பெறுபேறாகக் கருதுகின்றனர். எனவே விவசாயிகள் சிறுபோகத்தில் நெல் விதைப்பு நிறுத்தப்பட்டால் எப்படியான பாதிப்புக்கு உட்படுவர் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

சிறு போகத்தில் சிறுதானியப் பயிர் செய்யப்பட்டால் நெல்லை விட நான்கில் ஒரு பங்கு நீர் போதுமெனவும் அந்த மேலதிக நீரை வடக்குக்கு அனுப்ப முடியும் எனவும் கூறப்படுகிறது. எந்த ஒரு முட்டாளும் வயல் நிலத்தில் சிறுதானியப் பயிர் செய்ய மாட்டான். அப்படிச் செய்ய முற்படினும் கிடைப்பது விளைச்சலாக இருக்காது, நட்டமாகத்தான் இருக்க முடியும்.

தற்சமயம் சிறுபோகத்தில் அரைவாசி அல்லது மூன்றில் ஒரு பரப்பளவே பயிர் செய்ய நீர் போதுமாக உள்ளது. அதில் குடிதண்ணீருக்கும் எடுக்கப்பட்டால் விவசாயிகள் நிலை தான் என்ன?

இப்படியான நிலையில் விவசாயிகள் தங்கள் ஒரே வாழ்வாதாரமான விவசாயத்தை இழக்கும் நிலையே ஏற்படும். அவர்கள் வறுமையையும், பட்டினியையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையே ஏற்படும்.

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 18 அடிக்குக் குறைந்தால் கிளிநொச்சி கிணறுகளின் நீர்மட்டம் குறைய ஆரம்பித்து விடும். ஆகவே 10 அடிக்குக் கீழே குறைவடையுமானால் பல கிராமங்களின் கிணறுகள் வற்றி விடும். கிளிநொச்சி குடிதண்ணீருக்கே வழியின்றி அவலப்படும் நிலைமையும் ஏற்படும். இந்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது நீரை வழங்கியே ஆக வேண்டும். இப்படியான நிலையில் இரு பிரதேசங்களுமே குடிதண்ணீர் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்து அல்லற்பட வேண்டிய நிலை ஏற்படும். காலப் போக்கில் சில கிராமங்கள் குடிபெயர வேண்டிய நிலையும் ஏற்படலாம். அதேவேளையில் மொறவந்தவிலிருந்து வரும் நீர் நேரடியாக குழாய்கள் மூலம் இரணைமடுவுக்கு வரப்போவதில்லை. அது கலாவேவ, ராஜாங்கனை ஆகிய பெரிய குளங்கள் உட்பட நூற்றுக்கணக்கான சிறிய குளங்களையும் நிரப்பி அவற்றின் கீழ் விளைவிக்கப்படும் வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சி அவற்றின் கழிவு நீரே மாமடு ஊடாக சேமமடுவில் கலக்க கனகராயன் ஆற்றில் சேரும். அப்படியான கழிவு நீரின் அளவு எப்படியிருக்கும் எனச் சொல்லத் தேவையில்லை. அது மட்டுமன்றி அது வயல்களின் கழிவு நீராகையால் அதில் உள்ள நைற்றேற் அளவு ஆபத்தான அளவிலேயே இருக்கும். எனவே மத்திய மலைநாட்டிலிருந்து வரும் நீர் இரணைமடுவுக்கு வரும் என்பது ஓர் அப்பட்டமான ஏமாற்றாகும்.

### இருபிரதேசங்களும் எதிர்நோக்கும் அபாயம்.

எனவே இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் வழங்கும் திட்டம் மூலம் இரு பிரதேசங்களும் பெரும் நன்மைகளை விடப் பல மடங்கு தீமையே ஏற்படும். கிளிநொச்சி விவசாயம் பெருமளவு பாதிப்புக்குள்ளாவதுடன் சில சந்தர்ப்பங்களில் கிளிநொச்சியிலேயே குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலையும் உருவாகும். வடக்கில் உணவு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும்கிளிநொச்சிதன்னிலைஇழந்துபேரழிவை நோக்கித் தள்ளப்படும் அபா யம் ஏற்படும். அதேவேளை யாழ்ப்பாணத்தில் கிணற்று நீர் உவரடைவதன் மூலம் பல விளை நிலங்கள் தரிசாகி விடும். வறட்சி நிலவும் காலங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இரணைமடு நீர் வழங்கப்படும் நிலை உருவாகும்.

இரணைமடு நீர் மட்டம் நிறைவடையும் போது விவசாயத் தேவையா குடிதண்ணீர்த் தேவையா என்ற கேள்வி எழும் போது குடிதண்ணீருக்கே முதன்மையளிக்கப்படும். இதனால் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்படுவது தவிர்க்க முடியாதாகிவிடும். இந்தியாவில் காவிரி நீர்ப் பிரச்சினை போல் பெரியாறு அணைப் பிரச்சினை போல் நீடிக்கப்படாத முரண்பாடுகள் வெடிக்கும்.

எப்படியிருப்பினும் இரணைமடு நீர் விநியோகத்திட்டம் அடிப்படையில் யாழ்ப்பாண மக்களுக்கும், கிளிநொச்சி மக்களுக்கும் அபிவிருத்தியின் பெயரால் இழைக்கப்படும் பெரும் அநீதி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காலப்போக்கில் இந்தப் பிரதேசங்கள் பாலைவனமாகும் அபாயத்தை எதிர்நோக்க வேண்டி வரும்.

கந்தவனம்
கோணேஸ்வரன்

# மீனவர்களின்

## மனக்கசப்பு நீக்கப்பட வேண்டும்

கொக்கிளாய்க் கடல்நீரேரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த தமிழ் மீனவர்களின் படகுகளும் வலைகளும் கடந்த வாரம் காணாமற்போயிருந்தன. இராசரத்தினம் கைலைநாதன் என்பவரின் ரூ.575ஆயிரம் பெறுமதியான படகும், இயந்திரமும், வலையும், கந்தையா கேதீஸ்வரனின் ரூ.285ஆயிரம் பெறுமதியான படகும், இயந்திரமும், ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளையினதும், நடராசா நித்தியானந்தினத்தினதும் தலா ரூ.25 ஆயிரம் பெறுமதியான இரண்டு வள்ளங்களும், துளசி மணி சிவபாக்கியத்தின் ரூ.45 ஆயிரம் பெறுமதியான வள்ளமும் வலையும், ஆசீர்வாதம் அன்ரன், றொபேட் ஆகியோரின் தலா ரூ.40 ஆயிரம் பெறுமதியான வலைகளுமெனப் பெருந்தொகையான உடைமைகள் கள வாடப்பட்டிருந்தன.

இவற்றுள் ஒரு படகும், வள்ளமும் உடைக்கப்பட்ட நிலையில் கடல்நீரேரியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏனையவை பற்றிய தகவல்கள் எவையும் கிடைக்க வில்லை. இச்சம்பவத்துக்கு மூன்று நாள்களுக்கு முன்னர் சில முஸ்லிம் மீனவர்கள் தங்களுடன் பிரச்சினைப்பட்டதாகவும் தொழில் உடைமைகள் சிலவற்றைப் பறித்துச்சென்ற தாகவும் கூறும் கொக்கிளாய் வாழ் தமிழ் மீனவர்கள் இதுவும் முஸ்லிம் மீனவர்களின் செயலாகத்தான் இருக்க வேண்டும் என அடித்துச் சொல்கிறார்கள்.

ஆனால், முஸ்லிம் மீனவர்களின் கருத்தோ வேறு விதமாக இருக்கிறது. புல்மோட்டைக் கிராமத்தைச் சேர்ந்த தங்களுக்குள்ள மிகப் பெரிய வாழ்வாதாரம் இந்நீரேரியே என்றும் தங்களை தொழில் செய்யவிடாமல் கொக்கி ளாய் மீனவர்கள் தொடர்ந்தும் இடையூறு செய்துவந்ததாகவும், சில சமயங்களில் தங்களின் மீன்பிடி உபகரணங்களை அவர்கள் கவர்ந்து சென்றுள்ளதாக வும் கூறுகிறார் கள். அதுவுமல்லாமல் சில வாரங்களுக்கு முன்னர் மீன்பிடித்துறை அதிகாரிகளால் தங்கள் தொழில் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதற்கும் தமிழ்மீனவர்களே பின்ன ணியில் இருந்திருக்கிறார்கள் எனவும் திட்ட வட்டமாகத் தெரிவிக்கிறார்கள்.

ஆனால், மீன்பிடி அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட தொழில்உபகரணங்கள் அனைத் தும் சட்டப்படித் தடைசெய்யப்பட்டவையே என்றான போதிலும், இவ்வளவு காலமும் தாங்கள் தொழில் செய்து வரும்போது எது வும் கூறாதிருந்துவிட்டு இப்போது ஏன் நட வடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கள் கேட்கிறார்கள். இதனைத் தூண்டியவர்களும், ஏற்றுச்செயல்புரிந்த உத்தியோகத்தர்களும் தமிழர்களாக இருப்பதுதான் இதன் காரணம் எனவும் அப்பாவித்தனமாக யோசிக்கிறார்கள்.

இருபகுதியாரிலும் பிழை சொல்வதற்கு வலுவான, ஆழமான காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் போராட்டமெல்லாம் வயிற்றுப் பசிக்காகவே இருக்கிறது. அவர்களுக்குத் தெரிந்த ஒரே தொழில் முறையிலான உழைப்புக்கு ஊறுநேர்வதால் ஏற்படுகின்ற கோபத்தின் வெளிப்பாடாகவே இருக்கிறது. இங்கு தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற உணர்வே பிரச்சினைக்கு வலுவான காரணமாக உபயோகப்படுத்தப்படுகிறதேயொழிய அந்தக் காரணத்திலிருந்து பிரச்சினைத் தோன்றவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. மக்கள் பெருக்கமும், வேறு தொழில்களுக்கான வாய்ப்புக் குறைவும் தங்களுக்குத் தெரிந்த ஒரே தொழில்மூலம் போதியவருமானம் பெறப்படலாம் என்ற உறுதிப்பாடுதான் இன்று பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

கொக்கிளாய்க் கடல்நீரேரி முல்லைத்தீவையும் திருக்கோணமலையையும் தொட்டுநிற்கிறது. வட மாகாணத்தின் தென் எல்லையையும் கிழக்கு மாகாணத்தில் வட எல்லையையும், கிழக்குப் புறமாக இந்து சமுத்திரத்தையும் தழுவியபடி கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணி ஆகிய முல்லைத்தீவுக் கிராமங்களையும், புல்மோட்டை, தென்னமரவடி ஆகிய திருக்கோணமலை மாவட்டக் கிராமங்களையும் தொட்டுக்கொண்டு நிற்கிறது. 29.95 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவிலுள்ள இந்நீர்நிலையில் அதிகூடிய ஆழம் 13அடியேயாகும். அனேகமான பகுதிகள் மீனவர்கள் நடந்து சென்று தொழில்செய்யத்தக்கனவாக இருக்கின்றன. சிறுசிறு ஆறுகளின் நீரும், கடல்நீரும் சங்கமித்து ஆழம் குறைவாகப் பரந்து கிடப்பதால் இறால், நண்டு என்பவற்றுக்குப் பேர்போன இடமாக இருக்கின்றது. அது மட்டுமன்றி பெருங்கடலும் தொடர்புபட்ட காரணத்தால் மீன்வளத்துக்கும் இங்கு குறைச்சல் இல்லை.

கடற்றொழில் அமைச்சராக இருந்த பெஸ்டஸ் பெரேராவின் ஒப்பத்துடன் 12.06. 1981இல் வெளியான அரச வர்த்தமானியின் படி கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணி, தென்னமரவாடி, புல்மோட்டை ஆகிய ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களையும், முகத்துவாரத்தில் தங்கி குடியேறிய மீனவர்களையும் தவிர ஏனையோருக்கு கொக்கிளாய் கடனீரேரியில் மீன்பிடிப்பதற்கான உரிமை தடைசெய்யப்பட்டிருக்கிறது. மீன்பிடித்தலுக்குரிய எல்லையாகக் கடல்நீரேரியின் முகத்துவாயை அண்டிய ஒரு சதுரமைல் இடப்பரப்பளவும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்த எல்லைக்குள் வீச்சுவலை தவிர்ந்த வேறெவ் வலையையும் பயன்படுத்தல் தடைசெய்யப்பட்டு இருக்கிறது. வீச்சு வலையின் கண்ணளவு ஓரங்குலத்துக்கும் குறையலாகாது எனவும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட எல்லையைத் தவிர்ந்து வெளிநீர்ப் பரப்பில் மீன்பிடிப்பவர்கள் வீச்சு வலையையும் விடுவலையையும் தவிர்ந்த வேறெத்தகைய வலைகளையும் பயன்படுத் தலாகாது. வீச்சு வலையின் கண் அளவு ஓர் அங்குலத்துக்குக் குறையாமலும், விடு வலையின் கண்ணளவும் இரண்டு அங் குலத்துக்குக் குறையாமலும் அமைதல் கட்டாயம் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. வீச்சுவலை என்பது, 15 முதல் 20 அடிவரையிலான ஆரையுள்ளதாகவும், ஆழம்குறைந்த நீர்ப்பரப்பில் பயன்படுத்தத் தக்கதாகவும் இருப்பதுடன் விடுவலையென்பது நாற்சதுர வடிவிலான ஏதேனும் வலை எனப் பொருள்படும் எனவும் அவ் வர்த்தமானி கூறுகிறது. இயந்திரவலுப்படகானது 22 அடிக்கும் குறைவாக இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

எவ்வாறெனினும் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, புல்மோட்டை, தென்னமரவாடி மற்றும் முகத்து வாயிலில் குடியேறித் தொழில்புரிகின்ற சிங்கள மக்கள் உட்பட எவராயினும் முல்லைத்தீவு அரசஅதிபரின் எழுத்துமூல அனு மதியைப் பெற்றுத் தொழில் செய்ய வேண்டும் எனவும், அவ்வனுமதியானது ஓராண்டுக்கு இரண்டாயிரம் மீனவர்க ளுக்கு மேற்படாதவர்களாகவும் அவர்களுள் விடுவலை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அறுநூறுக்கு மேற்படாததாகவும் அமைய வேண்டும் எனவும் வலியுறுத்தல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நீரேரியின் மீன்பிடித்துறையின் முன்னோடிகள் கொக்கிளாயைச் சேர்ந்த கிறிஸ்தவ சமூகத்தினர் எனக் கருதப்படுகிறது. தாங்களாகவே நூல் திரித்து, வலைகள் பின்னி அவற்றின் உதவியோடு இவர்கள் மீன்பிடித்து வந்தார்கள். பெரியவெளிகளில் இராட்டினங்களை வைத்து நூல் திரிக்கும் காட்சிகள் ஒரு காலத்தில் இங்கு சர்வ சாதார ணமாக இருந்தன. நைலோன் நூல் அறிமுக மான பிறகு இத்தகைய நூல் திரிப்பு முறை தேவையற்றுப் போயிற்று. கட்டு மரத்தில் பாய்விரித்துப் பயணம் செய்வதும், இறால் அதிகமாகப் பிடிபடும் நாள்களில் இரவு முழுவதும் கண்விழித்துச் சூள்விளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு இறால் பிடிப்பதும், கரையை அண்டியுள்ள பகுதிகளில் பெண்கள், சிறுவர்கள் கூட இறால் பிடிப்பதும் இங்கு சாதாரண காட்சிகளாக இருந்தன.

இவர்களுடன் புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் மீனவர்களும் இணைந்து கொண்டார்கள். இரவீரவாக வலை வீசுவதும்,



அத்தாங்குக் கொண்டு மீன்பிடிப்பதும், இறால் பிடிப்பதுமென இருசாராரும் தங்கள் தங்கள் இயலுமைக்கேற்ப தொழில் செய் தார்கள்.

இவ்வாறு பிடிக்கப்படும் மீன்கள் சிறு வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டவை போக ஏனையவை கருவாடு போடப் பயன் படுத்தப்பட்டன. பதவியாவிலிருந்து வரும் சிங்கள வியாபாரிகள் கொடுவா, பாரை போன்ற மீன்வகைக ளுக்கு இறாத்தலுக்கு 35சதமும், சுறாவுக்கு 20சதமும், ஏனைய மீன்வகைகளுக்கு 15சதமும் அதற்குக் குறைவாகவும் கொடுத்துப் பெற்றுச் சென்றனர். தென்னமரவடி மக்கள் மரக்கறி, பால், தயிர் என்பவற்றைக் கொடுத்து நண்டு, இறால், மீன் ஆகியவற்றை எடுத்துச் செல்வார்கள். மீன்கள் முல்லைத்தீவுச் சந்தைக்கு எடுத்துச் செல்லப்படுவதுமுண்டு.

இன்றைய நாள்களில் பெருங்கடலிற்கூட அரிதாகக் காணப்படும் வேளாச்சுறா எனும் ஒருவகைச் சுறாகூட கடல்நீரேரியில் பிடிபட்ட காலங்கள் இருந்தன. இத்தகைய சுறாக்கள் சாதாரணமாகவே ஆயிரம் இறாத்தல் அள வில் காணப்படும் தன்மை உடையன. இது முகத்துவாரத்துக் கூடாக ஏரியை நோக்கிக் கடல்நீர் உட்புகுவதால் ஏற்பட்ட பயன்களில் ஒன்று. மழைக் காலங்களில் தென்னமரவாடிக்கு அண்மித்துள்ள கந்தசாமிமலை எனும் இடத்தில்வாடிகள் அமைத்து தமிழ்மீனவர்கள் தொழில் செய்து வந்திருக்கிறார்கள்.

கொழும்புக்கு மீன் அனுப்பும் வசதி ஏற்பட்ட காலங்களில் சில வெளியூர் மீனவர்கள் கொக்கிளாய் முகத்துவாரத்தில் குடியேறத் தொடங்கினர். வியாபாரநோக்கம் கருதி இவர்களுக்குத் தமிழ் மக்கள் ஆதரவளித் தனர். பிற்காலத்தில் கடல் நீரேரியில் மீன் பிடிக்கும் உரிமை தமிழ்பேசும் மக்களின் நான்கு கிராமங்களுடன் இப் பகுதி மக்களுக்கும் கிடைக்கப்பெற்றது.

கொக்கிளாய் முகத்துவாரக் கடல்வாயிலில் ஏரி நீர் கடலுக்குப்புகும் வேளைகளில் அதனை மறித்து நீர்வேகத்துடன் கடலை நோக்கி நகரும் மீன்களைப் பிடிக்கும் முறை யொன்று அப்போது அறிமுகமானது. இந்த முறையிலிருந்து கட்டுவலைகளும் அதிலிருந்து கூட்டுவலைகளும் எனப் புதிய உத்திகளும் தோன்றின. இம் முறையில் தொழில் செய்வதற்கு தமிழ்பகுதியின் மீனவர்சங் கமான செ‌ன்.அன்டனீஸ் மீனவர்சங்கம் முகத்துவாரத்தை அண்டிய பகுதியில் தமது சங்க உறுப்பினர்கள் கட்டுவலை போடுவ தற்கு பாடுகள் எனப்படும் இடங்களை வரையறை செய்துகொடுத்திருந்தது. அந்த வரை யறைக்கப்பால் அவர்களது வலைவிரிப்புகள் இடம்பெறாதவாறும் பார்த்துக்கொண்டது. இதன் எல்லை முகத்துவாரப் புளியடியிலி ருந்து தொடங்கப்பட்டிருந்தது. அதேவேளை புல்மோட்டை மீனவர்களும் இவ்வாறான தொழில் முறைகளை வகுத்துக்கொண்டார்கள். தீவர்த்தி வெளிச்சத்துடன் ஆழங் குறைந்த பகுதிகளில் குச்சிகள் மூலம் இறால் பிடிக்கும் கரப்புமுறைகளும் இதன்போது தோற்றம்பெற்றன.

இக்காலப்பகுதியில் கூளக்கடா வீச்சு முறையும் அறிமுகமாகியது. கூளக்கடா எனும் பறவையினம் தமது உடலை நீருள் அமிழ்த்திக்கொண்டு தலை மாத்திரம் வெளி யில் தெரியும்படியாகக் காத்திருந்து மீன்பிடிப் பதுபோல் ஆழம் குறைந்த பகுதிகளில் தமது உடல்முழுவதையும் நீரில் மறைத்துக் கொண்டு தலையைமாத்திரம் வெளியே வைத்துக் காத்திருந்து வலைவீசும் முறையையே கூளக்கடாவீச்சு என்பர். இதனால் அதிகளவில் மீன்பிடிக்க முடிந்ததாக அப்போதைய மீனவர்கள் பேசிக்கொள்வார்கள்.

இறால் அதிகமாகப் பிடிபடும் காலங்களில் கிண்ணியா, அக்கரைப்பற்று, காத்தான்குடி போன்ற பகுதிகளிலிருந்து முஸ்லிம் மீனவர்கள் தொழிலுக்காகத் தற்காலிகமாக வந்துவந்து போவார்கள். இவர்களில் அனேகர் வீச்சுத் தொழிலிலேயே ஈடுபட்டிருந்தார்கள். இப்படி வந்தவர்களில் அபூபக்கர் என்பவர் புதிய உத்தியுடன் ஒரு தொழிலைத் தொடங்கினார். இழந்த முனை எனும் இடத்தில் கரையோரமாக ஓலைகளிலான சிறிய தேநீர்க் கடையொன்றை அமைத்தார். பலகாரம், வாழைப்பழம், தேநீர் என்பவற்றை வைத்து வியாபாரத்தைத் தொடங்கினார். இவரிடம் கொள்வனவு செய்தவர்கள் ஒவ்வொரு பொருளுக்கும் இவ்விரண்டு கருவண்டு இறால் வீதம் கொடுத்தே பொருள்களைப் பெற்றுக் கொண்டனர். பணத்துக்கான வியாபாரம் என்பது அங்கு கிடையவே கிடையாது. இறால்களைச் சேகரித்து அவற்றை விற்பதன் மூலம் அபூபக்கர் தனது வருமானத்தைத் தேடிக் கொண்டார்.

தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் என எல்லா மக்களும் இனமதபேதமறியாது மீன்பிடித் தொழிலாளர்கள் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு அந்நியோன்னியமாக ஒருவழிப் பரம்பரை போலவே வாழ்ந்து வந்த நிலைமை அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் சீர்குலையத் தொடங்கியது.

1977இல் கொக்கிளாய்வாழ் தமிழர்களுக்கும், முகத்துவராம்வாழ் சிங்களவர்களுக்கும் முறுகல் எழுந்தது. கொக்கிளாய் முகத்துவாரம் தொடக்கம் புளியமுனைவரையிலான தமிழ் மக்களின் வீடுகள், வாடிகள் அனைத்தும் தீயிடப்பட்டன. ஒருவரையொருவர் முகம்பார்க்கவோ மனமிட்டுப்பேசவோ முடியாத நிலையில் மீனவர் சமுதாயம் சிங்களவர், தமிழர் எனத் தாங்களாகவே பிளவுப்பட்டு நின்றது. இதனை நீக்கி அனைவரதும் ஒற்றுமை நிலைக்க வேண்டும் என்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். செல்லத்தம்பு, திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற மட்டத்தில் முயற்சிகள் செய்து அமைதி நிலைநாட்டியதை இன்றும் மீனவர்கள், மக்கள் பெருமையுடன் நினைவு கூருகிறார்கள்.

அதன் பிறகு 1983 இனக்கலவரங் காரணமாக கொக்கிளாயையும் அதனை அண்டிய கிராமங்களையும் சேர்ந்த தமிழ்மக்கள் உயிர்ப்பாதுகாப்புக் கருதி இடம்பெயர வேண்டியதாயிற்று. அரசின் ஒழுங்குமுறைகள் சிதைந்தன. அதிகாரிகளின் நடைமுறைகள் நிலைகுலைந்தன. யாரும் யாரையும் கொல்லலாம், எவரும் எதனையும் செய்யலாம் என்று நாடே தலை கீழாகிப் போனது. தமிழ்மக்களின் பிடி கொக்கிளாய்க் கடல்நீரேரியில் பலவீனப்பட்டுப்போனது.


இப்போது அண்மைக் காலங்களில் இடம் பெற்ற, தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் நிகழ்வுகள் யாவும் ஒழுங்கு குறைந்த காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகத் தோன்றிய வையே என்பதில் சந்தேகங்கிடையாது.

எவரையும் வருத்தி எவரும் வாழமுடியாது: அப்படி வாழவுங்கூடாது. ஆண்டாண்டு காலமாகத் தமது தாயகப்பகுதியில் வாழ்ந்த மக்கள், இனிமேலும் வாழவேண்டிய மக்கள், ஒருவருக்கொருவர் மனக்கசப்புடன் காலந்தள்ள முயலலாகாது. எனவே, தமிழ் மீனவர்களின் பாதிப்புகளையும் முஸ்லிம் மீனவர்களின் கஷ்டத்தையும் கருத்திற்கொண்டு ஒரு நல்ல தீர்வின்மூலம் இவர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பெரும்பான்மையினத்தின் அடக்குமுறைகளிலிருந்து விடுபடுவதற்கு போராடுகின்ற மக்கள் தங்களுக்குள் நல்லுறவைப் பேணாவிட்டால் யாருக்கு இலாபம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும், நல்லாட்சிக்கான மக்கள் அமைப்பும் இணைந்து செயல்படுவதன்மூலமே சிறந்த பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஓம் கணபதி





# உரும்பிராய் – பரத்தைப்புலம் கரு

# மஹாகும்பாபிஷேக

## ஆசியுரை

மூவரும் தேவரும் ஏவரும் போற்றும் தனிப்பெரும் தெய்வமாய் இடர்படும் அடியார்களது துயர் தீர்த் தருளும் அரும்பெரும் சோதியாய் விளங்கும் விநாயகப்



பெருமான் உரும்பிராய் பரத்தைப் புலம் ஸ்ரீகருணாகரப் பிள்ளையார் கோயிலில் கருணை மழை பொழிந் தருளும் கருணாமூர்த்தியாக ஸ்ரீகரு ணாகரப் பிள்ளையார் என்னும் திருநாமம் தாங்கி அருட்கடாச்சம் அருளுகின்றார்.

சரித்திரப் புகழ்பெற்றும் கல் வெட்டு சான்றுடனும் பழைமையும் பெருமையும் பெற்ற இவ்வாலயம் பெரும் திருப்பணிகள் நிறைவுபெற்று வானளாவிய இராஜகோபுரம், சுவர்ணமயமான மூலஸ்தான விமானம், மணிக் கோபுரம், மணிமண்டபம் மற்றும் விமானங்கள், மண்டபங்கள், துவஜஸ்தம்பம், வசந்த மண்டபம், மஹோற்சவ யாகசாலை, பரிவார ஆலயங்கள் ஆகியன புனருத்தாரணம் செய்யப்பட்டும் புதிய திருப்பணிகள் சேர்க்கப்பட்டும் கலையம்சங்கள் நிறைந்த சுந்தரத் திருக்கோயிலாகக் காட்சியளிக் கின்றது. ஆலயத் திருப்பணிகளை அடியார்களுடைய பேருதவிகளுடன் அயராது உழைத்து சிறப்பாகப் பணிபுரிந்த திருப்பணிச் சபையினரின் பணியானது மிகவும் மகத்தான பணியாகும். ஸ்ரீகருணாகரப் பெரு மானுடைய மஹா கும்பாபிஷேக விழா தை மாதம் 24ஆம் நாள் (06.02.2014) வியாழக்கிழமை நடை பெறுகின்றது. பெரும் புண்ணியப் பேறான மஹா கும்பாபிஷேகத்தைத் தரிசிக்கும் அடியார்கள் யாவரும் புண்ணிய சீலர்களே. நமது குலதெய்வமான ஸ்ரீ கருணாகரப் பெருமானுடைய பெரும் பணிகளில் ஈடுபட்ட அடியார்கள் திருப்பணிச் சபையினர் உட்பட மஹா கும்பாபி ஷேகத்தினைத் தரிசிக்கும் அடியார்கள் யாவரும் ஸ்ரீ கருணாகரப் பெருமானுடைய திருவருட் பேற்றினை நிறைவாகப் பெற்று நீண்ட ஆயுள் நிறைவான செல்வங்கள் பொருந்த இனிதே வாழ வேண்டும் என்று ஸ்ரீகருணாகரப் பெருமானுடை திருவடிகளைப் போற்றி எமது நல்லாசிகளை நல்கு வோமாக!

கருணாகரப் பெருமான் பாதம் கனவிலும் துணை செய்யும்

**சிவஸ்ரீ சபாரத்தினபரமேஸ்வரக் குருக்கள்**
(மஹா கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார்)

## விநாயகரின் அருள் பொங்கட்டும்



எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களாக ஆலயங்கள் விளங்கு கின்றன. ஆலயங்களைப் புதுக்கும் அபிஷேக ஆராதனைகளின் வழி அனைத்து மனங்களும் ஆத்மவல் லமை பெறுகின்றன. கூட்டுவாழ்வுக் கான சமூக விழுமியங்கள் உறுதிபெறு கின்றன. இந்தவகையில் எங்கள் மரபு வழிக் கிராமமான உரும்பிராயில் விளங் கும் வரலாற்றுப் பெருமைமிக்க ஸ்ரீ கருணாகரப்பிள்ளை யாருக்கு மஹா கும்பாபிஷேகம் எனும் செய்தியிலே மனது மிகவாய் நிறைகின்றது. இவ்வேளை விக்கினங் களுக்குள் நலிந்த மக்களின் மீள் எழுச்சிக்கான தள மாற்றத்தினை இப் பெருந்திருவிழா வசமாக்கவும் அனைத்து மக்களுக்குமான வாழ்வியல் மேம்பாடு கைகூடவும் கருணாகரப் பிள்ளையா ரின் எல்லையிலாக் கருணையை இறைஞ்சுகின்றேன்.

*மேன்மைப் படுவாய் மனமே கேள்!*
*விண்ணினிடி முன் விழுந்தாலும்*
*பாண்மை தவறி நடுங்காதே*
*பயந்தாலேதும் பயனில்லை*
*யான் முன்னுரைத்தேன் கோடிமுறை*
*இன்னும் கோடி முறை சொல்வேன்*
*ஆன்மாவான கணபதியின்*
*அருளுண்டு அச்சமில்லையே - பாரதி*

பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்,
முன்னாள் துணைவேந்தர், சமூகவியல் பேராசிரியர்,
சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## வேண்டுவார் வேண்டும் வரம் கிட்டட்டும்

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலில் இன்று கும்பா விஷேகம் நடைபெறுவது மன மகிழ்ச்சியை தருகின்றது. பழைமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இவ்வாலயம் உரும்பிராய் பிரதேசத்தில்



வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு நீண்ட காலமாக கருணாகர விநாயகனாக எழுந் தருளியிருந்து அருள்புரிவது அனைவருக்கும் மன நிறைவைத் தருகின்றது. பன்னிரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தில் நடைபெறுவது ஆலயத் துக்கும், ஊருக்கும் புனிதத்தை தருவதாகும். நீண்ட குரு மார் பாரம்பரியத்தைக் கொண்ட குருமார்களால் பூஜிக்கப்பட்ட கருணாகர குருக்கள் வைத்தீஸ்வரக் குருக்கள், சபாரட் ணக்குருக்கள் போன்ற சிவாச்சாரியார்களினால் பூஜிக்கப்பட்ட கருணாகர விநாயகர் இக் கும்பாவிஷேகத்தினை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம் ஆக! இன்று வெளிவரும் கும்பாபிஷேக மலர் இவ்வூருடைய ஆவணப் பொக் கிசம் ஆகும். இதனை அனைவரும் படித்து பயன் பெறவும் கும்பாபி ஷேகத்தை சிறப் புச் செய்யும் அன்பு உள்ளங்களையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு.*

இரண்டாவது குருமஹாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

## ஆசியுரை

அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்திருக்கின்ற இறைவன் ஆன்மாக் களிடத்து வைத்துள்ள அளப்பரிய கைமாறற்ற பெருங்கருணையினால் இனிது வீற்றிருந்து திருவருள் செய்யுமிடம் ஆலயமாகும். விக்கினங்களைத் தீர்த்தருளும் விநாயகப்



பெருமானின் மஹா கும்பாபிஷேக விழா இன்று நடைபெறு கின்றது. எமது முன்னோர்களால் ஸ்தாபித்து பூஜிக்கப்பட்ட இவ்வாலயம் காலத்திற்குக் காலம் வேண்டிய திருப்பணிகள் செய்விக்கப் பட்டு மஹாகும்பாவிஷேகம், விழாக்கள், பூஜைகள் சிறப்பாக நடை பெறுவதற்கு திருவருள் காரணமாகும். கருணாகரப்பெரு[illegible] தம்மைவழிபடும் அடியார்களுடைய சோத னைகள் நீக்கி வேதனை களைத் தீர்த்து ரட்ஷித்து அருள் புரிகின்றார். ஆலய திருப் பணிகளுக் கும் உபயங்கள் ஆகியனவற்றுக்கும் வேண்டிய நிதியுதவிகள், பொருளுதவிகள் சரீர உதவிகள் ஆகியனவற்றை வழங்கும் உள்ளூர், அயலூர், வெளியூர் அடியார்களுக்கும் ஆலயத்தில் வேண்டிய திருப்பணிகளை நிறைவேற்றி அரும்பணிபுரியும் திருப்பணிச் சபையினருக்கும் காண்பதற்கரிய மஹாகும்பாபிஷேக விழாவைத் தரிசிக்கும் அடியார்கள் எல்லோருக்கும் எல்லாம் வல்ல கருணாகரப் பெருமானுடைய திருவருள் என்றும் குறைவின்றி நிறைவாகக் கிடைக்கப் பெற்று அனைவரும் சகல சௌபாக்கியங்களுடன் இனிது வாழ வேண்டும் என்று திருவருள் வேண்டி எமது நல்லாசி நல்குவோமாக!

ஆதீனகர்த்தா சிவாச்சார்ய மணிபிரதிஷ்டாதிலகம்
**சிவஸ்ரீ வைத்தீஸ்வரசபாரத்தினக்குருக்கள்**

## கும்பாபிஷேக பேரருள் கிடைக்கட்டும்



பசுமைமிகு தோட்டங்களும், பல்வேறு வளங்களும் அமையப்பெற்ற உரும்பிராயில் எழுந்தருளி தன் பெருங்கருணைத்திறத்தினால் அவ்வூர் மக்களுக்கு அருள்பாலித்து, அனுக்கிரகித்துவரும் உரும்பிராய் பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையாருக்கு மஹாகும்பாபிஷேகம் நிகழவுள்ள இத் தினம் மகத்தான திருநாளாகும். உரும்பிராய் வாழ் மக்களின் குல தெய்வமாக விளங்கும் திருவருட்சிறப்புமிக்க இத் தலத்தில் எல்லாவற்றுக்கும் காரண காரியராக விளங்கும் விநாயகப் பெருமான் கருணாகரப் பெருமானாக எழுந்தருளியுள்ளார். விநாயகப் பெருமானின் பேரருளில் திளைத்த மக்கள் எம்பெரு மானுக்கு மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடத்த எடுத்த முயற்சி இன்று அவனருளால் கைகூடியுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். உரும்பிராய் மக்களின் தனித்துவத்தைப் பேணுவதாக விளங்கும் இவ்வாலயம் இராஜ கோபுரம், மணிமண்டபம் ஆகியவற்றுடன் கம்பீரமாகக் காட்சி யளிக்கின்றது. இத்தகைய சிறப்பு வா[illegible]த கருணைமிகு ஸ்ரீ கருணாகரப் பிள்ளையாரின் பேரருள் அனைவருக்கும் கிடைக்கவும், பக்திப் பரவசத்தோடு பக்தர்கள் கூடிநின்று எடுக்கும் இம் [illegible]ா கும்பாபிஷேக நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிகழவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம், அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

## செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை



கருணாகரப் பிள்ளையார் கோயில் மிக தொன்மை வாய்ந்த வரலாற்றுக் கோயிலாக விளங்குகின்றது. உரும்பிராய் வாழ் மக்களுக்கும் இணுவில் வாழ் மக்களுக்கும் குல தெய்வமாய் விளங்கும் கருணாகரப் பிள்ளையாரின் திருவருளை யான் நன்கு அறிவேன். தனது முதுமையை பொருட்படுத்தாது ஆலய வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றி வரும் சிவஸ்ரீ.சபாரத்தினக் குருக்கள் ஐயா அவர்களின் ஆளுமையை அகமகிழ்ந்து போற்றுகின்றேன். கருணாகரப் பிள்ளையார் ஆலய திருப்பணியில் மலேசியா, சிங்கப்பூர் வாழ் மக்கள் அறுபதுகளில் பெரும் பங்கு வகித்தனர். இவ்வாலய வளர்ச்சியில் அயராது உழைத்தவர்களில் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களின் தூயபணி மறக்க முடியாது. போர்ச்சூழலில் கருணாகரப்பிள்ளையாரின் சொத்துக்களைப் பாதுகாப்பதில் இவர் ஆற்றிய தொண்டு முதன்மையானது. கருணாகரப் பிள்ளையாரின் திருத்தொண்டில் ஈடுபட்டு உழைத்தவர்களில் காலஞ்சென்ற கணக்காளர் பசுபதி ஐயாவின் பணியும் மறக்க முடியாது. இன்று ஆலய வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படுகின்ற திருப்பணிச்சபை உறுப்பினர்களுக்கும் அடியார்களுக்கும் எனது இனிய வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றேன்.

\- ஆறு.திருமுருகன், தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## அடியார்க்கு அருளும் கருணாகரன்

சைவமும், தமிழும் சிறந்தோங்கும் கோப்பாய் பிரதேச செயலக



பிரிவிற்கு உட்பட்ட உரும்பிராய் பகுதியில் பழை மையும் சிறப்பும் வாய்ந்த ஸ்ரீகருணாகரப் பிள் ளையார் கோயில் மஹா கும்பாபிஷேக விழா இன்று நடைபெறுவதை முன்னிட்டு வெளிவரும் மஹா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிவாகமங்களும் அதன் வழிவந்த சிற்ப சாஸ்திரங்களும் பன்னிரண்டு ஆண்டுகளிற்கு ஒரு முறை ஆலயங்கள் தோறும் கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்று கூறுகின்றன. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை குணம், குறிகளோடு கூடிய தடத்த நிலையில் கொண்டு வந்து ஆன்ம ஈடேற்றத்திற்காக ஆலயம் அமைத்து அவ் விடத்தில் நிலை நிறுத்தி கிரியைகள் ஆற்றும் நிகழ்வே குடமுழுக்கு எனப்படும் கும்பாபிஷேகம் ஆகும்.

இலங்கையில் புராதன ஆலயங்களில் ஒன்றான கருணாகரப் பிள்ளையார் ஆலயம் அடியார்களுக்கு அருளினை அள்ளி வழங்கிவருகின்றது. அடியார்களின் உதவியுடன் ஆலயத் திருப்பணி மேலோங்கி நிற்பதுடன் திருப்பணிச் சபையினரின் செயலாற்றலும் பாராட்டுதற்குரியது. எனவே இத்தெய்வப் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் பிள்ளையாரின் திருவருள் நிறைவாகக் கிடைத்தருள வாழ்த்தி நிற்கின்றேன்.

*'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'*

மருதலிங்கம் பிரதீபன்
பிரதேச செயலர், பிரதேச செயலகம், கோப்பாய்.

## குடமுழுக்குக் காண வாரீர்

*ஒப்பரிய உரும்பிராய் பக்திமிகு பரத்தைப்புலம்தனில் கோயில் கொண்டு*
*செப்பரிய கருணை மழை தன்னடியவர்க்கு பொழிந்ததால்*
*அப்பெரிய கோபுரமும் உடன்உறை பரிவார மூர்த்திகளும் கொண்ட*
*இப்பெரிய திருப்பணியைச் செய்ய வைத்தனன் கருணாகரன் திருவருளே.*

ஆலயங்கள் புனரமைப்புச் செய்தலும், கும்பாபிஷேகம் செய்விப்பதும், அதில்




பங்குகொண்டு பணியாற்றுவதும், தரிசிப்பதும் அளப்பரிய புண்ணி யமாகும். அடியவர்களின் ஆன்மீக உணர்வுகள் மேலோங்கவும், ஊரின் தூய்மை அதிகரிக்கவும் திருப்பணி செய்வதன் மூலம் திருப் தியையும் தரவல்லது. முடிவில் திருவருள் சான்னித்தியம் அதிகரிக் கவும், ஆலயம் புதுப் பொலிவு பெறவும் குடமுழுக்கு (மஹா கும்பாபி ஷேகம்) செய்யப்படுகின்றது. உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன் றாக விளங்குகின்றது. ஓங்காரமூர்த்தி ஆகிய பிள்ளையாரின் திருவடி களை மனதிலே நினைத்தால் தொல்லை, துன்பம், துயரம் முதலானவை நீங்கப்பெற்று நல்வாழ்வைப் பெறமுடியும். கருணாகரப் பிள்ளையாரை வழிபடுகிறவர் கள், வாழ்க்கையில் சகல செல்வங்களையும் பெற்று நற்கதி அடைவார்கள். இதனா லேயே கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும் என்று பெரியோர்கள் கூறு வார்கள். இப்பணியில் ஆட்பட்ட அனைவரும் ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் திருவரு ளால் சகல பாக்கியங்களும் குறையிலாது பெறவும் ஆலயக் குருமார்கள், கும்பாபிஷேக குருமார்கள், அழகுமிளிர சிற்பங்களை, வர்ண வேலைகளை செய்த ஸ்தபதிகள், ஏனையோர்கள், கருணாகரன் அடியவர்கள், கருணாகரப் பெருமானின் கும்பாபிஷேக தரிசனத்தின் மூலம் எல்லா நன்மையுமுண்டாகவும், கும்பாபிஷேகம் சிறப்புறவும் ஸ்ரீகரு ணாகரப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

*'கருணாகரப் பெருமான் பாதம் கனவிலும் துணை செய்யும்'*

அ.ஈஸ்வரநாதன், திருப்பணிச் சபை சார்பில், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

**கும்பாபிஷேகம் சிறப்புறப் பிரார்த்திப்பவர்கள் திரு.பொ.சிதம்பரநாதன் குடும்பம்**

...பதி துணை



# கருணைமிகு ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோயில்

# ஷக சிறப்பு மலர் – 06.02.2014

## கருணைமிகு கருணாகர விநாயகர்



யாழ்ப்பாண நன்னகரிலே பிரசித்த பெற்ற ஆலயங்களாக திகழ்கின்ற விநாயக ராலயங்களிலே உரும்பிராய் ஸ்ரீகருணாகரப் பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும். இந்த ஆலயத்தைச் சுற்றிவர இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயம் காரைக் கால் சிவன் தேவாலயம் முன் பக்கத்தில் சுப்பிரமணியர் தேவாலயம் தெற்கே அன்னங்கை பூதவரா யர் கோயில், முன்னால் பர்வதவர்த்தினி அம்பாள் ஆலயம் இப்படியாக பல ஆலயங்கள் புடைசூழ நடுநாயக மாக விநாயகப் பெருமான் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். சரித்திரப் பெருமை பெற்ற ஆலயத்தின் தேவஸ்தான முதல் வராகவும் சிறந்த ஆக்ம விற்பன்னராக திகழ்பவருமான சிவஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்கள் ஆலய கைங்கர்யங்களை நடத்தி வருகிறார். பல கும்பாபிஷேகங்களை ஸ்ரீலங்காவிலும் வெளிநாடுகளிலும் சிறப்புற நடத்தி வைத்த பெருமைமிக்க சபா.பரமேஸ்வரக்குருக்கள் பிரதம குருவாக இருந்து மஹா கும்பாபிஷேகத்தை நடத்திவைக்கிறார். அடியார்களுடைய அனுசரணையுடன் ஆலயத் திருப்பணிச் சபையினர் திருப்பணியை அழகாக நிறைவேற்றி இருக்கிறார்கள். விஜய வருஷம் தை மாதம் 24ஆம் நாள் இன்று (06.02.2014) வியாழக்கிழமை நடைபெறும் இவ்வாலயத்தின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எல்லாச் சிறப்புகளோடும் நடைபெற கருணைமிகு கருணாகர விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன். சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்

## திருவருள் பொலிவதாக

யாழ்ப்பாணத்தில் உரும்பிராய் பரத்தைப்புலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீகருணாகரப் பிள்ளையாரது திருவருளால் கோயிற் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறி இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதையறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். மகா கும்பாபிஷேகத்தின் பயனாய் எம்பெருமானின் தெய்வீக சாந்தித்தியம் திருக்கோயிலில் நிறைந்திருக்கும். அது என்றும் குறைவுபடாதிருக்க ஆலயத்தின் நித்திய நைமித்திகக் கிரியைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.


*வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்.* என்ற வாக்கிற்கமைவாக இம் மகா கும்பாபிஷேகம் ஸ்ரீகருணாகரப் பிள்ளையாரை நாம் திரிகரண சுத்தியுடன் வழிபடவும் அதன் பெறுபேறாக அனைவரது வாழ்வு சிறக்கவும் வழிவகுப்பதாகுக என வாழ்த்துகின்றோம். கும்பாபிஷேக மலர் வெளியீடு சகல நிலைகளிலும் வெற்றிபெற எமது நல்லாசிகள் உரித்தாகுக. திருக்கோயிற் பண்பாட்டி னை மேன்மேலும் வளம் பெறச்செய்ய எம்பெரு மானது இக்கும்பாபிஷேகம் எம்மை ஆற்றுப்படுத்துவதாகுக.

ப.கோபாலகிருஷ்ணஐயர்,
இலக்கியக் கலாநிதி,
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

VIGNESWARA PAINTS & ELECTRICALS
170,Palaly Road, Kondavil.
021 222 4844

V.M.K Brothers
Palaly Road, Kondavil Junction, Kondavil.
021 222 0232

உரும்பிராய் - பரத்தைப்புலம்
கருணைமிகு ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில்
மஹா கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
காலம்:- இன்று (06.02.2014)
வியாழக்கிழமை காலை 9.00 - 10.00 மணி
வரையான சுபவேளையில்






Causeway Luxury Emulsion,
Luxury Shield,
Kenlux Enamel Paint and
Pearlescent Gold Emulsion
மூலம் வர்ணம் தீட்டப்பட்டு
காட்சிதரும் ஆலயம்.



CAUSEWAY
PAINTS LANKA (PVT) LTD
No. 15, Noel Mendis Mawatha,
Modarawila Industrial Estate, Panadura, Sri lanka.
T.P: 0382240040-5,2243166-9, 038-5599800-8
www.causewaypaints.com
(C/11394) (2.6.3)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். நீங்கள் ஒன்று பேசப்போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள்.

**இடபம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். அரச காரியங்கள் தாமதமாகி முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் இலாபத்தை அதிகரிப்பீர்கள்.

**சிங்கம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**கன்னி:** தாழ்வுமனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது.

**துலாம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத் தொல்லை விலகும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படு வீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மகரம்:** நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். சக ஊழியர் களின் ஆதரவு கிடைக்கும். விருந்தினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரத்தில் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**மீனம்:** முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. பிற்பகல் முதல் குடும்பத்தில் அமைதி திரும்பும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

## நாளை

**தை-25 வெள்ளிக்கிழமை | 07.02.2014**

திதி: அட்டமி மா.06.39 வரை
நட்சத்திரம்: பரணி
மு.ப.11.15 வரை

சுபநேரம்: 06.35-08.05வரை
இராகுகாலம்:.11.05-12.35 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து---




### பக்தி வெளிப்படும் வழிகள்

இறையன்பு வெளிப்பட்டுத் தோன்றும் வழி முறைகள் சிலவற்றை இங்கு காண்போம். முதலாவதாக இடம்பெறுவது பயபக்தி அல்லது மரியாதையாகும். ஆலயங்கள், புண்ணியத் தலங்கள் இவற்றில் மக்களுக்குப் பயபக்தி தோன்றுவது ஏன்? அங்கெல்லாம் இறைவன் வணங்கப்படுவதால் தான்; இறைவனின் சாந்நித்தியம், வெளிப்பாடு அவ்விடங்களில் இருப்பதாகக் கருதப்படுவதால் தான். ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு மத போதகர்களுக்கு மக்கள் ஏன் மரியாதை காட்டுகின்றனர்? அவர்கள் இறைவனைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதால்தான் இப்படி மரியாதை செலுத்துவது மக்களுக்கு இயல்பாக வருகிறது. அன்பிலிருந்து எழுவது தான் மரியாதை அல்லது பயபக்தி எனலாம். எவரை நாம் விரும்பவில்லையோ அவரிடம் நமக்கு மரியாதை தோன்றுவதில்லை.

அடுத்து நாம் காண்பது ப்ரீதி — இறைவனிடம் இன்பம் காணல். புலனின்பங்களில்தான் மக்கள் எவ்வளவு தீவிரப்பற்று வைக்கிறார்கள்? தான் பற்று வைத்துள்ள பொருள்களை — சிற்றின்பப் பொருள் களை — அடைவதற்கு மனிதன் எங்கு வேண்டுமானாலும் செல்லத் தயாராக இருக்கிறான்; எந்த ஆபத்தையும் ஏற்பதற்குத் தயாராக இருக்கிறான். பக்தனிடம் எதிர்பார்க்கப்படுவது இது போன்ற மிகத் தீவிரமான, துணிச்சலான அன்புதான் — இறைவனிடம் திருப்பி விடக்கூடிய அன்புதான்.

# ஆயிரக்கணக்கான பணியாளர்களை இடை நிறுத்தம் செய்யும் டெல்




'டெல்' நிறுவன அலுவலகம்.

கணினி உற்பத்தியில் பிரபல்யம் பெற்ற நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் டெல் நிறுவனமானது இந்த வாரத்தில் சுமார் 15.000 பணியாளர்களை இடை நிறுத்தம் செய்யவுள்ளது.

இதுவரை இல்லாத அளவில் பெரிய எண்ணிக்கையிலான பணியாளர்களை இடைநிறுத்தத் தயாராகும் அந்த நிறுவனம், இதுவரை எந்த விதமான உத்தியோக பூர்வ அறிவித்தலையும் வெளியிட வில்லை.

**டெல் நிறுவனமானது இந்த வாரத்தில் சுமார் 15.000 பணியாளர்களை இடை நிறுத்தம் செய்யவுள்ளது.**

எனினும் அமெரிக்காவிலுள்ள பணியாளர்களை இடைநிறுத்தவுள்ளதுடன் அவர்களுக்கு இரண்டு மாதங்களுக்கான கொடுப்பனவு, 75 சதவீத போனஸ், 18 மாதங்களுக்கான சுகாதாரக் காப்புறுதி என்பனவற்றினையும் வழங்க டெல் நிறுவனம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை, 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 8 | | 9 | 2 | | | |
| 5 | 2 | | | | | | | 3 |
| | | | 3 | 8 | 5 | | 4 | |
| 7 | | 6 | 8 | | | 3 | | 4 |
| | 5 | | 4 | | 3 | | 6 | |
| 4 | | 3 | | | 6 | 7 | | 2 |
| | 3 | | 6 | 5 | 7 | | | |
| 9 | | | | | | | 3 | 8 |
| | | | 9 | 3 | | 4 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 1 | 2 | 4 | 5 | 3 | 8 | 9 |
| 5 | 2 | 3 | 8 | 1 | 9 | 7 | 4 | 6 |
| 9 | 8 | 4 | 7 | 6 | 3 | 2 | 5 | 1 |
| 3 | 9 | 7 | 4 | 5 | 1 | 6 | 2 | 8 |
| 1 | 5 | 2 | 6 | 3 | 8 | 4 | 9 | 7 |
| 8 | 4 | 6 | 9 | 2 | 7 | 5 | 1 | 3 |
| 2 | 1 | 5 | 3 | 8 | 6 | 9 | 7 | 4 |
| 7 | 6 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 | 2 |
| 4 | 3 | 9 | 1 | 7 | 2 | 8 | 6 | 5 |



கம்பஹா, கட்டானைப் பிரதேசத்தில் பயனாளிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்து கொண்டு நீர் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ச)


## வேட்புமனுக்கள் ஏற்பு இன்றுடன் முடிவுக்கு

கொழும்பு, பெப்.6
தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான வேட்பு மனுக்கள் கையேற்கும் நடவடிக்கை இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

பிரதான கட்சிகள் நேற்றுமுன் தினம் இறுதி நேர வேட்பு மனுக்களைப் பூர்த்தி செய்யும் பரபரப்பிலும் வேட்பாளர்களின் கையொப்பம் திரட்டும் பணியிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தன.

ஐ. ம. சு. மு. வேட்புமனு தயாரிக்கும் பணிகள் நேற்று முன் தினம் நிறைவடைந்ததோடு வேட்பாளர்கள் வேட்பு மனுவில் கையொப்பமிடும் நடவடிக்கை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இம்முறை தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலே கூடுதலான கட்சிகள் போட்டியிட உள்ளதோடு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இ. தொ. காங்கிரஸ் முஸ்லிம்காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்றன தனித்துப் போட்டியிட உள்ளன. (ச)



ரவனஹொட- திம்புலுபத்தனவில் 20 அடி பள்ளத்துக்குள் விழுந்தது பஸ்

## பள்ளத்துக்குள் பஸ்
### 26 பேர் காயம்

கொழும்பு, பெப்.6
பஸ் ஒன்று 20 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 26 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீரிகம - அலவ்வ பகுதியிலிருந்து ரவனஹொட பகுதிக்கு நிகழ்வு ஒன்றுக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பும் வேளையில், நேற்று புதன்கிழமை அதிகாலை 1 மணிக்கு ரவனஹொட- திம்புலுபத்தன வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த அனைவரும் பூண்டுலோயா - மல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கவனயீனத்தால் விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## போலியான வாக்குறுதிகளே அழுத்தங்களுக்கு காரணம்
### அரசை சாடுகிறார் சஜித்

கொழும்பு, பெப்.6
அரசின் போலியான வாக்குறுதிகளே சர்வதேச அழுத்தங்களுக்கு காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்

அம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தல் உள்ளிட்ட பல பொய்யான வாக்குறுதிகளை இந்த அரசு சர்வதேச சமூகத்துக்கு வழங்கியுள்ளது.

நாட்டுக்குப் பாதகம் ஏற்படக் கூடிய சில சர்வதேச கூட்டு பிரகடனங்களிலும் அரசு கையொப்பமிட்டுள்ளது. தற்போது இந்த நாடு உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியாகவும் பல்வேறு அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றது.



சஜித் பிரேமதாச

ஆட்சியாளர்களின் கவனயீனமே பிரச்சினைகள் ஏற்பட பிரதான காரணம். அரசு தூர நோக்கமின்றி செயற்பட்டு வருகின்றது.

இந்த நெருக்கடிகளினால் அரசு மட்டும் பாதிப்புக்களை அனுபவிக்கவில்லை. ஒட்டுமொத்த நாடும் அழுத்தங்களை எதிர் நோக்கி வருகின்றது

அரசு இந்த நெருக்கடி நிலைமைகளை மூடிமறைத்து, அரசியல் லாபமீட்டக் கூடிய பரப்புரைகளை செய்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை மாநாட்டில் இம் முறை இலங்கைக்குப் பாதகமான தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

அரசின் பிழையான இராஜதந்திர அணுகுமுறைகளே நாடு அபாயங்களை எதிர் நோக்கக் காரணமாகும்.

நாடு என்ற ரீதியில் சர்வதேச அரங்கில் தனித்து செயற்பட முடியாது. - என்றார். (ச)

## ஊழல் மோசடிகளில் அரசியல்வாதிகள்
### அஸ்கிரிய பீடாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.6
தற்போதைய அரசியல்வாதிகளில் பலர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கண்டி அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்தரக்கித தேரர் தெரிவித்தார்.

அரசியலில் ஈடுபடும் பலர் மக்களுக்குச் சேவையாற்றுவதனை நோக்கமாகக் கொள்ளவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.



உடுகமசிறி புத்தரக்கித தேரர்

பணம் சம்பாதிப்பதே பல அரசியல்வாதிகளின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் சேவையை முதன்மை நோக்கமாகக் கொண்டவர்களை தெரிவு செய்ய வேண்டியது மக்களின் கடமையாகும் என்று அவர் கூறினார்.

கடந்த காலங்களில் அரசியலில் ஈடுபட்டவர்கள் சொந்தச் சொத்துக்களை இழந்து மக்களுக்குச் சேவையாற்றினார்கள் என்று அவர்மேலும் தெரிவித்தார். (ச)

## அறிவித்தல்
### சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்(வ-து)
### கிளைக்குழுத் தெரிவு-08.02.2014 (சனிக்கிழமை)

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வடக்கு மாகாண ஆளுநரினால் வெளியிடப்பட்ட 08.04.2009 ஆம் திகதிய 1598/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாகவும், சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் உப விதியின் பிரிவு 22(2) இற்கமைவாக என்னால் உருவாக்கப்பட்டு 10.07.2010 ஆம் திகதி வெளியிடப்பட்ட **"பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுவினை தெரிவுசெய்தல்"** என்ற ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைப்படி நடைபெறுமென சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால்அறிவிக்கின்றேன்.

01.கிளைப்பொதுச்சபைக்கூட்டம் ஆரம்பம்-08.02.2014 சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு
02.கூட்டம் நடைபெறும் இடங்கள் மற்றும் தவிசாளரின் பெயர் விவரங்கள் வருமாறு.

| தொ.இல | கிளை இல | கிளையின்பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் |
|---|---|---|---|---|
| 01. | 184 | நாவற்குழி | கிளை இல.184 இற்கு முன்பாக பரமேஸ்வரியின் இல்லம் | E.S.சிறிதரன் |
| 02. | 185 | தச்சன்தோப்பு | சாந்தி சனசமூக நிலையம்-தச்சன்தோப்பு | அ.தயாளன் |
| 03. | 187 | மறவன்புலோ | மறவன்புலோ மேற்கு சனசமூக நிலையம் | சு.அகிலன் |
| 04. | 188 | கைதடிச்சந்தி | கைதடி தெற்கு சனசமூக நிலையம் | பொ.மகேஸ்வரன் |
| 05. | 189 | கைதடி மேற்கு | சரஸ்வதி சனசமூகநிலையம்-கைதடி மேற்கு | ப.சஞ்சீவன் |
| 06. | 190 | கைதடி வடக்கு | செல்வா சனசமூக நிலையம்-கைதடி வடக்கு | க.சசிதரன் |
| 07. | 191 | கைதடி நுணாவில் | வளர்மதி சனசமூக நிலையம்-மட்டுவில் தெற்கு | இ.விஜயமோகனராஜா |
| 08. | 192 | மகிழடி | சோமஸ்கந்தா சனசமூக நிலையம்-மட்டுவில் தெற்கு | பொ.கோகுலன் |
| 09. | 193 | சந்திரபுரம் | அம்பாள் சனசமூக நிலையம் -சந்திரபுரம் | தா.தவமன்னன் |
| 10. | 198 | பெருங்குளம் சந்தி | காரியாலய மண்டபம்-சாவகச்சேரி ப.தெ.சங்கம் | க.பாலகிருஷ்ணன் |
| 11. | 199 | கனகன் புளியடி | சீவித் தொழிற்சாலை-சரசாலை | பா.சிவபாலன் |
| 12. | 200 | சரசாலை வடக்கு | சீவித் தொழிற்சாலை-சரசாலை | ச.சசீந்திரன் |
| 13. | 201 | வேம்பிராய் | விநாயகர் முன்பள்ளி -மீசாலை மேற்கு | சி.அருணோதயன் |
| 14. | 202 | இராமாவில் | கந்தர்மடம் கணபதிப்பிள்ளையின் வீடு | பா.வாகீசன் |
| 15. | 204 | கைதடி மத்தி | வளர்மதி சனசமூக நிலையம்-கைதடி மத்தி | அ.விமல்ராஜ் |
| 16. | 206 | கச்சாய் | மீசாலை கிழக்கு முன்பள்ளி | இ.புவன்ராஜ் |

**முக்கிய கவனத்துக்கு:**

- இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட தவிசாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர்களில் நான்கிலொரு பங்கினர் அல்லது 25 இதில் எது குறைவானதோ அத்தொகையாகும்
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவுக்கான 9 உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இதில் இருவர் 18-35 வயதுக்குட்பட்டவராயும் ஒருவர் மகளிர் குழு உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.
- சபையிலிருந்து கிடைக்கப் பெறும் முன்மொழிவுகள் 9 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
  தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கீழ்க்குறிப்பிடப்படுவோர் கிளைக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படும் தகைமையற்றவர்களாவர்.**

01. கிளையின் தகைமை பெற்ற உறுப்பினர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்
02. பதினெட்டு (18) வயதுக்கு குறைந்தவர்
03. உடன் முன்சென்ற மூன்று (03) ஆண்டுகளுக்குள் ஒழுக்க சீர்கேடு சம்பந்தமான குற்றச்சாட்டில் குற்றவாளியாக்கப்பட்டவர் அல்லது அதற்கு மேற்பட்ட மாத காலத்துக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்
04. சித்த சுவாதீனமற்றவர்.
05. கடன் இறுக்க நிர்வாகமின்மை கோரி விண்ணப்பம் செய்தவர் அல்லது அவ்வாறு தீர்ப்புப் பெற்றவர்.
06. இச்சங்கத்திடம் அல்லது வேறேனும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திடம் பெற்ற கடனைத் தீர்ப்பதில் அல்லது வேறேனும் விதத்தில் தவறியவர்
07. சங்கத்தின் நலத்துக்கெதிரிடையான தொழிலினை நடத்துபவர்
08. இச்சங்கத்தில் அல்லது இச்சங்கம் உறுப்புரிமை வகிக்கும் ஏதேனும் சங்கத்தில் சம்பளம் பெறும் பணியாளர்.
09. உறுப்பினர் என்ற முறைமிலன்றி நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சங்கத்திடம் அல்லது சங்கம் செய்துள்ள ஒப்பந்தத்தில் அல்லது ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களில் அக்கறையுடையவராக இருத்தல்
10. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு கூட்டுறவுச்சங்க விதிகளின் கீழ் தனது பதவியை அல்லது வேலையை விட்டகல வேண்டி நேரிட்டவர்.
11. கிளைப் பொதுச்சபைக்கூட்ட திகதிக்கு முன்னர் சங்க உறுப்புரிமையை இழந்தவர்.
12. நாடாளுமன்ற, மாகாணசபை, நகரசபை அல்லது பிரதேச சபையில் உறுப்பினராகவுள்ளவர்.
13. சங்கத்தின் உற்பத்தி நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஆறு (06) மாதங்களுக்கு மேல் ஈடுபாடில்லாதிருப்பதை சம்பந்தப்பட்ட கிளைக்குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டவர்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (C/7639)(3.6.4)

கு.அருந்தவநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# காணி பிரச்சினையை தீர்க்க கிழக்கில் வேலைத்திட்டங்கள்

மட்டக்களப்பு,பெப்.6

கிழக்கு மாகாண காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் மூன்று மாவட்டங்களிலுமிருந்தும் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு உரிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன:

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரிவும், அம்ப்பாறை மாவட்டத்தில் அம்பாறைப் பிரிவும், திருகோணமலை மாவட்டத்தில் பட்டினமும் சூழலும் பிரிவு மற்றும் தம்பலகாமம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று மாகாண காணி ஆணையாளர் சிறிமெவன் தாமசேன தெரிவித்தார்.

இந்தப் பிரிவுகளிலுள்ள காணிகள் தொடாபான ஆரம்பக்கட்டப் பிரச்சினைகள் இனங்காணப்படுதல் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இந்த வருடத்துக்குள் தீர்வுகள் காணப் படும் என்று அவர் கூறினார். (ச)

# சோளச்செய்கை அதிகரிப்பு; விற்பனையிலோ வீழ்ச்சி

திருகோணமலை,பெப்.6

திருகோணமலை மாவட்டத்தில் சோளம் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களை விட இம்முறை சோளச் செய்கை அதிகரித்துள்ளதனால் விற்பனையில் வீழ்ச்சி அடைந்துள்ளது என்று சோளச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, கந்தளாய், பன்குளம், குச்சவெளி, ஈச்சலம் பற்று, சேருவில உள்ளிட்ட பல பகுதிகளில் இம்முறை பெரும ளவிலான சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டன.

தற்போது நூறு ரூபாவுக்கு 5 பொத்திகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையில் கைவிடப்பட்ட நிலங்கள் மீண்டும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டமையால் சோளச் செய்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற சோளப் பொத்திகளை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியாதுள்ளதுடன் நிர்ணயிக்கப்பட்ட விலை வழங்கப்படுவதில்லை என்று செய்கையாளர் கவலை தெரிவித்தனர்.

உற்பத்தி செய்யப்படுகின்ற சோளப் பொத்திகளை அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ கொள்வனவு செய்ய முன்வராததன் காரணமாக நட்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. (ச)



# ஒரு கோடி ரூபா செலவில் வீதி புனரமைப்பு

தேசத்தின் மகுடம் வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீ முருகன் கோயில் வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்பட்டு மீள் குடியேற்றப்பட்டு பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனால் திறந்து வைக்கப்பட்டது.

ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீதியானது மிக நீண்ட கால மாக புனரமைப்பு இன்றிக் காணப்பட்ட நிலையில் அந்தக்கிராம மக்களால் பிரதியமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து பிரதியமைச்சரின் முயற்சியால் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. (ச)

# 24 வருடங்களுக்குப் பின்னர் தொப்பிகலவில் மீள்குடியேற்றம்

## 37 குடும்பங்கள் சொந்த இடத்தில்

மட்டக்களப்பு,பெப்.6

மட்டக்களப்பு மாவட்ட தொப்பிகல பிரதேசத்தில் 37 குடும்பங்கள் திங்கட்கிழமை மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த சுமார் 24 வருடங்களுக்கு முன்னர் போரால் இடம்பெயர்ந்த இவர்களை மீள்குடியமர்த்தும் பணி வெடிபொருள்கள் அகற்றும் நடவடிக்கையால் தாமதமடைந்திருந்தது.



*மீள்குடியேறிய மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைக்க சிமெந்துப் பைக்கற்றுக்களை மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன் ஆகியோர் இணைந்து வழங்கினர்*

இந்தக் குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டில்களை அமைப்பதற்கான சிமெந்துப் பைகள் மற்றும் கூரைத் தகடுகள் வழங்கும் நிகழ்வு கிரான் ரெஜி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கருங்காலிச்சோலை மற்றும் கள்ளிச்சை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இந்தக் குடும்பங்கள் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்து கிரான் பிரதேசத்திலுள்ள உறவினர், நண்பர்கள் வீடுகளில் இதுவரை காலமும் தற்காலிகமாகத் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)


31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் கந்தன் தம்பித்துரை

அன்னை மடியில்
12.09.1950

ஆண்டவன் அடியில்
07.01.2014



அன்புடன் எம்மைக் காத்து
ஆர்வமாய்க் கல்வியூட்டி
அரவணைத்து எம்மை ஊக்கி
உலகிலே உயரவைத்தீர்
காலங்கள் பல சென்றாலும்
நினைவுகள் நீங்கிடாது
மகிழ்வுடன் வாழ்ந்தகாலம்
மனதைவிட்டு அகலாது என்றும்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.02.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது அமரத்துவத்தை அறிந்து கலந்துகொண்டும், தகவல் அனுப்பியும், இன்னும் பல வழிகளில் பேருதவி புரிந்தும் உதவிய அன்பு உள்ளங்களுக்கு எமது நன்றிகள் பல.

இல. 533/11, தருமபுரம்,
தொ.பே: 077865 8412

தீபனும்,
குடும்பத்தவரும்.

(43510)(10.6.3)




*மட்டக்களப்பில் புற்றுநோய் விழிப்புணர்வு ஊர்வலம்*

# புற்றுநோய் விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பில்

மட்டக்களப்பு,பெப்.6

உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் புற்றுநோய் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மருத்துவர்கள், தாதியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், மற்றும் வைத்தி யசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர் (ச)

# மூக்குக் கண்ணாடி வழங்கல்

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 50 இற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. முதியோர்களுக்கு கண் பரி சோதனை நடத்தப்பட்டு பின்னர் அவர்களுக்கான கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விருந்தினர் களாக லயன்ஸ் கழகத்தின் ஆளுநர் லசந்தப்பெரேரா, பிராந்தியத் தலைவர் டாக்டா பிரமசிறி கேமாவசம், செயலர் ஹனீபா உட் பட பலர் கலந்துகொண்டனர். (ச)

# 93 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

அம்பாறை,பெப்.6

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட 93 பட்டதாரிகளுக்கு நேற்று முன்தினம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் கே.லவநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன, அம்பாறை மாட்ட அரச அதிபர் கே.விமலாதன், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வசந்தகுமார, பிரதேச செயலக உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் பி.இராஜ குலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கினர்.

நியமனம் பெற்ற 93 பட்டதாரிகளும் அரச திணைக்களங்கள், பல்வேறு அமைச்சுக்களிலும், உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சம்பந்தம் என்றால் என்ன?

தன்னிச்சையானதும் விருப்பத்துக்குரியதுமான தொடர்பே சம்பந்தம் ஆகும். உதாரணமாக, ஞாயிறு மாலை நீர் உமது நண்பர்களுக்கு ஒரு தேநீர் விருந்து வழங்க இருந்தீர். அன்று மாலை நான்கு மணியளவில் கடும் சுரம் உமக்கு ஏற்பட்டது. நீர் எல்லா நண்பர்களுக்கும் விருந்து பிற்போடப்பட்டது என்று அறிவித்தீர். இதுவே சம்பந்தம் என்றது ஆகும்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது
சாயி சிந்தனை

## விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இன்று மாலை விசேட கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. மாலை 3.30மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் அலகு அயர் லாந்தைச் சேர்ந்த ஒளிப் படக்கலைஞரும் லண்டன் ஒளிப்பட சஞ்சிகையின் இதழாசிரிய ஆலோசகருமான அன்ரனி ஹொக்ஹேயின் ஒளிப்படங்களுடன் கூடிய காட்சியுரை மற்றும் கலந் துரையாடல் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-10)

# ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு வடக்கு மாகாணசபைக்கு வாழ்த்து

இலங்கையில் நடைபெற்ற போரில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு ஒப்பான குற்றங்களுக்கு சர்வதேச நீதி விசாரணை தேவை என்று வடமாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஒபாமாவுக்கானதமிழர்அமைப்பு வாழ்த்துத் தெரிவித் துள்ளது.

கடந்த 27ஆம்திகதிவடமாகாண சபையில் மேற்கண்ட தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவைப் புறக்கணித்து சர்வதேச நீதி விசாரணை வேண்டும்என்றும்மேலும்மன்னாரில் தொடர்ந்தும் தோண்டப்பட்டு வரும் மனிதப்புதைகுழி பற்றியும்சர்வதேசவிசாரணைதேவை என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து நேரடியாக மனித உரிமை ஆணையகக் கூட்டத்தில்பேசுவதற்கு திருமதி அனந்தி சசிதரன் சசிதரனையும் தமது பிரதிநிதியாக அனுப்ப முடிவு செய்துள்ளது.

இந்தத் தீர்மானம் குறித்து ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

இன அழிப்பும் அதற்கான சர்வதேச விசாரணை குறித்தும்பலரும்முன்னர்வலியுறுத்தி வந்தபோதும் தற்போது வடமாகாண சபையில் தீர்மானமாக அரச நிர்வாகத்திலேயே கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் அன்றைய தினம் பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதில் ஒன்று இலங்கைத் தீவில் இனப்படுகொலையை ஒத்த படுகொலை நடைபெற்றிருக்கின்றது என்பதைதெரியப்படுத்தியும்உள்ளது. மற்றொருதீர்மானத்தில்வடக்குக் கிழக்கு மக்கள் இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் எந்த விசாரணைகளிலும்நம்பிக்கை வைக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளமை யானது கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக் கத்துக்கு மான ஆணைக் குழுவை மறைமுகமாக நிராகரிப்பதாகவே அமை கின்றது" என்றார்.

இந்தத்தீர்மானமானது மிகவும் துணிச்சலுடனும், தீர்க்கமாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். இதற்காக தமது மனமார்ந்த நன்றி களை வடமாகாண சபைக்கு தெரிவித்துக் கொண்டுள்ளனர். (வ)

## மாணவருக்கு சின்னஞ் சூட்டல்

யாழ்ப்பாணம், பெப் .6

யாழ் மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையால் நடத்தப்படும் மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வும் நூல் வெளியீடும் இன்று இடம் பெறவுள்ளன.

கல்லூரியின் தம்பர் மண்ட பத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வுக்கு 2013-2014 ஆண்டுக்குரியசிரேஷ்ட மாணவ தலைவர் எஸ்.கஜ றூபன் தலைமை வகிப்பதுடன் பிரதம விருந்தினராக பிரிட்டன் பழைய மாணவ சங்கத்தி ன் முன்னாள் தலை வர் கே.பாலகிருஸ்ணன் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (வ-10)

## விளையாட்டு அபிவிருத்தி கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

கூட்டத்துக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் அல்லது பொறுப்பு வாய்ந்த இரண்டு அங்கத்தவர்களைக் கலந்துகொள்ளுமாறு மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (வ-9)

## சமய சந்நிதி

மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல 75 ஆவது ஆண்டுநிறைவு ஜுபிலி பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

தினமும் மாலை 4.45 மணிக்கு திருச்செபமாலையும், நவநாள் வழிபாடும் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 6 மணிக்கு அன்னையின் திருச்சொரூப தேர் பவனியும் நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஜுபிலி திருப்பலி யாழ்.ஆயர் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும். (வ-115)

♦♦♦

சாவகச்சேரி கல்வயல் விளைவேலி துர்க்கை அம்பாள் ஆலய மாசி மக இலட்சார்ச்சனை இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும்.

மாசி மகத் தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி சங்காபிஷேகமும் மாலைஇலட்சார்ச்சனை பூர்த்தியும் அம்பாள் உள்வீதி உலாவும் இடம் பெறும். (ரு-9)

## ஓராண்டு நினைவஞ்சலி

**சிவக்கொடி (அன்னபூரணம்) சிதம்பரப்பிள்ளை**



மலர்வு
17.11.1934

உதிர்வு
18.01.2013

திதி: சப்தமி (06.02.2014)

ஆறிரண்டு திங்களாய்
அழுத கண்ணீர் காயவில்லை
ஓடிமறைந்ததம்மா ஓராண்டு
கனவாக
உற்ற துணையாயிருந்தீர்கள்
உங்கள் பிரிவை மறக்கலாமா
உங்கள் இடத்தை நிரப்புதற்கு
உலகில் யாருமில்லையம்மா

இன்று (06.02.2014) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

நவக்கிரி, புத்தூர். குடும்பத்தினர்.

(C11408)(10.6.3)

## நினைவஞ்சலியும் நன்றி நவில்லும் மதியபோசன அழைப்பும்

44 ஆம் நாள் | 31 ஆம் நாள்





அமரர் தூரைப்பிள்ளை பெர்னாண்டோ (பூராசா) திருமதி அருளம்மா பெர்னாண்டோ

10.03.1932 ← தோற்றம் → 09.02.1939
27.12.2013 ← மறைவு → 09.01.2014

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்" (யோவா 11:25)
நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே!
முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் பிரகாசிக்கக்கடவது

அன்று இறைவன் அடி சேர்ந்த எமது தாய் தந்தையரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசியிலும் மரணச்சடங்கிலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை (07.02.2014) வெள்ளிக்கிழமை சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் காலை 8.00மணிக்கு நடைபெறும். அவர்களின் ஆத்மசாந்தித் திருப்பலியிலும் மறுநாள் (08.02.2014) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இன்பர்சிட்டி, பருத்தித்துறை. (44254)(3.6.4) பிள்ளைகள்
T.P:077 921 3666, 077 368 6165 (அன்ரனிபுரம், பலாலி)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 28 . 02 . 1975
மறைவு 06 . 02 . 2012

**அமரர் ஏரம்பு ஜெயராசா**
(முன்னாள் ஆசிரியர் - பெரியகுளம் அ.த.க.பாடசாலை)

பொல்லாத காலன் உன்னைக் கொண்டு சென்றானோ!
உன் முகத்தைப் பார்க்காமல் உன் தொனியைக் கேட்காமல்
இரண்டாண்டுகள் ஆனாலும் பாசத்தின் நிழலதுவாய்
எங்களின் மனங்களிலே மணம் வீசுகின்றாயே அண்ணா!!
எத்தனைபேர் இருந்தாலும் ஏனெங்கள் வீடு இருளாக இருக்கிறது
உன் பிரிவுத்துயரால் தானோ!மலையளவு புகழ்வந்தாலும்
மழநிறையப் பொருள் சேர்ந்தாலும் பிள்ளையை, அண்ணாவை,
தம்பியை, மாமாவை, பெரியப்பாவை, மைத்துனனை நாம்
மறவோம் என்றும் உம் நினைவில்.

தற்போதைய முகவரி — 4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (44249)(2.3.6)

பிரிவுதுயரில் வாடும்: தாய், தந்தை, சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், தென்னமரவாடி, திருகோணமலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.12.1947

மறைவு
19.01.2013

**வேலுப்பிள்ளை ஜெயரட்ணம்**
(Proprietor - Kannan Out Boat Motors)

திதி: 07.01.2014 அட்டமி வளர்பிறை

அன்புடனே அறிவூட்டி
அயரா உழைப்பாலே எம் வாழ்விற்கு வளம்கூட்டி
நலமோடு நாம் வாழ நல்வழிகாட்டிய
எமது அன்புத் தந்தையே!
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்துவாழும்
எம் இதயக் கோயில்களில் அகல் விளக்காய் இருந்து
எம் கனவுகளை நனவாக்க வேண்டும்
அந்த ஏகதந்தன் துணையுடன்

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை (07.02.2014) வெள்ளிக்கிழமை நுணசை வீதி, மாதகலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

நுணசை வீதி, மாதகல். (44324)(45.6.3) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# தாக்குதலுக்குள்ளாகி இளைஞர் ஆஸ்பத்திரியில்

மாதகல் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் நடைபெற்ற கூட்டத்தில் இளைஞர் ஒருவருக்கும் ஏனையோருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து குறித்த இளைஞர் பத்துக்கும் மேற்பட்டவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் படுகாயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மாதகல் பகுதியைச் சோந்த யேசுரத்தினம் கமில்டன் (வயது- 24) என்பவரே திங்கட்கிழமை இரவு தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

தாக்குதல் சம்பவம் குறித்து இளவாலைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (வ-86)




## நன்றி நவிலலும்

வீட்டுக்கிருத்திய அழைப்பும்

07.01.2014 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் தங்கரத்தினம் திருநாவுக்கரசு

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து தமது அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் இல்லத்தில் இன்று (06.02.2014) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(சி.11415)(6.3)

ஐயனார் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்


# மெய்வன்மைப் போட்டிகள்

கைதடி, பெப்.6

கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் கலைவாணி வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன், பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளர் க.சிறிதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (வ-288)

♦ ♦ ♦

அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு புனித சவேரியார் ஆலய முன்றிலில் நடைபெறும். பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சக்கோட்டை பங்குத் தந்தை வண பிதா த.நிருபன் நிஷானந், அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலையின் முன்னாள் அதிபர் அ.விஜயநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

♦ ♦ ♦

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் இ.இராசமகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் வி.ஆறு முகம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சற்குணராசாவும், கௌரவ விருந்தினராக யாழ். வலய ஆங்கிலபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராசாவும் கலந்து கொள்வர். (வ-11)

♦♦♦

வவுனியா செட்டிகுளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரியின் மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முதல்வர் செ.தர்மரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப் பாளர் எஸ்.அன்ரன் சோமராஜா, கௌரவ விருந்தினராக செட்டிகுளம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.பாலித அபயசிங்க ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (வ-402)

♦♦♦

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரியின்அதிபர்சிதனஞ்சயன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்குபிரதமவிருந்தினராகஎஸ்.திருஞானசம்பந்தர் கலந்து கொள்வார். (வ-28)

♦♦♦

மானிப்பாய்மொமோறியல் ஆங்கில பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 7 ஆம்திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் தி.மாதவகுமார் தலைமையில் பாடசாலையின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா. தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளையின் ஓய்வுநிலை முகாமையாளரும் பழைய மாணவனுமாகிய கே.கமலசேகரன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

♦♦♦

ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் சைவப்புலவர் செ.பரமேஸ்வரன் தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற வுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரதிக்கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்) சைவப்புலவர் சு.தேமனோகரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் கோப்பாய் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தருமான சி.விநோத்தும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-10)

♦♦♦

பெரியபுலம் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ.ரவிச்சந்திரன் தலைமையில் பி.ப 1.30 மணிக்கு நடைபெறும் இப்போட்டியில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆரம்பக் கல்வி முன்னாள் ஆசி ரியர் ருக்மணிதேவி பாலகிருஷ்ணன் கலந்து கொள்ள வுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கலையமுதா நரேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளார். (வ-10)

♦♦♦

முல்லைத்தீவு கொக்கிளாய் அ.த.க பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி.பத்மநாதன் தலைமையில் பி.ப 1.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டியில் முல்லைத்தீவு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல் ஞானலிங்கம் ஆதவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (வ-10)


## மரண அறிவித்தல்

### செல்லையா தில்லைநாயகம் (சாமியார்)



வேலணை மேற்கு, வேலணையைப் (சிற்பனையை) பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லையா தில்லைநாயகம் (சாமியார்) 03.02.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-தெய்வானை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேதநாயகம் மற்றும் தேவநாயகம் (நெதர்லாந்து), மேனகா (கனடா), தவநாயகம் (டென்மார்க்), மைவிழி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசநாயகத்தின் அன்புச் சகோதரனும், பரநிருபசிங்கம், சிவபாக்கியம், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வராணி (நெதர்லாந்து), சிவநாதன் (கனடா), வனஜா (டென்மார்க்), தவக்குமார் (கனடா), திவாகர், சகானா, சங்கீதா, கிஷோர், நதீசன், அக்ஷயா, அனிர்ஷன், ராகுல், கபிஷா, ஜஸ்மிதா, ஹரிஷா, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2014) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு,
வேலணை.

(44351)(7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி, பிரதேசசபையின், வரணி
உப அலுவலக பொறுப்பதிகாரி
**வடிவேலு பாலகிருஸ்ணன்**
அவர்களின் அன்புத் தாய்
**வடிவேலு இரத்தினம்**

அவர்கள் 04.02.2014ஆம் திகதி காலமானதையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், செயலாளர், உத்தியோகத்தர்கள்,
சாவகச்சேரி பிரதேசசபை
ஊழியர் நலன்புரி சங்கம். (சி11419)(12.6.3)



## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் இராசரட்ணம்



யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, வீமன்காமம், டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசரட்ணம் 03.02.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தோணிக்கல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.152/ 7A,
குட்செட் வீதி,
2 ஆம் ஒழுங்கை,
தோணிக்கல், வவுனியா.
(2.6.3)(43137)

தகவல்:
குலசேகரி (மனைவி) மற்றும்
பிள்ளைகள்.
T.P: 024 222 5027
077 507 3591

### திருமதி சரஸ்வதி சிவசோதி

(அரசடி, சங்கானை)



செட்டிகுறிச்சியைப் பிறப்பிடமாகவும், சங்கானை அரசடி வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவசோதி 04.02.2014 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சிவசோதி ஐயாவின் அன்பு மனைவியும், சந்திரா, கார்த்திகேயினி, கமலாதேவி, காலஞ்சென்ற உருத்திரகுமாரன் மற்றும் அருட்குமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் சண்முகசுந்தரம் (ஓய்வுநிலை ஊழியர், வலிமேற்கு பிரதேசசபை - சங்கானை), மாணிக்கவாசகக் குருக்கள், குமாரேஸ்வரி (லண்டன்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமாறன், தயாமாறன், கோமதி, கருணாமாறன், தவமாறன், யமுனா, கங்கா, சுமதி, கோகிலா, கௌசிகா, அகிலன், கபிலன், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2014) வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை இந்து கரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வைரவர்கோயிலடி,
சங்கானை.
077 104 0789

(சி11414)(12.6.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதியோர்களைக் கௌரவிக்க செயற்பாடுகள் முன்னெடுப்பு

*நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தால்*

நவாலி, பெப்.6

நவாலி கிழக்கு முதியோர் சங்கம் முதியோர்களை மகிழ்விக்கும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகளை தற்போது மேற்கொண்டுள்ளது.

100 அங்கத்தவர்களை உள்ளடக்கிய குறித்த சங்கம் சுகவீனக் கொடுப்பனவு, இறப்புக் கொடுப்பனவு மற்றும் பண்டிகைக் கால கொடுப்பனவு, அஞ்சலிப் பிரசுரம் வெளியிடுதல் என்பவற்றுடன் சர்வதேச முதியோர் தினத்தையொட்டி பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், முதியோர்களைக் கௌரவித்தல் என்பவற்றை வருடா வருடம் மிகச் சிறப்புற நடத்தி வருகின்றது.

பல ஆண்டுகளாக கல்வி, கலை, பொதுச் சேவை என்பவற்றில் தம்மை அர்ப்பணித்த அங்கத்தவர்களும் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத்தின் வளர்ச்சிக்கு நவாலி ஊன்றுகோல் நிறுவனம், நவாலி மக்கள் ஒன்றிய ஐரோப்பா அமைப்பு, நவாலி முருகானந்தா சனசமூக நிலையம் மற்றும் பொது அமைப்புகள் என்பன உறுதுணையாக செயற்படுகின்றன. (வ-100)

## உவர்த் தன்மையால் விவசாயம் பாதிப்பு

பூநகரி, பெப்.6

பூநகரியின் தொன்மையான பல்லவராயன்கட்டு கிராமத் தின் 90 விழுக்காடு நிலப் பகுதி உவர்த்தன்மை அடைந்ததன் காரணமாக தண்ணீர்க் கிணறு கள் பெருமளவில் உவர டைந்துள்ளன. குறித்த கிராமத்தின் 350 ஏக்கர் வயல் நிலம் முழுமையாக உவரடைந்துள்ளது. 25 கிணறுகள் உவர் நீர்கொண்டவையாக மாறியுள்ளன.

பல்லவராயன் கட்டில் மிகுதி யான 150 ஏக்கர் வயல் நிலத் துக்கு கரியாலை நாகபடுவான் குளத்திலிருந்து காலபோகத் துக்கு மட்டும் நீர் வழங்கப் படுகின்றது. சிறுபோகத்தில் இந்தக் கிராம மக்கள் ஈடு படுவதில்லை. (வ-18)


**காணி விற்பனைக்கு**

பலாலி வீதியில், ஊரெழு பிள்ளையார், அம்மன் கோயில்களுக்கு அருகில் வீட்டுடன் கூடிய மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. (சி/11406) (4.6.3)

தொடர்பு: 021 321 7867, 077 631 5965


# பொருளாதார இழப்பில் கால்நடை வளர்ப்போர்

*செயற்கை முறை சினைப்படுத்தலை மீள நடைமுறைப்படுத்தாததால்*

அச்சுவேலி, பெப்.6

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு உட்பட மூன்று பிரிவுகளில் இடைநிறுத்தப்பட்ட கால்நடைகளுக்கான செயற்கைமுறைச் சினைப்படுத்தல் இதுவரை மீள நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனால் ஆடு, மாடு வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் பெரும் பொருளாதார இழப்புக்குள்ளாகின்றனர். 35 தினங்களுக்கு மேலாகியும் இது மீள நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்று கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவுவதாக அறிவிக்கப்பட்டு தடை ஊசி மருந்து ஏற்றும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்ட போது ஜனவரி முதலாம் திகதியில் இருந்து கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய மூன்று கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல் வேலைத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் இடைநிறுத்தப்படாமல் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை மூன்று பிரிவுகளிலும் இடைநிறுத்தப்பட்ட செயற்கை முறைச் சினைப்படுத்தல் வேலைத் திட்டம் 35 தினங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டிருப்பதால் கால்நடைகளை வளர்ப்போர் எதிர்பாராத நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

உறைநிலை விந்துக்கான செலவாக ரூபா 50 மட்டும் பயனாளிகள் செலுத்தினால் போதும். கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வைத்தியர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாடு, ஆடு கட்டப்பட்டிருக்கும் தொழுவத்துக்கு நேரடியாக வருகை தந்து செயற்கை முறைச் சினைப் படுத்தலை மேற்கொள்வார்கள்.

செயற்கை முறைச் சினைப் படுத்தல் முறை இடைநிறுத்தப்பட்டிருப்பதால் ஆயிரக்கணக்கான ரூபாவை செலவு செய்து மாடு, ஆடுகளை இயற்கை முறையான சினைப்படுத்தலை மேற்கொள்ள வேண்டி இருப்பதாகவும் அதன் மூலம் நல்லினங்களை விருத்தி செய்ய முடியாமல் உள்ளூர் இனங்களையே விருத்தி செய்ய இருப்பதாகவும், அதன் மூலம் தொற்றுநோய்கள் ஏற் படக் கூடிய ஏது நிலை இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

> கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு மூன்றிலும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தாமல் இருப்பது மாடு, ஆடு வளர்ப்போர் மற்றும் பண்ணை யாளர்களை மேலதிக சிரமத்துக்கும் பொருளாதார இழப்புக்கும் உள்ளாக்கியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் சராசரியாக மாதந்தோறும் 250 மாடுகளும் 50 ஆடுகளும் செயற்கை முறை மூலம் சினைப்படுத்தப்படுவதாகவும் யாழ்.மாவட்டத்தில் இந்த வேலைத் திட்டத்தில் முன்னணியில் உள்ளது கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுதான் என்று கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய பிரிவுகளில் இடைநிறுத்தப்படாமல் செயற்கை முறைச் சினைப்படுத்தல் வேலைத் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதோடு மாவட்ட ரீதியில் கால்வாய் நோய்த் தாக்கம் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு மூன்றிலும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தாமல் இருப்பது மாடு, ஆடு வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்களை மேலதிக சிரமத்துக்கும் பொரு ளாதார இழப்புக்கும் உள்ளாக்கி இருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (வ-11)


நகராட்சிமன்றம், சாவகச்சேரி

**கேள்வி அறிவித்தல்**

நகர மண்டப மிகுதி வேலை கட்டம் 04

ஒப்பந்த இல: NP/14/41(3)/02/CF/03/2014

1. தவிசாளர், சாவகச்சேரி நகராட்சிமன்றம், சாவகச்சேரி நகராட்சிமன்றம் சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டட நிர்மாண வேலைகளுக்கு கோருகின்றார்,
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி கோர தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி, Te.No 0212270041 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 25.02.2014ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் இடத்திலிருந்து 07.02.2014ஆம் திகதியிலிருந்து 25.02.2014 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2280/= (2000+VAT 240.00,+NBT40.00) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி Te.No 0212270041 எனும் முகவரிக்கு 25.02.2014 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 66 (அறுபத்து ஆறு – 02.05.2014) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs.) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(3)/02/CF/03/2014 | நகரமண்டப மிகுதி வேலை – கட்டம் 04 | 3.541 | 01 மாதம் | C8 அல்லது அதற்கு மேல் | 35500.00 | 30.05.2014 |

10. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் நகராட்சிமன்றம், சாவகச்சேரி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் 19.02.2014 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.

இ.தேவசகாயம்பிள்ளை, தவிசாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி
05.02.2014

(C/7642)(2.6)


## நீரின்றி அழிவடையும் நெற்பயிர்கள்

மன்னார், பெப்.6

மன்னார் நாகதாழ்வு மீள் குடியேற்ற விவசாயக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும்போக நெற்பயிர்கள் நீர் இல்லாமையால் தற்போது அழிவடைந்து வருவதாக நாகதாழ்வு விவசாய அமைப்பின் தலைவர் வி.விஜயன் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் இடம் பெற்ற போர்ச் சூழ்நிலை காரணமாக குறித்த கிராமத்தில் வசித்து வந்த மக்கள் இடம் பெயர்ந்து சென்ற நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு மீண்டும் அந்தக் கிராமத்தில் மீள் குடியேறினர்.

மீள் குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்களைக் கடக்கின்ற நிலையில் அந்த மக்கள் விவசாயத்தை நம் பியே வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது குறித்த கிராமத்தில் 110 குடும்பங்கள் உள்ளன. இந்த நிலையில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நாகதாழ்வு கிராமத்தில் 1200 ஏக்கர் பெரும் போக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் கட்டுக்கரைக் குளத்தில் இருந்து உரிய முறையில் எமது விவசாய செய்கைக்கான நீர் வழங்கப்படவில்லை. இதனால் விவசாயச் செய்கைகள் ஆரம்பத்திலேயே பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் அவசர கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன் போது கடந்த 5 ஆம் திகதி கட்டுக்கரைக் குளம் திறந்து விடப்பட்டு விவசாய செய்கையை மேற்கொண்டுள்ளவர்களுக்கு நீர் வழங்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நாகதாழ்வு கிராமத்தில் உள்ள நெற்பயிர்ச் செய்கைகளுக்கு இது வரை நீர் வழங்கப்படவில்லை. இதனால் தற்போது வரை 600 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை கதிர் விட்டுள்ள நிலையில் அழிவடைந்துள் ளது.

மிகுதி 600 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை மட்டுமே மிஞ்சியுள்ளது. அவை தற்போது கதிர் விட்டுள்ள நிலையில் காணப் படுகின்றன. ஆனால் அவற்றைக் காப்பாற்ற நீர் இன்றி விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக முருங்கன் விவசாயத் திணைக்களத்திடம் எடுத்துக்கூறியும் இது வரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. கட்டுக்கரைக் குளத்தில் இருந்து திறந்து விடப்படுகின்ற நீரை இடையில் உள்ளவர்கள் இடை மறித்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. கட்டுக்கரைக் குள நிர்வாகத்தில் உள்ள சிலரும் குறித்த நீரை இடை மறித்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே தற்போது எஞ்சியுள்ள 600 ஏக்கர் நெற்பயிர்களும் கதிர் விட்டுள்ளமையால் அவற்றுக்கு உடனடியாக நீர் தேவைப்படுகின்றது. இதனால் உடனடியாக குறித்த நெற்பயிர்ச் செய்கைக்கான நீரை வழங்க உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-56)

## நெல் அழிவுக் காப்புறுதி குறித்து தொடர்பு கொள்க

வலி. வடக்கு, பெப் .6

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள மல் லாகம் தெற்கு, வடக்கு, மத் திய பகுதி விவசாயிகளின் நெல் அழிவுக்கான காப்புறுதி தொடர் பான படிவங்களை நிரப்புவதற்காக எதிர்வரும் செவ் வாய்க்கிழமைக்கு முன்னர் குறித்த பிரதேச விவசாயிகளை தமது பிரதேச விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு விவசாய சம்மேளனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

விவசாயிகள் நெற் செய் கைக்கான மானிய உரம் பெறும் போது காப்புறுதித் தொகை செலுத்தியமைக்கான பணப்பற்றுச் சீட்டையும் தவறாது கொண்டுவரும் படியும் உரிய படிவங்களை பெற்று உடனடி யாக நிரப்பி வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## திருமலையில் மீட்கப்பட்டது குண்டு

திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சலப்பை யாறு கடற்கரைக்கு பின்புறமாக முப்பது கிலோ நிறை கொண்ட குண்டு ஒன்று மீட்கப் பட்டுள்ளது என்று குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டு நான்கு அடி நீளம் கொண்டது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். இலங்கையில் இவ்வாறான குண்டு இதுவரை காலமும் பாவிக்கப்பட வில்லை என்று கடற்படையினரும், இராணு வத்தினரும் தெரிவிக்கின்றனர். அந்த குண்டை சலப்பை யாறு கடற்படையினரின் உதவி யுடன் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# ஒவ்வொரு ஆண்டிலும் 2,000 தொழுநோயாளர்

### சுகாதாரக் கல்வி செயற்பாட்டு பிரிவு தெரிவிப்பு

கொழும்பு,பெப்.6

இலங்கையில் ஒவ்வோர் ஆண்டிலும் புதிதாக 2,000 பேர் வரையில் தொழுநோயாளர்களாக இனங்காணப்படுகின்றனர் என்று சுகாதார கல்வி செயற்பாட்டுப் பிரிவின் பணிப்பாளரான வைத்திய நிபுணர் திருமதி நீலமணி ராஜபக்ஷ ஹேவாகீகன தெரிவித்தார்.

அதற்கமைய நாளொன்றில் 5 பேர் வரை தொழுநோயாளர்கள் இனங் காணப்பட்டு வருகின்றனர். அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்தி லேயே இனங்காணப்படுகின்றனர் என்று அவர் கூறினார்.

கடந்த ஆண்டில் மாத்திரம் கொழும்பு மாவட் டத்தில் தொழு நோயாளர்கள் 438 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிக மாக கல்முனை, மட்டக்களப்பு அம்பாறை மற்றும் களுத்துறை ஆகிய மாவட் டங்களிலும் தொழுநோயாளர்கள் அதிகளவில் இனங் காணப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

தொற்றுநோய்களிலொன்றான தொழுநோய் குழந் தைகளிடையே அதிகமாகப் பரவிச் செல்லும் தன்மை காணப்படுகிறது.

இந்த நோயை ஆரம்பத்திலே இனங் கண்டு ஆறு மாத காலத்துள் தொடர்ச் சியாக முறைப்படியான சிகிச்சைகளைப் பெறுவதன் மூலம் பூரண மாகவே குணப்படுத்திக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

எனவே உணர்வொன்று இல்லாத தேமல்கள் போன்ற அடையாளங்கள் அல்லது சிறிய கட்டிகள் போன்றவை உடம்பில் காணப்படுமானால் உடனடியாக சரும நோய் 'கிளினிக்' ஒன்றுக் குச் சென்று பரீட்சித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். (ச-22)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் திருமணம் ஆகாத1ஆம் பாதம் கடக ராசி கனடா நிரந்தர வதிவிடம் 1968 ஆம் ஆண்டு மார்கழி பிறந்த 5.10 உயரமுடைய சிவந்த சிறந்த தோற்றமுடைய பிரபல தனியார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக உள்ள மணமகனுக்கு அழகிய படித்த நற்குணமுடைய மணமகள் தேவை.

மணமகன் தற்போது இலங்கை வந்துள்ளார்.

தொடர்புக்கு :- 0775385225

## மரண அறிவித்தல்

*ஸ்ரீமதி வாலாம்பிகை அம்மா சண்முகசுந்தரக்குருக்கள்*

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் குடியிருப்பு, சுழிபுரத்தை வாழ்விடமாகவும் கொண்டு தற்போது அச்சுவேலியில் வசித்த ஸ்ரீமதி வாலாம்பிகை அம்மா சண்முகசுந்தரக்குருக்கள் கடந்த (03.02.2014) திங்கட்கிழமை இரவு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகசுந்தரக்குருக்களின்(பொன்னுத்துரை ஐயா- பண்ணாகம் விசவத்தனை முருகன் கோயில்) அன்பு மனைவியும் மோகனகிருஷ்ணன் (இணைப்பாளர், RESC- யாழ்ப்பாணம்) ஸ்ரீ வித்யா இராஜஇராஜேஸ்வரக்குருக்கள், சுபத்திரா சுரேந்திர சர்மா ( ஆசிரியை, பெரியபுலம் ம.வி) , சிவசுதன் (ஆசிரியர், நாரந் தனை றோ.க), காலஞ்சென்ற சபாநாதன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நிகழ்வுகள் (04.02.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. அச்சுவேலியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பத்தமேனி, அச்சுவேலி.

## மரண அறிவித்தல்



*கந்தையா வரதராசா (துரை)*

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா-வரதராசா (துரை) கடந்த (03.02.2014) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராணியின் அன் புக் கணவரும், சிறிரங்கன் (றங்கன்), மகேஸ்வரன் (ரமேஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசன் (கனடா), குணபாக்கியம், லக்ஸ்மி காந்தன் (சுவிஸ்), காலஞ் சென்றவர்களான தட்சனாமூர்த்தி, பாலசுப்பிரமணியம், நட்ணசபாபதி, தனபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2014) வெள் ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீரங்கன், மகேஸ்வரன்
(புதல்வர்கள்)

## மரண அறிவித்தல்



*செல்லப்பா கனகலிங்கம் (லிங்கன்)*

( முன்னாள் நில அளவையாளர்)

சாவகச்சேரி டச்சு வீதி, மருதடியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்கா columbus ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா கனகலிங்கம் (முன் னாள் நில அளவையாளர்) கடந்த (01.02.2014) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செலலப்பா- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான நாகரத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஷ்பகாந்தியின் (முன்னாள் பொறியியல் விரிவுரையாளர்- கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி) அன்புக் கணவரும், உஷானி, மோகன் ஆகியோரின் பாசமிகு தந் தையும், அன்ரூவின் அன்பு மாமனும், கின்ஸ்லியின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற கனக சபாபதி, திலகவதி, சண்முகதாஸ், புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இரட்ணபூபதி, காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், ராதா, விநாசித்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரவதனி, சாந்தினி, சத்சிதானந்தன், முருகானந்தன், தேவானந்தன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், உமா தேவா, ஸ்ரீகாந்தா, சிவகுமார், சிவசக்தி, நந்தபாலன், கவிதா, சுயந்தன் ஆகியோரின் அருமை மாமனும், அனோஜனா, ரூபன், ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.02.2014 அன்று Ohio, Columbus இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: புஷ்பகாந்தி (மனைவி) USA +1-614-457-8605
புனிதவதி விநாசித்தம்பி (சகோதரி)
364, டச்சு வீதி, சாவகச்சேரி. +94771623711
சண்முகதாஸ் (சகோதரன்) USA +1-310-539-7373
திலகவதி (சகோதரி) +1-248-636-4217

தகவல்:
குடும்பத்தினர்.

## சேவைநலன் பாராட்டு

Best Wishes



எமது ஸ்தாபக உறுப்பினர்
சுப்பிரமணியம் தம்பாபிள்ளை
(ஓய்வுபெற்ற தபாலதிபர்) அவர்களின்
பேரனும், எமது முன்னாள் தலைவர்
இராமசாமி வேலாயுதர்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின்
மகனும், தற்போதைய எமது நிர்வாக
உறுப்பினருமான

**வேலாயுதர் சொர்ணலிங்கம்**

அவர்கள் அரச நில அளவையாளர் சேவையிலிருந்து இன்று (06.02.2014) வியாழக்கிழமை ஓய்வுபெறுவதை முன்னிட்டு அவரது சேவையைப் பாராட்டுவதோடு, எமது சங்க நூல் நிலையம் அமைப்பதற்கு ஞானபாஸ்கரோதய சங்க ஒழுங்கையில் காணியை நன்கொடையாக வழங்கியமைக்காக **சிவபாக்கியம் வேலாயுதர்** குடும்பத்தினருக்கு எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

Best Wishes

ஞானபாஸ்கரோதய சங்கம்,
கல்வியங்காடு.

(44363)(10.6.3)

## உலக இளைஞர் மாநாடு இலங்கையில் 'மே' இல்

### 3,000 இளைஞர்கள் பங்கேற்பு

இலங்கையில் எதிர்வரும் மே மாதம் உலக இளைஞர் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாடு தொடர்பான அறிவூட்டல் மற்றும் ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்காக சர்வதேச செய லணியொன்றை அமைப்பதற்கு இளைஞர் விவ கார திறன் அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சுமார் நூறு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. இலங்கை இளைஞர்களுக்கு சர்வதேச அங்கீ காரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும், வரலாற்றில் இந்த நாட்டு இளைஞர்களுக்கு ஏற் பட்டுள்ள சமூக, கல்வி, கலாசார ரீதியிலான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் ஏற்ற இளைஞர் கொள்கைகளை சமர்ப்பிப்பதற்கும் இந்த மாநாடு வழிவகுக்கும்.

இந்த மாநாட்டுக்காக சுமார் 600 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது என்று இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழ கப்பெரும தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் சுமார் 3,000 இற்கும் அதிக மான இளைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அவர் கூறினார். இந்த மாநாட்டில் இலங் கையைச் சேர்ந்த இளைஞர்களும் பங்கு பற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது கிளிநொச்சி மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலையில்
பணியாளராக கடமையாற்றிய
செல்வி. நகுலேஸ்வரன் நிலுஜா அவர்களின்
பாசமிகு தந்தையார்

*நவரத்தினசாமி நகுலேஸ்வரன்*

அவர்கள் 5/02/2014 அன்று இறைபதம் அடைந்தமையை இட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை
வைத்திய உத்தியோகத்தர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்கள்,பணியாளர்கள்

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு மகிழ
17
.
05
.
1959



மறைவு நெகிழ
15
.
02
.
2008

**அமரர் மாதன் தம்பித்துரை**

ஆண்டுகள் ஆறில் - ஆறாத் துயரில்
இன்றும் உன் நினைவில் தவிக்கும்
ஈன்ற நெஞ்சங்களும்
உன் உடன் பிறப்புக்களும்
ஆறாய் பெருகும் விழிகளுடன்
ஆறாத்துயரில் தவிக்கும்......

விளையாட்டரங்க வீதி,
கட்டப்பிராய்

மனைவி
பிள்ளைகள்.

## 49 மாகாண சபை தேர்தல் முறைப்பாடுகள்

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்த லுடன் தொடர்புடைய சட்ட மீறல்கள் தொடர்பில் 49 முறைப்பாடுகள் தேர்தல்கள் செயலகத்துக்கு கிடைத்துள்ளன.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச வாக னங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில், அதிகளவு முறைப்பா டுகள் பதிவாகியுள் ளன என்று செயலகத் தின் தேர்தல் முறைப் பாடுகளை பொறுப் பேற்கும் பிரிவு தெரி வித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவிலான முறைப் பாடுகள் பதி வாகியுள் ளன என்று செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அனைத்து முறைப் பாடுகளுக்கும் தீர் வைப் பெற்றுக் கொடு க்க நடவடிக்கை எடுக் கப்படும் என்று தேர் தல்கள் செயலகம் குறிப்பிட்டது. (ச)

## மரண அறிவித்தல்



**மயில்வாகனம் ஆறுமுகம்**

(முன்னாள் கல்கி அன் சன்ஸ் அலுவலகர்)

இணுவில் கிழக்கு, ஓ.ஓ.கு. வீதியை சேர்ந்த மயில்வாகனம் ஆறுமுகம் 03.02.2014 திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் கௌரி மனோகரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-இராசம்மா தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பார்த்தீபன் (லண்டன்), பகிரதி (லண்டன்), பரந்தாமன் (லண்டன்), பானுஜி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபா கரன் (லண்டன்), தயாவாணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், சுவாத்திகா, சங்கீத், அக்ஷித் ஆகியோரின் பேரனும், இரத்தினேஸ்வரி (லண்டன்), சுப்பிரமணியம் (கனடா), விமலா தேவி (கனடா), கமலாம்பிகை (கனடா), சிவலிங்கம் (கொழும்பு), மகாலட்சுமி (கனடா), சண்முகலிங்கம் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இரத்தினசபாபதியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2014) வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிவபதி"K.K.S வீதி, இணுவில் கிழக்கு. தகவல் : குடும்பத்தினர்.

## 16 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
25.
03.
1941



ஆண்டவன் அடியில்
22.
01.
2014

*தம்பிராசா ஸ்ரீஸ்கந்தராசா*

நேர் வழியில் வாழ்ந்த எம் குடும்ப சூரியன் எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் மின் அஞ்சல், தொலைபேசி மூலம் எம் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

689/3, பருத்தித்துறை வீதி.
நல்லூர்.

அன்பு மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இ.போ.ச.

எதால் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை, அரச அதிபர் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் தலைமையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிநிதிகள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடந்த சில தினங்களாகத் தனியார் மற்றும் போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்கிடையில் பயணிகளை ஏற்றுவதில் காணப்படும் போட்டி நிலை காரணமாக மோதல்கள் ஏற்பட்டன. இதனால் சாரதிகள் தாக்கப்படும் அளவுக்கு பிரச்சினைகள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தன.

இந்த நிலையில் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நேற்றுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்கும், தனியார் பஸ்களுக்கும் இடையிலான நேர வித்தியாசம் மிகக் குறைவாக இருக்கின்றமையினாலேயே இந்த மோதல் ஏற்படுகின்றது. அத்துடன் இரு தரப்பினரும் தனித் தனியான நேர அட்டவணையிலேயே இயங்குகின்றனர்.

எனவே இரு தரப்பினரும் இணைந்த பொதுவான நேர அட்டவணை தயாரித்தால் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற யோசனையை இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதற்கமைய புதிய நேர அட்டவணை தயாரிக்கப்படவுள்ளதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (த-5)

## விபத்தில்

உயிரிழந்தவரின் சடலம் பாதசாரிகள் (மஞ்சள் கோடு) கடவையில் இருந்து 15 மீற்றர் தூரத்தில் காணப்பட்டது.

பருத்தித்துறைப் பதில் நீதிவான் பா. சுப்பிரமணியம் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகப் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-400-173)

## ஐ.நா.

இங்கு இருப்பார்.

இந்த சுற்றுப்பயணத்தின்போது அவர், அரசின் உயர்மட்ட பிரதிநிதிகளையும் அபிவிருத்திப் பங்காளர்களையும் சிவில் சமூகத்தினரையும் சந்திப்பார்.

இலங்கையில் மனிதாபிமானத் திட்டம் என்ற நிலையிலிருந்து அபிவிருத்தியை நோக்கிய திட்டமென்ற நிலைக்கு மாறும் நிலையில் ஐ.நா அபிவிருத்தித் திட்ட உதவிகள் பயன்படுத்தப்பட்டு எவ்வாறு ஐ.நா முறைமை முன்னேற்றம் கண்டது என்பதைப் பற்றி அவர் இங்கு ஆராய்வார்.

வடக்குக்கும் பயணம் செய்யவுள்ள அவர், அங்கு அரச அதிகாரிகளையும் திட்டங்களின் பயனாளிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதன்மூலம் அவர் மாவட்டங்களின் அபிவிருத்தி முன்னுரிமைகளையும் உதவித் தேவைகளையும் விளங்கிக்கொள்வார். மேலும், அங்கு நடைபெறும் ஐ.நா மற்றும் ஐ.நா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களையும் அவர் பார்வையிடுவார். (த)

## இந்திய

வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலர் வி.ஆயகுலனிடம் கையளித்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், வவுனியாவில் வசிப்பிடம் நெடுங்கேணியில் கழிவறையா?, 'அதிகாரிகளே வீட்டுத்திட்டத்தை சீராக வழங்குங்கள்', 'வீட்டுத்திட்டத்தில் நெடுங்கேணி வடக்கு மற்றும் தெற்கு மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்' என்று கோஷங்களை எழுப்பியதுடன் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிக் கோஷங்களை எழுப்பியதை அடுத்து அங்கு சென்ற உதவிப் பிரதேச செயலர், ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளை செவிமடுத்ததுடன் இந்த விடயம் தொடர்பாக பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதாகவும் கூறினார்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து அகன்று சென்றனர். சிறிது நேரத்தின் பின்னர் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு வருகை தந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம் மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் ம.தியாகராசா ஆகியோர் பிரதேச செயலாளர் க. பரந்தாமனுடன் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடினர். (த-400)

## சம்பந்தனுக்கு

எதிராக அமெரிக்கா கடுமையான தீர்மான வரைவைச் சமர்ப்பிக்கவுள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே இந்தச்சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியுடனான பேச்சுப் பற்றிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கூடியே 'முடிவு செய்வர்' என்று வவுனியாவில் கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி நடந்த கூட்டத்தில் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## இலங்கை மீது

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் சாலி செட்டி, 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலில்,

பொதுநலவாய அமைப்பு இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுப்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனாலும் பொதுநலவாயத்தின் ஒரு சில நாடுகள் இலங்கையின் இறுதிக் கட்டப் போர் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோரி வருகின்றன.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொதுநலவாய அமைப்பு மௌனம் காப்பதாக கமலேஷ் சர்மாவிடம் சுட்டிக்காட்டினோம். அத்துடன் இன்னமும் காலம் தேவை என்ற இலங்கையின் கோஷத்துக்கு பொதுநலவாய அமைப்பு ஒத்துப் போவதாகவும் தெரிவித்தோம்.

### பொதுநலவாயம் வேடிக்கை பார்க்கின்றது

குறிப்பாக இலங்கையில் கடந்த நவம்பர் மாதம் பொதுநலவாய மாநாடு இடம்பெற்றபொழுது. அங்குள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் பொதுநலவாய அமைப்பு பகிரங்கமாக இலங்கையிடம் கேள்வியெழுப்பவில்லை. இவற்றையும் கமலேஷ் சர்மாவுக்குத் தெரியப்படுத்தினோம்.

2009 ஆம் ஆண்டு மிகமோசமான இறுதிக் கட்டப் போர் இடம்பெற்றது. இதில் இரு தரப்பினருமே குற்றமிழைத்திருந்தனர். இது தொடர்பில் ஐ.நாவும், சர்வதேச மன்னிப்புச் சபையும் பல்வேறு நம்பிக்கையான தகவல்களைத் திரட்டியுள்ளன. ஐ.நாவின் அறிக்கையில் 40 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை

எனவே இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படுவது கட்டாயமாகின்றது. பொதுநலவாய அமைப்பு இலங்கையுடன் பேசிக் கொண்டிருப்பதை விட அங்கு மனித உரிமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்வதேச விசாரணைக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இந்திய அரசு பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்காமல் விடுத்தது வரவேற்கத்தக்கது. இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் இந்திய அரசு காட்டி வருகின்ற முனைப்பு காத்திரமானது. ஆனாலும் அது இன்னமும் மேம்பட வேண்டும்.

இந்திய அரசும், இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் நடந்தவை குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடும் நாடுகளுடன் இணையும் என்று நம்புகின்றோம் - என்றார் செட்டி. (த-5)

## வலி.வடக்கு

சரியான புள்ளி விவரங்களை முதலில் திரட்டுங்கள்.

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை வேறாகவும், அவர்களின் வம்சம் பெருகியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை வேறாகவும் தயாரியுங்கள்.

முகாமில் உள்ளவர்கள், உறவினர், நண்பர்கள் வீடுகளிலுள்ளவர்கள், யாழ்ப்பாணத்துக்கு வெளியே உள்ளவர்கள் என்று தனித்தனியான விவரங்களைத் தயாரியுங்கள்.

மீள்குடியமர்வுக்கு விருப்பமானவர்களின் பெயர் விவரங்களைத்தனியாகவும்திரட்டுங்கள்.

இந்தத் தகவலை எவ்வளவு விரைவாகத் திரட்டித் தருகின்றீர்களோ, அவ்வளவு விரைவாக உங்களை, உங்கள் சொந்த இடங்களிலேயே மீளக் குடியமர்த்த முடியும்.

பலாலி விமான நிலையத்தின் விஸ்தரிப்புக்குச் சுவீகரிக்கப்பட்ட பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளை விடுவிக்க முடியும். பலாலிப் பகுதியில் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முகாமிலுள்ளவர்கள் முதலிலும் பின்னர் உறவினர், நண்பர்கள் வீடுகளிலுள்ளவர்களும் அதன் பின்னர் யாழ்.மாவட்டத்துக்கு வெளியே உள்ளவர்களும் கட்டம் கட்டமாக மீளக்குடியமர்த்தப்படுவர்.

அவர்களின் சொந்த இடங்களிலேயே அவர்கள் மீளக் குடியமரமுடியும். அதுவரை நீங்கள் ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ செய்ய வேண்டாம்.

உங்கள் மீள்குடியமர்வு நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதற்காக ஒரு இராணுவ அதிகாரியை நியமித்துள்ளேன். அவருடன் கலந்துரையாடி நீங்கள் உங்கள் வேலையை முன்னெடுக்க முடியும். நீங்கள் சரியான தகவல்களை எவ்வளவு விரைவாகச் சமர்ப்பிக்கின்றீர்களோ அந்தளவு விரைவாக மீள்குடியமர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்துள்ளார். (த-5)

## வெளிப்

வில் 13 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்காகவும், 16ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 8 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்காகவும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகளில் ஆணைக் குழுவினருடன் இணைந்து எமது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 15 பேர் பணியாற்றவுள்ளனர்.

ஏற்கனவே ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்த மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 262 பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை பதிவு செய்யாதவர்களும் ஆணைக்குழு அமர்வு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் பதிவுகளைச் செய்யமுடியும்.

யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டு,கொழும்பு உள்ளிட்ட வேறு மாவட்டங்களுக்குச் செல்லும்போது காணமற்போனவர்கள் குறித்தும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்- என்றார். (த-5)

## இலங்கை

அரசு, வெளி விவகார அமைச்சர் மூலம் டில்லியில் உள்ள இலங்கைத் தூதுவருக்குக் கட்டளை அனுப்ப வேண்டும். இதன் மூலம் நமது கடுமையான எதிர்ப்பை இலங்கைக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஒரு வாரத்தில் இலங்கைக் கடற்படையினரால் 87 மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதமருக்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழக மீனவர்கள் 57 பேரை இரு வேறு சம்பவங்களில் அவர்களின் 11 படகுகளுடன் இலங்கைக் கடற்படை கைது செய்தது. இது குறித்துத் தங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். மேலும், தனிப்பட்ட முறையில் இதில் தலையீட்டு கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.

கடிதம் எழுதிய மை காய்வதற்குள் இது போன்ற மற்றொரு சம்பவம் நடந்துள்ளது. நேற்று முன்தினம், 30 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி 8 படகுகளுடன் கைது செய்துள்ளனர்.

அப்பாவித் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதில் இருந்தும், தாக்கப்படுவதில் இருந்தும் காக்கும் எண்ணத்தில் அரசு தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவர்கள் இடையே நேரடிப் பேச்சு நடத்த ஏற்பாடு செய்தது.

### மத்திய அரசு தோல்வி

ஆனால் தமிழக மீனவர்களின் உரிமையைக் காப்பதில் மத்திய அரசு கடுமையாகத் தோல்வி அடைந்து விட்டதாலேயே, இலங்கைக் கடற்படையினர் தைரியமாகத் தமிழக மீனவர்களைத் தாக்குகின்றனர் என்பதைப் பல முறை தெரிவித்திருக்கிறேன்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது இரு நாட்டு மீனவர்கள் மட்டத்தில் பேச்சு நடத்தி உருவாக்கப்பட்ட நல்லெண்ணத்துக்கு எதிராக உள்ளது. மீனவர்களிடையே இது போன்ற பதற்றம் தொடர வேண்டும் என்பது இலங்கை அரசு மற்றும் இலங்கைக் கடற்படையின் உண்மையான நோக்கமாக இருக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு, வெளிவிவகார அமைச்சு மூலம் டில்லியில் உள்ள இலங்கைத் தூதுவருக்குக் கட்டளை அனுப்பவேண்டும். இதன் மூலம் நமது கடுமையான எதிர்ப்பை இலங்கைக்குத் தெரிவிக்க வேண்டும்.

### பேச்சு குழம்பும்

உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் இரு நாட்டு மீனவர்கள் தரப்பிலான பேச்சு நடவடிக்கைகள் தடம் புரளும் சூழ்நிலை ஏற்படும். அதனால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் மிக மோசமான நிலைக்குச் சென்று விடும்.

எனவே, கடந்த வாரம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 87 மீனவர்களையும், அவர்களின் 19 மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## வல்வெட்டி

திக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சபையின் வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்ட 5 உறுப்பினர்களால் கடந்த 24 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்தவழக்கில் வடக்கு மாகாண முதலமைச்சர், சட்டமா அதிபர், சபை உறுப்பினர்கள் உட்பட 17 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்கள் தமது மனுவில், சபை நடவடிக்கைகளில் தவிசாளர் உட்பட சபை உறுப்பினர்கள் அனைவரும் பங்குபற்றுவதற்கு உரித்துடையவர்கள். வரவு-செலவுத் திட்டம் பரிசீலிக்கப்படும் போது சகல உறுப்பினர்களினதும் சுயாதீனமானதும் முழு உரிமையுடனுமான பங்குபற்றுதலுடன் வாக்கெடுப்பு இடம் பெறவேண்டும்.

தவிசாளர் இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தைக் கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி சமர்ப்பித்தார். அது 5:2 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. பின்னர் கடந்த டிசம்பர் 27 ஆம் திகதி அதனை வாக்கெடுப்புக்கு விடுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அன்றைய தினம் மனுதாரர்கள் உரிய நேரத்துக்குச் சென்றிருந்தபோதும் சபை அமர்வு இடம்பெறும் பகுதிக்குள் செல்ல அங்கு நின்றிருந்தவர்களால் அனுமதிக்கப்படவில்லை. கூட்டத்தில் பங்குபற்றுவதனையும் திட்டத்தைப் பரிசீலிப்பதனையும் வாக்கெடுப்பில் பங்குபற்றுவதனையும் வாசலில் நின்றிருந்தவர்கள் தடுத்துவிட்டனர். பொலிஸாரின் உதவியைக் கோரியிருந்த நிலையில் பொலிஸார் அங்கு வந்தும் நாம் சபைக்குச் செல்ல முடியவில்லை. பின்னர் சபை அமர்வுக்குள் இருந்து வெளியே வந்த சபைத் தவிசாளர் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்தார்.

சபை அமர்வை இடைநிறுத்துமாறு அல்லது பிற்போடுமாறு நாம் கோரியபோதும் அதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. எனவே எமது கோரிக்கையை மீறிக் கூட்டத்தை ஆரம்பித்தமை, தொடர்ந்து நடத்தியமை, திட்டத்தைப் பரிசீலனைக்கு உட்படுத்தியமை, வாக்கெடுப்புக்கு விட்டமை, தீர்மானம் மேற்கொண்டமை அனைத்தும் சட்டவிரோதமானவையும் தவறானவையும் நியாயமற்றவையும் செல்லுபடியற்றதுமான செயற்பாடுகளுமாகும். எமது அடிப்படை உரிமைகளை மீறும் செயலுமாகும்.

எனவே இவற்றைப் புறந்தள்ளி நீக்குவதற்கான உறுதிகேள் எழுத்தாணை ஒன்றையும் வரவு-செலவுத் திட்டம் சபைக்குச் சட்டப்படி சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அதனைச் சபைக்கு முறையாகச் சமர்ப்பிப்பதற்கு ஒரு பொதுக் கடப்பாடு எனும் அடிப்படையில் அதனை நிறைவேற்றுமாறு சபைத் தவிசாளருக்குப் பணிப்பதான ஏவு எழுத்தாணை ஒன்றையும் திட்டம் தொடர்பாக எந்தவித வருமான அல்லது செலவின அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட வகையில் எந்த நடவடிக்கைகளையும் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்படும் சபையின் உறுப்பினர்கள் தனித்தோ கூட்டுச் சேர்ந்தோ எடுக்கக்கூடாது எனத் தடை செய்வதான ஒரு தடை எழுத்தாணையையும், அவர்கள் நிதியாண்டுக்கான வருமானங்கள், செலவீனங்களைக் கையாளவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது எனத் தடை செய்வதற்கான தடையுத்தரவு ஒன்றையும் வழங்குமாறு கோரியுள்ளனர்.

அதனைப் பரிசீலித்த மன்று தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு முதல் 6 எதிர் மனுதாரர்களுக்கும் அறிவித்தல் அனுப்பியதோடு அது தொடர்பில் எதிர்மனுதாரர்கள் 17 பேருக்கும் வழக்குத் தொடர்பான அறிவித்தலையும் பிறப்பித்துள்ளது. (த-4)

### வீரகத்தி ம.வியின் வீதி ஓட்டம்




கோப்புப்படம்

யாழ்ப்பாணம்,பெப்.6
தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு வருடாந்தம் நடத்தப்படும் வீதி ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
இதில் ஆண், பெண்களுக்கென இரு பிரிவுகளாக இடம்பெற்ற போட்டியில் 100 மாணவ மாணவிகள் பங்கு பற்றினர்.
இந்த வீதியோட்டத்தை வித்தியாலயத்தின் முன்னாள் பிரதி அதிபர் எஸ்.யோகராசா ஆரம்பித்து வைத்தார்.
இந்தப் போட்டியில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீரவீராங்கனைகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.
வித்தியாலய முதல்வர் இரா. ஸ்ரீநடராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபர் கே. இராசதுரை வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார். (த-400-422)

### மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப்.6
இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்திய சாலை வைத்தியர் வைத்திய கலாநிதி வே.கமலநாதன் கலந்து கொள்வார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி சந்திராதேவி கமலநாதன் வழங்கிக் கௌரவிப்பார். (த-400)



அல்வாய் மனோகரா இளைஞர் கழகம்



நெல்லை பிளாசா

# கரவெட்டி பிரதேச எல்லே சம்பியனானது மனோகரா



**ம.நிதர்சன், பா.பிரதீப், ம.மனோஜனன் ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தையும், ச.கதீஸ் 2 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.**

யாழ்ப்பாணம், பெப்.6
கரவெட்டிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் மனோகரா இளைஞர் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.
கடந்த சனிக்கிழமை மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மனோகரா இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெல்லை பிளாஷர் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
முதலில் விளையாடிய நெல்லை பிளாஷர் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 5 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ந.டினாளன் 3 ஓட்டங்களையும், த.தர்ஷிகன், சி.அருண்குமார் ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.
பதிலுக்கு விளையாடிய மனோகரா இளைஞர் விளையாட்டுக் கழக அணி 6 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ம.நிதர்சன், பா.பிரதீப், ம.மனோஜனன் ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தையும், ச.கதீஸ் 2 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். (த-23)




யாழ்ப்பாணம் சென்.சாள்ஸ் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் இடைவேளையின் போது மாணவர்களின் உடற்பயிற்சிக் கண்காட்சி நடைபெற்றது. (த-20-21)

## விண்மீன், திக்கம் அணிகள் வெற்றி



யாழ்ப்பாணம்.பெப்.6
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் விண்மீன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் எந்தவித கோல்களையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 4: 3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## துடுப்பாட்டத்தில் அசத்தியது மகாதேவா பெண்கள் அணி



யாழ்ப்பாணம், பெப்.6
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் மகாதேவா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மகாதேவா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் தயாளினி 15 ஓட்டங்களையும், லோஜி 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் மகாதேவா விளையாட்டுக் கழக அணி சார்பில் டிவேஷா 6 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், கயல் 5 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
34 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாதேவா விளையாட்டுக் கழக அணி 4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் திருக்கேஸ்வரி 10 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.
பந்துவீச்சில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணியின் சார்பில் லோஜி 4 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கை வீழ்த்தினார். (த-23)



நல்லூர் பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டு விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டி கடந்த சனிக்கிழமை கே.எஸி. ஸி.ஸி. விளையாட்டுக் கழக உள்ளக விளையாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (த-23)



இந்திய அணி

# இரண்டாம் இடத்தில் நீடிக்குமா இந்தியா ?

இன்று ஆரம்பமாகும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி சமநிலை செய்தால் மட்டுமே, தரவரிசையில் இரண்டாவது இடத்தில் நீடிக்க முடியும்.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி, 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதன் முதல் டெஸ்ட், ஒக்லாந்தில் இன்று ஆரம்பமாகிறது.

தற்போது 117 புள்ளிகளுடன் தரவரிசையில் இரண்டாவது இடத்திலுள்ள இந்திய அணி, 8 ஆவது இடத்திலுள்ள நியூசிலாந்து அணிக்கு (82) எதிரான, டெஸ்ட் தொடரை 1-0 என, வென்றால் புள்ளிகளில் மாற்றம் இருக்காது.

2-0 என, கைப்பற்றினால் கூடுதலாக ஒரு புள்ளி (118) பெறலாம். சமநிலை (1-1) செய்தால் 114 புள்ளிகள் பெற்று இதே இடத்தில் நீடிக்கலாம்.

மாறாக, டெஸ்ட் தொடரை 1-0 என இழந்தால், 5 புள்ளிகளை இழக்கும் இந்திய அணி, மூன்றாவது இடத்துக்கு (112) தள்ளப்படும். 2-0 எனில், 110 புள்ளிகளுடன், 3ஆவது இடம் தான் கிடைக்கும்.

ஏற்கனவே, ஒருநாள் தொடரை இழந்து, இருந்த முதல்நிலை இடமும், இந்தியாவின் கையை விட்டு நழுவியது. இதனால், இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் தொடரை இந்திய அணி கட்டாயம் சமநிலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

டெஸ்ட் அரங்கில் தற்போது, முதல் மற்றும் மூன்றாவது இடத்தில் தென்னாபிரிக்கா (133), ஆஸ்திரேலிய (113) அணிகள் உள்ளன. (த)

# டெண்டுல்கர் பாதி ஷேவாக் பாதி கலந்து செய்த கலவை கோஹ்லி

சச்சின், ஷேவாக், டிராவிட் ஆகியோர் கலந்த கலவை தான் விராட் கோஹ்லி என நியூசிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் மார்ட்டின் குரோவ் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து நியூசிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் மார்ட்டின் குரோவ் கூறுகையில், இந்திய அணியை மறுகட்டமைப்பதில் கோஹ்லி கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார்.



விராட் கோஹ்லி

உண்மையான அணித் தலைவராக விளங்கும் நோக்கில் அவர் ஆட்ட நுணுக்கங்களை விரைவாகக் கற்றுக் கொள்கிறார். நூற்றுக் கணக்கான விளையாட்டு வீரர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறார். டிராவிட்டை போல தீவிரமாகவும், ஷேவாக்கைப் போல தைரியமாகவும், சச்சினைப் போல் அசாதாரணமாகவும் விளையாடுகிறார்.

அவரது தனித்திறமையே அவரை இந்த அளவுக்கு உயர்த்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அவர் பந்துகளை அடித்து ஆடும் அழகு வியப்பூட்டுவதாக அமைந்துள்ளதாகவும், அவர் ஆட்டத்தின் இயல்பைப் பிடித்துவிட்டால் எப்படிப்பட்ட பந்து வீச்சையும் சிதறடித்து ஓட்டங்களைக் குவிப்பார் என்றும் தெரிவித்துள்ளார். (த)

# கடைசி மூன்று வாரம் மட்டுமே இந்தியாவில் ஐ.பி.எல். போட்டி

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதால், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டுக் கடைசி மூன்று வாரங்கள் மட்டுமே இந்தியாவில், ஐ.பி.எல் போட்டிகளை நடத்த, இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

7ஆவது ஐ.பி.எல் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி ஏப்ரல் மே மாதங்களில் நடக்க இருக்கின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக இந்தப் போட்டி வேறு இடத்துக்கு மாற்றப்படுகிறது. எந்த இடம் என்பது பற்றி முடிவாகவில்லை. இலங்கை பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய 3 நாடுகளில் ஒன்றில் நடத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

ஐ.பி.எல். போட்டிகள் 8 வாரங்கள் நடத்தப்படும். மொத்தம் 59 ஆட்டம் நடை பெறும். நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் மே 10 ஆம் திகதிவரை நடைபெற வாய்ப்பு இருப்பதால் ஐ.பி.எல். போட்டியின் கடைசி 3 வாரத்தை இந்தியாவில் நடத்தலாமா என்பது பற்றிக் கிரிக்கெட் சபை ஆலோசித்து வருகிறது.

அதே நேரத்தில் நாடாளுமன்றத் தேர்தல் திகதி அறிவிப்பதற்கு ஒரு நாள் அல்லது 2 நாள் முன்பு ஐ.பி.எல். போட்டி அட்டவணையை வெளியிடத் திட்டமிட்டு இருப்பதாகக் கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். மேலும் தேர்தல் திகதியை அறிவிக்கும் வரை காத்திருக்க மாட்டோம் என்றும் அந்த நிர்வாகி கூறினார். (த)

# ரைகர் வுட்சுக்கு எத்தனை கோடி?



ரைகர் வுட்ஸ்

டில்லியில் நடந்த கண்காட்சிப் போட்டியில் பங்கேற்ற ரைகர் வுட்சுக்கு ஒருநாளைக்கு மட்டும் எத்தனை கோடிகள் தரப்பட்டன என்பது குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.


கோல்ப் விளையாட்டின் மன்னன் அமெரிக்காவின் ரைகர் வுட்ஸ்(வயது 38). உலக கோல்ப் தொடர்களில் 14 முறை பட்டம் வென்றுள்ளார். உலகில் அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களில் இவருக்குத் தான் முதலிடம். உலகின் முதல்நிலை வீரரும் இவர் தான். சமீபத்தில் டில்லியில் நடந்த கண்காட்சிப் போட்டியில் ரைகர் வுட்ஸ் பங்கேற்றார்.

இதற்காக முதன்முதலாக இந்தியா வந்த வுட்ஸுக்கு, நாள் ஒன்றுக்கு ரூபா 15 கோடி வரை கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

நேற்று முன் தினம் டில்லி கோல்ப் கழகத்தில், தனக்குப் பிடித்த ஸ்டிரைட் ஷொட் அடித்துப் போட்டியைத் தொடக்கினார்.

இவருடன் இந்தியாவின் முன்னணி கோல்ப் வீராங்கனைகளான ஷர்மிளா நிகோலட்,ஷிவ் கபூர்,அனிர்பன் லாகிரி உள்ளிட்டோரும் கோல்ப் விளையாடி மகிழ்ந்தனர்.

இதைச் சுமார் 5.000 பேர் கண்டுகளித்து வுட்சை உற்சாகப்படுத்தினர். இந்தியா வந்து போட்டியில் பங்கேற்றது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றும், இந்த உற்சாகம் எப்படி இருந்தது என விவரிப்பது கடினம் எனவும் வுட்ஸ் தெரிவித்துள்ளார். (த)



அமீர் சோகைல்

## பாகிஸ்தான் கிரிக்கெட் தேர்வு குழு தலைவராக அமீர் சோகைல் நியமனம்

பாகிஸ்தான் கிரிக்கெட் தேர்வுக் குழுத் தலைவராக முன்னாள் அணித் தலைவர் அமீர் சோகைல் நியமிக்கப்பட்டு உள்ளார். அவர் ஏற்கனவே தேர்வுக் குழு தலைவராகப் பணியாற்றி இருக்கிறார். தற்போது மீண்டும் அந்த பதவி கிடைத்துள்ளது. 7 மாதத்துக்கு பிறகு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அந்த பதவிக்குரிய நபரை நியமித்து உள்ளது. கடைசியாக இக்பால் காசிம் தேர்வுத் குழுதலைவராக இருந்தார். (த)

# கிரிக்கெட் போட்டியை அதிகம் நேசிக்கும் இந்திய ரசிகர்கள்

தென்னாபிரிக்க அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஜக் கலிஸ். கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இந்தியாவுக்கு எதிரான தொடருக்குப் பிறகு டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

38 வயதான அவர் 166 டெஸ்டில் விளையாடி 13.289 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரி 55.37 ஆகும். 45 சதமும், 58 அரைச் சதமும் அடித்துள்ளார். அதிகபட்ச ஓட்டம் 229 ஆகும். 38 வயதான கலிஸ் ஒருநாள் போட்டி மற்றும் 20 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளில் விளையாடி வருகிறார். இந்நிலையில் ஊடகம் ஒன்றுக்குக் கலிஸ் கருத்து வெளியிட்டார்.

அவர் அதில் குறிப்பிட்டதாவது:-

டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றதால் நான் தற்போது சுதந்திரமாக இருக்கிறேன். டெஸ்ட் போட்டியில் இருந்து மாறுபட்டது ஒருநாள் போட்டி. இனி ஒருநாள் போட்டியில் எனது திறமையை அதிகரித்து கொள்ள முடியும். எனது கடைசி டெஸ்டில் சதம் அடித்தது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.



ஜக் கலிஸ்

இந்திய மண்ணில் விளையாடுவது எனக்குப் பிடித்த ஒன்றாகும். இந்திய ரசிகர்கள் கிரிக்கெட் விளையாட்டையும்,வீரர்களையும் மிகவும் நேசிக்கிறார்கள். இதனால் தான் இந்திய வீரர்கள் சொந்த மண்ணில் மிகவும் சிறப்பாக விளையாடுகிறார்கள்.

நான் சந்தித்த பந்துவீச்சாளர்களில் வேகப்பந்தில் வாசிம் அக்ரமும், சுழற்பந்தில் ஷேன் வோர்னும் சவாலானவர்கள். இருவரும் தங்களுக்கு ஏற்ற ஆடுகளத்தில் மிகவும் சிறப்பாகப் பந்துவீசக் கூடியவர்கள். சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் என்னையும் சேர்த்து இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது - என்றார். (த)

## இலங்கைக் கிரிக்கெட் எதிர்ப்பு

சர்வதேச கிரிக்கெட் சபையின் நிர்வாக, வருமான அம்சங்களில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள புதிய பிரேரணைக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனமும் அதனோடு இணைந்த நிறுவனங்களும் ஒன்றிணைந்து ஏகமனதாக இந்த எதிர்ப்பை தெரிவிப்பதாக இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலாளர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) நிர்வாக, வருமான அம்சங்களில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் புதிய பிரேரணை உருவாக்கப்பட்டுள்ளது. (த-400)

## மரண அறிவித்தல்



### சின்னப்பு அப்புத்துரை

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன்கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு அப்புத்துரை (03.02.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். என்பதனை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.


அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் சிவகுமார் (சுவிஸ்), அன்புக்கரசி (நோர்வே), சிவந்தன் (லண்டன்), சுரேஷ்குமார், நிரஞ்சனா (ஜேர்மனி), காஞ்சனா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மாவதி, சூரியகுமார், தர்ஷினி, காலஞ்சென்ற லோகரூபி, யோகேஸ்வரன், கலியுகவரதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று வியாழக்கிழமை (06.02.2014) பகல் 1 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்கால் சிவன் கோவிலடி,
இணுவில் கிழக்கு
இணுவில்

தகவல் :
அ. சுரேஷ்குமார் (மகன்)



## முச்சதம் விளாசினார் சங்கக்கார 11,000 ஓட்டங்கள் கடந்தும் சாதனை

இலங்கை பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் நிறைவில் இலங்கை அணி பலமான நிலையில் உள்ளது. ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 587 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. குமார்சங்ககார 319 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டார். இந்த சதத்தின் மூலம் டெஸ்ட் போட்டிகளில் கூடுதலான சதங்களை அடித்தவர்கள் வரிசையில் ஐந்தாம் இடத்திற்கு முன்னோக்கி வந்துள்ளார்.

மஹேல ஜெயவர்த்தன 72 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். மஹேல ஜெயவர்த்தனவும் சதம் அடித்து இருந்தால் இருவரும் ஒரே நேரத்தில் 34 சதங்களைப் பெற்று ஐந்தாமிடத்துக்கு முன்னோக்கி வந்து இருப்பார்கள். இவர்களது இணைப்பாட்டமே இலங்கை அணி பலம் பெற கை கொடுத்தது. நான்காவது இலக்குக்காக 178 ஓட்டங்களை இருவரும் இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர். திமுத்து கருணாரத்ன 31 ஓட்டங்களையும், இவை தவிர தினேஷ் சந்திமால் 27 ஓட்டங்களையும் பெரேரா 47 ஓட்டங்களையும் விதானகே 35ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சகிப் அல் ஹசன் 5இலக்குகளையும், அல் அமின் ஹோசைன் , சொஹாக் கஸி, மஹமதுல்லா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் ஒரு இலக்கை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அவ்வணி சார்பாக ரகுமான் 45 ஓட்டங்களுடனும் இம்குல் கைஷ் 36 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர் பங்களாதேஷின் முதலாவது இலக்கை லக்மல் கைப்பற்றினார்.

இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும். இதே வேளை டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் சங்ககார 11000 ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளார். ஆகக்குறைந்த 208 டெஸ்ட் இன்னிங்ஸ்களில் மாத்திரம் விளையாடி சங்ககார 11000 ஓட்டங்களைகடந்து சாதனை படைத்துள்ளார்.213 இன்னிங்ஸ்களில் 11000 ஓட்டங்களைக் கடந்துபிரைன் லாரா சாதனை படைத்திருந்தார்.இந்நிலையில் குமார் சங்ககார அந்த சாதனையை முறியடித்துள்ளார் அத்துடன் பங்களாதேஷ் அணிக்கு எதிராக தனது முச்சதத்தினையும் சங்கா பதிவு செய்துள்ளார். (த-400)


## VACANCIES

GATEWAY CfICT

We are on the lookout for confident and committed individuals with the necessary qualifications for immediate recruitment

**1. *Computer Lecturers & Instructors (Full Time / Part Time)***

**Work Station : Jaffna & Kilinochi**

*Ideal candidates should be confident and enthusiastic with an internationally recognized IT related Diploma. A Degree/Diploma in Education and/or Professional qualification/s and Previous teaching experience will be an added advantage*

**2. *Computer Hardware Technician***

**Work Station : Jaffna**

*Ideal candidate should have a suitable hardware and networking qualifications and over two years experience in a similar capacity.. Willingness to travel is essential.*

Successful applicants could look forward to a rewarding career with excellent prospects including relevant training. Please send your complete CV to the following address indicating the position applied for, including names and contact details of two non - related referees.

Manager / HR
New Gateway Tech (pvt) Ltd.
347, Kasthuriyar Road, Jaffna

E - Mail : gatewayjfn@sltnet.lk

## நாய்குட்டிகள் தேவை

இரண்டு நல்லின நாய்க்குட்டிகள் வீட்டு வளர்ப்புக்காக தேவை. கறுப்பு,வெள்ளை, மஞ்சள் கலந்த நிறங்கள் கொண்ட நாய்கள் விரும்பத்தக்கது.

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

**077 977 1181**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## ANANDA HOMES AND CONSTRUCTIONS - சாவகச்சேரி

உங்கள் இல்லத்தைத் தரமாக அமைத்துத் தர

1. சாதாரண வீடு 16 லட்சத்திலிருந்து (3அறை, ஹோல், குசினி உட்பட)
2. மாடி வீடு 35 லட்சத்திலிருந்து (4அறை, ஹோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை 2 லட்சத்திலிருந்து
4. சுற்றுமதில் அமைத்தல்
5. கடை, கட்டடத் தொகுதி அமைத்தல்

குறிப்பு: 1. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்
2. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்



அழையுங்கள்: ஆனந்தன் 021 2057705 , 0786155929

HP Authorized Business Partner HP யின் உத்தியோகபூர்வ வியாபார பங்காளர் நளினின்

## NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

NALIN Information Technologies(Pvt)Ltd.

hp Laptop Mega offer யாழ்பாணத்திலும் சுன்னாகத்திலும்

HP Genuine warranty

HP Pavilion 15 i3 3rd gen

64,900/-

500 GB / 4 GB / 15.6 GB
Wifi / BT / Webcam/ Optional Win 8
1 year parts Warranty, 2 years service free

Free
STC HSPA 7.2 Multi Dongle
Head phone
Mouse
HP Original Bag

With Warranty

hp Pavilion15

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it

Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.

4½ டிராக்டர் 19,000/=

தொடர்பு: கண்ணா , 077 759 0792

### பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. திருமணம் மூலம் France செல்பவர்களுக்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது Certificates மட்டுமே Embassy இல் அங்கீகரிக்கப்படுகிறன.

புதிய வகுப்புகள் விரைவில்... 021 2228093

வடமாகாணத்தில் ஒரே முகவரி 61,Kachcheri-Nallur Road,Jaffna

(Kachcheri-Nallur Road உம் Racca Road உம் இணையும் சந்தியில்)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.